


# நான் உன்னை நீங்க மாட்டேன்...

அந்தி மாலைச் சூரியன், தன் சிவந்த கிரணங்களோடு வான்வெளியை தீச் சுடராக்கி விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

தங்கத் தீவுகளாய் மேகங்கள் அங்குமிங்கும் விரவித் தெரிய, உதிர்கின்ற பொழுதாய் மாலை மறைந்து, இரவின் வருகையை எதிர் நோக்கியிருந்த நேரம்!

சுற்றிலும், பச்சைப் பட்டு விரிப்பாய் விரவித் தெரிந்த பசுமையான தேயிலைத் தோட்டத்தின் அழகை ரசித்தபடி, அந்தப் பேருந்திலிருந்து மெதுவாக இறங்கினாள் தூரிகா.

சட்டென்று தாவி அணைத்த ஈரத் தென்றலும், நாசிக்குள் நிறைந்த தைல வாசனையும், மனதைப் பெரிதும் இதமாக்கின.

தன்னுடைய லக்கேஜ்களை அவள் இறக்கும் போதே, ஒரு டாக்ஸி டிரைவர் அவளருகில் வந்து



**உமா பாலகுமார்**

விசாரித்தார்.

"என்னம்மா? எங்கே போக ணும்...? நீங்க தமிழ்தானே? நானும் தமிழ் தான்..." என்றார் புன்னகையுடன்.

மனதிற்குள் புது தெம்பும் தைரியமும் கை கோர்க்க, "சில்வர் ராக் எஸ்டேட் போகணும். இங்கிருந்து ரொம்ப தூரமா?" ஆவலுடன் கேட்டாள் அவள்.

"மலைப் பாதையிலே பத்து கிலோ மீட்டர்

போனா வந்துடும்மா! வாங்க..." என்றபடி லக்கேஜ்களை எடுத்துக் கொண்டார் அவர்.

பிறகு எவ்வளவு பணமென்று பேசி விட்டு காரில் ஏறி பயணித்தபோது தான், மூணாறின் அழகை அவளால் முழுமையாக அனுபவிக்க முடிந்தது.

ஒவ்வொரு வீட்டிலும் மரங்களில் ஏற்றப் பட்டிருந்த மிளகுக் கொடியும், வெற்றிலைக் கொடியும் அழகுக்கு அழகு சேர்க்க, சிறு நீர்வீழ்ச்சியாய் கசிந்து வழிந்த சிற்றருவிகளும் ரம்யமாக இருந்தன.

ஊரைத் தாண்டி தேயிலை தோட்டத்தின் நடுவே கார் சென்றபோது, மனம் உற்சாகத்தையும் பிரமிப்பையும் தத்தெடுத்தது.

சென்னையிலேயே வளர்ந்தவளுக்கு, முதன் முறையாக மலையும் அதன் அற்புத சீதனங்களும் பெரும் நிறைவைத் தர, விழியெடுக்காமல் ரசிக்க ஆரம்பித்தாள் அவள்.

காற்று சுருதி மீட்டி சுரம் சேர்க்க, ஊசியிலைக் காடுகள் 'உஸ்'ஸென்று கீதம் பாடிக் கொண்டிருந்தன.

வெகு தூரம் சென்றபிறகு ஒரு கிளைப் பாதையில் கார் திரும்ப, எதிரே 'சில்வர் ராக் எஸ்டேட்' என்று பளபளத்த பெரிய போர்டு ஒன்று அவர்களை வரவேற்றது.

"இதுதாம்மா நீங்க தேடி வந்திருக்கற எஸ்டேட்.... நீங்க அவங்களுக்கு சொந்தமா?" மெதுவாக விசாரித்தார் டிரைவர்.

உடனே "இல்லைங்க.... நான் இங்கே வேலைக்கு வந்திருக்கேன்" என்று அவள் கூறியபோது, அவர் விழிகள் வியப்பில் விரிந்தன.

பார்க்க மிகவும் அழகாய், கன்னங்களிரண்டும் குழிய, நல்ல உயரத்தில், தந்தச் சிற்பம் போல் ஒரு இளவரசியின் கம்பீரத்துடனிருக்கும் இந்தப் பெண், இங்கு என்ன வேலைக்கு வந்திருப்பாள் என்ற ஆராய்ச்சியும் கேள்வியும், அவர் விழிகளில் தெரிந்தன.

பாதை பெரிதாகிக் கொண்டே செல்ல, ஒரு திருப்பத்தில் எதிரே கம்பீரமாக நின்றிருந்த அந்த வெண்ணிற பங்களாவிற்குச் செல்லும் வழியை ஒரு பெரிய கேட் மூடியிருந்தது.

காவலுக்கு இருந்த வாட்ச்மேனிடம் டிரைவர் இறங்கிச் சென்று விவரம் கூற, அந்தத் தானியங்கிக் கதவு மெதுவாகத் திறந்து அவர்களுக்கு வழிவிட்டது.

இரண்டடுக்கில் கேரள ஓடுகள் வேயப்பட்டு அழகுற அமைக்கப்பட்டிருந்த அந்த பங்களா, பார்த்ததுமே அவள் மனதையும் கருத்தையும் கவர்ந்து கொண்டது.

அவள் இறங்கிக் கொண்டு டாக்ஸியை திருப்பி அனுப்பிவிட்டு நிமிர்ந்த போது, வாசலிலிருந்த ஒரு வேலையாள் அவளை சிறு புன்னகையுடன் வரவேற்றான்.

இங்கு தனக்கு எந்த விதமான வரவேற்பு காத்திருக்கிறதோ என்ற பயமும், சிறு சஞ்சலமும் அவள் மனதிற்குள் மெல்ல எட்டிப் பார்த்தன.

அவள் பெட்டியை எடுத்தபோது, வேகமாக வந்து தடுத்த அந்த வேலையாள் அவளுடைய பொருட்களை தானே எடுத்துக் கொண்டான்.

"வாங்கம்மா... நீங்க நம்ம மஞ்சுவையும் தேவியையும் பாத்துக்க வந்திருக்கற டீச்சரம்மா தானே?" ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம்..." அவள் மெதுவாகப் பதில் கூறினாள்.

"என் பேர் முருகன்மா... பாவம் நீங்க! அந்த வாலுங்களை எப்படித்தான் சமாளிக்கப் போறீங்களோ?" பரிதாபத்துடன் அவளைப் பார்த்தபடி கூறிவிட்டு சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான் அவன்.

"அம்மாகிட்ட நான் இப்படி சொன்னேன்னு சொல்லிடாதீங்கம்மா..." பயத்துடன் அவன் கூற, திக்குத் தெரியாத காட்டில் தவித்து நிற்பதைப் போன்ற ஒரு உணர்வு வந்தது அவளுக்குள்!

* * * * *

**பி**றகு வீட்டிற்குள் சென்றபோது, அழகிய அலங்காரத்துடனிருந்த ஹாலில் போடப் பட்டிருந்த பெரிய சோபாவில் சாய்ந்தபடி, தேநீரை அருந்திக் கொண்டிருந்த அந்த வயதான தம்பதியை சந்தித்தாள் அவள்.

பணக்காரத்தனத்துடன் மிடுக்கும், அலட்சியமுமாக அமர்ந்திருந்த அந்தப் பெண்மணி, அவளைக் கண்டதும் சிறு தலையசைப்பில் வரவேற்றார்.

கம்பீரமாக, ஒரு வித ராஜ களையுடனிருந்த அந்த வயதான மனிதர், அவளை அருகில் வரும்படி அழைத்தார்.

மெல்லிய தயக்கத்துடன் அருகில் சென்றவள், கைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினாள்.

"வாம்மா! ஃபாதர் ஆண்டனி உன்னைப் பத்தி முன்னாடியே சொல்லிட்டாரு... உனக்கும் எல்லாம் சொல்லியிருப்பாரு... உடம்பு சரியில்லாம அட்மிட் ஆகியிருந்தாரேன்னு போன் பண்ணினேன்.... ஹாஸ்பிடல்லேருந்து டிஸ்சார்ஜ் ஆகிட்டதா சொன்னாரு... நீ வருவேன்னும் விவரம் சொன்னாரு...! எங்க கிராண்ட் டாட்டர்ஸ் தேவ மஞ்சரியையும், தேவயானியையும் இனிமே நீ தான் நல்லா கவனிச்சிக்கணும்... அது தான் உன்னோட ட்யூட்டி! அதை நல்லா செய்வேன்னு நான் எதிர்பார்க்கிறேன்!"

கம்பீரத் தொனி கலந்த அதிகாரத் தோரணை

யுடன் வந்தது, அவர் குரல்!

"நிச்சயமா சார்.... ஐ வில் டூ மை பெஸ்ட்!" மரியாதையுடன் அவள் கூறும்போதே, அவர் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

பிறகு வேலையாளிடம் திரும்பி, "இவங்களை நம்ம அவுட் ஹவுசில தங்க வை... இவங்க ரிஃப்ரஷ் பண்ணி தயாரானவுடனே, குழந்தைங்க கிட்டே அழைச்சிட்டுப் போ..." என்று ஆணையிட்டார்.

பவ்யமாகத் தலையசைத்த அந்த வேலையாள், அவளைப் பின்புறமிருந்த அவுட் ஹவுசிற்கு அழைத்துச் சென்றான்.

மிகவும் அழகிய ஒரு காட்டேஜை, அங்கு அவுட் ஹவுசாக அவள் நிச்சயமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

நுழைந்தவுடன் ஒரு வரவேற்பறையும், பெரிய படுக்கை அறையும், அதில் குளியலறையும் இருந்தன.

உள்ளே எல்லா வசதிகளுடனும் அம்சமாக இருந்தது, அந்த அவுட் ஹவுஸ்.

ரூம் ஹீட்டர் ஒருபுறம் வைக்கப்பட்டிருக்க, அந்த இடத்திற்குள் நுழைந்ததுமே, ஒரு விதப் பாதுகாப்புணர்வும், நிம்மதியும் அவளுக்குள் பரவின.

"நீங்க குளிச்சி தயாராவுங்கம்மா... பாத்ரூமிலே ஹீட்டர் போட்டு வச்சிருக்கேன்.... ரெடியான வுடனே முருகான்னு ஒரு குரல் குடுங்க... நான் வந்து உங்களை அந்தக் குட்டிப் பிசாசுங்க கிட்ட அழைச்சிட்டுப் போறேன்..." சலிப்புடன் ஒரு மாதிரிக் குரலில் கூறினான் அவன்.

சட்டென்று திரும்பியவள், "ஒரு நிமிஷம் முருகா! நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லை...? குழந்தைகளை அப்படி எல்லாம் பேசக் கூடாது...." சிறு முறுவலுடன் கூறினாள்.

"அய்யோ... அப்படி இல்லீங்கம்மா! நீங்க வந்து அதுங்களைப் பாருங்களேன்... அதுங்க அடமும் பிடிவாதமும்.... பாத்தப்புறம் நீங்களே சொல்வீங்க!" தர்மசங்கடத்துடன் கூறினான்.

"குழந்தைங்கதானே? அவங்களுக்கு என்ன வயசிருக்கும்?"

ஆவலுடன் கேட்டவளிடம் "அஞ்சு வயசாவுதும்மா..." என்றான் அவன்.

"இன்னொரு பெண்ணுக்கு...?"

"ரெண்டும் ரெட்டைப் பிறவிங்கம்மா!" என்று கூறிவிட்டு அவன் விடைபெற்றுச் செல்ல, அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவளுள் பெரிதாக எழுந்தது.

அவள் குளித்துத் தயாரானவுடனே, பிஸ்கட்டும் டீயும் எடுத்து வந்த முருகன் அவள் சாப்பிட்ட பிறகு அந்தப் பெரிய வீட்டிற்கு அவளை அழைத்துச் சென்றான்.

* * * * *

## 2

ஒரு அறை வாசலில் அவளை நிறுத்தியவன், கதவைத் தட்டி விட்டு ஒதுங்கி ஒரு ஓரமாக நின்று கொண்டான்.

சட்டென்று கதவு திறக்கப் பட்டு வேகமாக ஒரு தலையணை பறந்து வந்து வாசலுக்கு நேராக நின்றிருந்த தூரிகாவின் மேல் விழ, லாவகமாக அதைக் கையில் பிடித்துக் கொண்டாள் அவள்.

உடனே அவள் உள்ளே நுழைந்தபோது, அங்கு இரு சிறுமிகள் கண்களில் சிறு மிரட்சியுடனும், கோபத்துடனும் நின்றிருந்தனர்.

"ஹாய் குட்டீஸ்... எப்படி இருக்கீங்க! என்ன.... நான் 'டோனி' மாதிரி நல்லா கேட்ச் பிடிச்சேனா...?" விழிகளை விரித்து ஆர்வத்துடன் கேட்டாள்.

அவள் திட்டப் போகிறாள் என்று எதிர்பார்த்து ஒரு வித எச்சரிக்கை உணர்வுடன் நின்றிருந்த இரு பெண்களின் முகமும், சட்டென்று குழம்பி பின் இயல்பானது.

"ம்.... உங்களுக்கு எங்க மேல கோபமில்லையா?" மெதுவாகக் கேட்டபடி அவளருகில் வந்தாள் ஒரு பெண்.

இருவரும் 'ஐடெண்டிகல் ட்வின்ஸ்' போல் இல்லாமல், வேறு வேறு ஜாடையில் இருந்தனர்.

"இல்லையே... எதுக்கு கோபப்படணும்... நானும் உங்க ஃப்ரெண்ட்தானே... அதனால தானே என் கூட உங்களுக்கு விளையாடணும்னு தோன்றியிருக்கு! ஓகே...! இனிமே நாம ஃப்ரெண்ட்ஸ்...." என்றபடி உற்சாகத்துடன் தன் கையை நீட்டினாள்.

தயக்கத்துடன் அதில் தன் பிஞ்சு விரல்களைப் பதித்தாள், அந்தச் சிறுமி.

"உன் பேரென்னம்மா?" முழந்தாளிட்டு சரிந்து அவள் உயரத்துக்கு அமர்ந்தபடி கேட்டாள் தூரிகா.

"மஞ்சு... அவ தேவி..." தயக்கத்துடன் கூறிய படி, கண்ணாலேயே சைகை செய்து தேவியையும் அருகில் அழைத்தாள்.

"நீயும் வாம்மா! என்னைப் பாத்து பயப்பட வேண்டாம்....! நான் உங்களுக்கு ஒரு நல்ல ஃப்ரெண்ட்.... ஓகே!.... இனிமே உங்களுக்கு என்ன வேணுமோ அதை என் கிட்டே தைரியமா கேக்கலாம்...!"

பயத்துடன் அருகில் வந்த தேவியையும் மஞ்சுவையும், அன்புடன் அணைத்துக் கொண்டாள் அவள்.

இரண்டும், தாயின் சிறகுகளுக்குள் ஒளிந்து கொள்ளும் சிறு சிட்டுகளாய் அவளிடம் ஒன்றின.

"சரிம்மா... அப்ப நான் வரேன்" வியப்புடன் குழந்தைகளையே திரும்பித் திரும்பி பார்த்தபடி

வெளியேறினான் முருகன்.

பிறகு, இரு பிள்ளைகளையும் அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்து விட்டு, அறையை சுற்றிப் பார்த்தாள் அவள்.

அங்கு, புத்தகங்களும் துணிகளும் அலங்கோலமாக அறையெங்கும் இறைந்து கிடந்தன.

மெதுவாகச் சென்று ஒவ்வொன்றாக எடுத்து அவள் அடுக்க ஆரம்பித்தபோது, குற்றவுணர்வுடன் அருகில் வந்த இருவரும் அவளுக்கு மௌனமாக உதவ ஆரம்பித்தனர்.

இருவரின் தலையையும் செல்லமாகக் கோதியவள், "பரவாயில்லை... இன்னிக்கு நானே எல்லாத்தையும் எடுத்து வைச்சிடறேன்... நாளையிலருந்து நீங்களே ரூமை நீட்டா வச்சிக்கணும்... சரியா?" மென் குரலில் கேட்டாள்.

சரியென்று தலையசைத்தபடி, இருவரும் அவளுக்கு உதவி செய்தனர்.

மூவருமாகச் சேர்ந்து எல்லாவற்றையும் அடுக்கிக் கொண்டிருந்தபோது, திடீரென்று அறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

"தேவி... மஞ்சு..! படிக்காம ரெண்டு பேரும் என்ன பண்ணிட்டிருக்கீங்க...? ஏய்... யார் நீ? சும்மாவே இவங்க நல்லாப் படிப்பாங்க... அவங்களைப் படிக்க விடாம ஏன் டிஸ்டர்ப் பண்றே? யார் உன்னை உள்ளே விட்டது?"

படபடவெனப் பொரிந்தான், அறை வாசலில் நின்றிருந்த அந்த உயர்ந்த மனிதன்.

சட்டென்று சர்வ நாடியும் ஒடுங்கி, இருவரும் அவளுக்குப் பின்னால் ஒளிந்தனர்.

அவனுடைய காரணமில்லாத கோபமும், குழந்தைகளின் பயமும் அவளுக்குள் கோபத்தை விதைக்க, வேகமாக நிமிர்ந்தாள் அவள்.

''மிஸ்டர்! நீங்க யாரு... அதை முதல்லே சொல்லுங்க... சின்ன குழந்தைங்களை இப்படித் தான் மிரட்டறதா? அவங்க மனசு பூ மாதிரி!... கொஞ்சம் கோபமாய் பேசினாக் கூட வாடிப் போயிடும்... இது கூடத் தெரியலை...'' சுள்ளென்று கூறினாள்.

"ஏய்... என் வீட்டிலேயே என்னை யாருன்னு கேக்கறியா? மை குட்னெஸ்!.... இந்தக் கோபம், நக்கல் இதெல்லாம் என் கிட்ட வேண்டாம்... புரியுதா? கொஞ்சம் அழகா இருந்தாலே உங்களுக்கெல்லாம் திமிர் வந்திடுமே.... முதல்லே நீ யாருன்னு சொல்லு...!'' இறுகிய குரலில் கேட்டான்.

அப்போதுதான், தன் தவறு புரிந்தது அவளுக்கு!

''சாரி சார்! நான் இவங்களை பாத்துக்க வந்திருக்கிற 'கவர்னஸ்' தூரிகா! நீங்க யாருன்னு தெரியாம பேசிட்டேன்...'' உதட்டைக் கடித்தபடிக் கூறினாள்.



''ஹூம்.... ஃபாதர் அனுப்பிய ஆளா? ஆசிரமத்துல வளர்ந்தவங்கல்லாம் ரொம்ப மரியாதையா இருப்பாங்கன்னு நினைச்சேன்... ப்ச்... எதுக்குமே விதிவிலக்கு இருக்கே! நீ யாருங்கறதை மறந்துட வேணாம்... உன் தகுதிக்கு தகுந்தாப்பல நடந்துக்கணும்...!" கடும் குரலில் எச்சரித்து விட்டு, கதவை அழுந்த சாத்திவிட்டு வெளியேறினான் அவன்.

சட்டென்று தொய்ந்துபோய் அமர்ந்தவளின் இரு தோளிலும், ஆதரவாக சாய்ந்து கொண்டனர், தேவியும் மஞ்சுவும்.

"உங்களுக்கும் எங்க சித்தப்பாவைப் பாத்தா பயமா இருக்கில்லே... எங்களுக்கும் தான்... ரொம்ப பயம்!'' விழிகளை மிரட்சியுடன் விரித்தபடி இருவரும் கூறினர்.

"அவர் உங்க சித்தப்பாவா...? அப்போ உங்க அப்பா எங்கே?'' அதிர்ச்சி விலகாத குரலில் கேட்டாள் அவள்.

"எங்கப்பா எப்பவுமே அவங்க ரூமிலேதான் இருப்பாங்க... எங்களோடப் பேசவே மாட்டாங்க... பாட்டியும் திட்டிட்டே இருப்பாங்க... தாத்தாதான் எப்பவாவது பேசுவாங்க"

கலங்கிய விழிகளுடன் கூறிய மஞ்சுவை அணைத்துக் கொண்டவளுக்கு, அந்த உயர்ந்த மனிதன் மீது காரணமில்லாமலே கோபம் வந்தது.

# சாதனைப் பெண்

பெண்கள் பலவீனமானவர்கள் என்று கருதப்படுவது உண்டு. ஆனால் பெண்கள் பலகீனமானவர்கள் அல்ல. ஆண்களுக்கு சமமானவர்கள் என்று நிரூபித்து காட்டி சாதனை புரியும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மேல்நாட்டைச் சேர்ந்த பவுலா ஜோன் என்ற பெண் 150 அடி உயரத்தில் ஓடிக் கொண்டிருந்த கேபிள்காரில் இருந்து குதித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

"எந்த ஆண்மகனாவது இந்த சாதனையைச் செய்யத் தயாரா?" என்று இப்போது பவுலா ஜோன் சவாலும் விட்டிருக்கிறார்.

- சாமி.

என்ன மனிதன் இவன்... சிறு குழந்தைகளிடம் ஒரு அசுரனைப் போல் நடந்து கொள்பவன் என்ற வெறுப்பும், விரக்தியும் மனதில் கை கோர்த்தன.

இந்த சிறு பிஞ்சுகளை கவனிக்காமல், பெற்ற தந்தை அப்படி என்னதான் செய்கிறானென்ற தவிப்பும் கூடவே எழுந்தது.

ஏதோ நினைவில் மனம் இறுகிவிட, அவர்களிருவரையும் இனி எதற்காகவும் கலங்க விடக் கூடாதென்ற உறுதி வந்தது.

தன் மனதின் சஞ்சலங்களை மறைத்து, சிறு புன்னகையுடன் திரும்பினாள்.

"இனிமே நீங்க ரெண்டு பேரும் எதுக்கும் கவலைப்பட வேண்டாம்... உங்க கூட நான் இருப்பேன்... என்ன வேணும்னாலும் என்னைக் கேக்கலாம்... ஓகே!" பெரும் வாஞ்சையுடன் கூறினாள்.

இரு பிள்ளைகளும் சட்டென்று தலையாட்டி விட்டு, அவள் கன்னத்தில் 'பச்' என்று முத்தமிட்டபடி கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டனர்.

அவர்களைச் சுற்றி உறவுகளின் அன்பும் அரவணைப்பும் இல்லை... உற்சாகமும் இல்லை... ஒரு விதத் தனிமை வலை மட்டுமே பின்னப் பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள் தூரிகா!

பிறகு மூன்று பேருமாகச் சேர்ந்து அறையை சுத்தம் செய்து முடித்தனர்.

* * * * *

இரவு, அவர்களை சாப்பிட அழைத்துச் சென்றாள் தூரிகா.

அவர்கள் டைனிங் ஹாலுக்குள் நுழைந்த போது, அவர்களுடைய பாட்டி அகிலாண்டேஸ்வரி அம்மாள் மட்டுமே அங்கிருந்தார்.

"என்ன... ரெண்டும் சாப்பிட வந்துடுச்சுங்களா? ம்.... தோ பாரு... உன் பேரென்ன?" என்றார் உயர்த்திய குரலில்.

"என் பேரு தூரிகாம்மா..."

அவள் கூறியவுடனே, "இந்த அம்மா அது இதெல்லாம் வேண்டாம்... மேடம்னே கூப்பிடு...! இந்தப் பசங்களுக்கு அவங்க ரூமிலேயே எப்பவும் போல சாப்பிடக் குடுத்துடு... இங்கே வேண்டாம்! நீட்டா சாப்பிடத் தெரியாது....!" அதிகாரக் குரலில் ஆணையிட்டார்.

"மேடம்! அவங்களை டேபிள்லே சாப்பிட வச்சுப் பழக்கலாம்னு நினைச்சேன்... அதுல உங்களுக்கு..."

அவள் முடிக்கும் முன்பே, பின்புறமிருந்து அந்த குரல் கேட்டது.

"ஏன் அகிலம்! மஞ்சுவும் தேவியும் டேபிள் மேனர்ஸை எப்ப தான் பழகறது... அவங்களும் நம்மோடயே சாப்பிடட்டுமே" அவர்களின் தாத்தா கிருபாகரன்தான் கூறினார்.

யோசனையுடன் சரியென்று தலையசைத்தார் அகிலம்.

பிறகு பயத்துடன் நின்றிருந்த இருவரையும் அமர வைத்தவள், நேப்கின்னை எடுத்து மடியில் விரித்து வைத்தாள்.

பிறகு, ஸ்பூன், ஃபோர்க் இரண்டையும் கொடுத்தவள், அதை உபயோகிக்கும் முறை பற்றி, மென் தொனியில் கற்றுக் கொடுத்தாள்.

பிள்ளைகள் அமைதியாக சாப்பிட்டு முடிக்க, அவர்கள் கை கழுவி விட்டு வெளியேறும்போது உள்ளே வந்தான்... அன்று மாலையில் சந்தித்த அந்த உயர்ந்த மனிதன்!

அவர்களிருவரையும் ஏளனம் கலந்த முறுவலுடன் ஏறிட்டவன், ஒற்றைப் புருவம் உயர்த்தி தோளைக் குலுக்கியபடி, சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தான்.

அவர்களுடைய அறைக்குச் சென்றவுடன், "தேவி! உங்க சித்தப்பா பேரென்ன... ஹிட்லரா?" சிறு குறும்புடன் கேட்டாள் தூரிகா.

"அப்படின்னா யாரு டீச்சர்? சாரி.... நாங்க உங்களை எப்படிக் கூப்பிடறது...?" உதட்டைக் கடித்தபடிக் கேட்டாள் அவள்.

"ம்... அக்கான்னு கூப்பிடுங்க... இல்லைன்னா ஆன்ட்டி... உங்களுக்கு எது பிடிச்சிருக்கு?"

"எனக்கு.... ஏனோ உங்களை மம்மின்னு கூப்பிடத்தான் பிடிச்சிருக்கு!" சட்டென்று கூறினாள் தேவி.

மறு நிமிடமே தூரிகாவின் மனம் அதிர்ந்தாலும், உடனே நெகிழ்ந்து போனது.

"சரி... கூப்பிடுங்க" இயல்பான புன்னகையுடன் கூறியவளை, இரு குழந்தைகளும் அணைத்துக் கொண்டன.

பிறகு இருவரையும் அழைத்துச் சென்று பாலைப் பருகச் செய்து, உறங்க வைக்க 'பெட் டைம் ஸ்டோரீஸ்' சொல்ல ஆரம்பித்தாள். அவள் மகாபாரதத்திலிருந்து தனக்குப் பிடித்த கதாபாத்திரமான பீஷ்மரின் கதையைக் கூறினாள்.

அதைக்கேட்டபடி, "நீங்களும் எங்க கூடவே படுத்துக்கறீங்களா மம்மி?" மஞ்சு ஆர்வத்துடன் கேட்டாள்.

"இல்லைம்மா... எனக்கு அவுட் ஹவுஸ் இருக்கு, தங்கறதுக்கு! உங்களைத் தூங்க வச்சிட்டு நான் அங்கே போயிடுவேன்... தூங்கி முழிச்சி பாருங்க... காலையில நான் உங்க முன்னாடி இருப்பேன்... ஓகேயா!" பரிவுடன் கேட்டாள்.

பிறகு, கதை கேட்டபடியே அவர்கள் தூங்க ஆரம்பிக்க, சப்தமில்லாமல் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு சென்ற அகிலத்தின் முகத்தில், பெரும் வியப்பு!

தன் கணவரிடம் சென்று அவர் தான் கண்ட காட்சியைக் கூற,

"ஃபாதர் செலக்ஷன் தப்பாப் போகுமா? ஆனா இந்தப் பொண்ணாவது வேலையில நிலைக்கணும்" என்றபடி பெருமூச்சு விட்டார் கிருபாகரன்.

* * * * *

## 3

அன்றிரவு உறங்கச் சென்ற தூரிகாவிற்கோ, அந்த உயர்ந்த மனிதனின் கோபமும் அலட்சியமுமே, நெருடலாய் நினைவில் மையம் கொண்டிருந்தன.

அவனுடைய பெயர் என்னவாக இருக்கும் என்று யோசித்தபடியே உறங்கிப் போனாள் அவள்.

விடிவதற்குள்ளேயே விழிப்பு வந்துவிட, எழுந்தவள் குளித்து விட்டு யோகா செய்யும் போதே கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

திறந்து பார்த்தால், முருகனுடன் மஞ்சு நின்றிருந்தாள்.

"டீச்சரம்மா.... எழுந்ததிலேருந்து உங்களைப் பாக்கணும்னு மஞ்சுப் பொண்ணு ஒரே அடம்! அதான் அழைச்சிட்டு வந்தேன்... இன்னும் வீட்டிலே யாருமே எழுந்திரிக்கலை..." அலுப்புடன் கூறினான்.

"குட் மார்னிங் மம்மி..." என்றபடி அவளைக் குனியச் சொல்லி, கன்னத்தில் முத்தமிட்டாள் மஞ்சு.

"குட்மார்னிங் மஞ்சு! ராத்திரி நல்லாத் தூங்கினீங்களா?" கேட்டபடி நிமிர்ந்தபோது, தோட்டத்தில் மெல்ல மிதந்து கொண்டிருந்த பனிச் சாரலின் நடுவே, ஜாகிங் சூட் அணிந்து, தார்ப் பாதையில் ஜாகிங் வந்து கொண்டிருந்தான் மஞ்சுவின் சித்தப்பா!

அவளை அங்கு கண்டதும், "மஞ்சு... இந்த நேரத்துல நீ இங்கே என்ன பண்றே? முருகா... ஏன் இவளை பனியில வெளியில அழைச்சிட்டு வர்றே... உள்ளே கூப்பிட்டுட்டுப் போ!" அடிக்குரலில் சீறினான்.

"சரீங்கய்யா" என்றபடி அவன் பணிவுடன் திரும்ப, ஒரு செல்ல நாய்க்குட்டியைப் போல் அவனுக்கு பயந்து பணிவுடன் முருகனைத் தொடர்ந்தாள் மஞ்சு.

அவள் சென்றவுடன், சீற்றத்துடன் அவனிடம் திரும்பினாள் தூரிகா.

"சார்! ஒரு நிமிஷம்! அது சின்னக் குழந்தை! பாத்தவுடனே ஆசையா தூக்கிக் கொஞ்சி குட்மார்னிங் சொல்லலைன்னாலும் பரவாயில்லை... இப்படியா? ஹாஸ்டல் வார்டன் மாதிரி விரட்டறது? குழந்தைங்க கடவுள் நமக்கு கொடுத்த வரம் மாதிரி... அதப் புரிஞ்சுக்கங்க...." சட்டென்று கூறிவிட்டாள்.

வேகமாக நிமிர்ந்தவனின் விழிகள், சீற்றத்துடன் பளபளத்தன.

"ஏய்.... மைண்ட் யுவர் வேர்ட்ஸ்! யார்கிட்ட பேசறேன்னு தெரியுமா உனக்கு? எனக்கு பாடம் நடத்த உன்னை இங்கே அழைச்சிட்டு வரலை! நானும் வந்ததிலேருந்து பாக்கறேன்.... ரொம்பத் திமிராப் பேசறே! நீ இந்த வீட்டுக்கு குழந்தைகளைப் பாத்துக்க வந்திருக்கற ஒரு கவர்னஸ்....! அது நினைவிருக்கட்டும்... உன் தகுதியை மறந்துட வேண்டாம்..."

அழுத்தமான அடிக் குரலில் கூறிவிட்டு அவன் சென்றபோது, கோபத்தில் தீக்கங்குகளாய் பளபளத்த அவன் விழிகளும், வார்த்தைகளும், இதயக் கூட்டிற்குள் ஒரு விதக் குளிரைப் பரவச் செய்தன.

இதுவரை யாருமே கடுமையாகப் பேசி பழக்கமில்லாததால், மனதின் மூலையில் சிறுவலி எழுந்தது.

தலையைக் குலுக்கியபடி அவுட் ஹவுஸைப் பூட்டிவிட்டு பெரிய வீட்டிற்குச் சென்றபோது, தேவியும் மஞ்சுவும் அவளுக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

குழந்தைகளின் அன்பிற்கு எல்லா காயங்களையும் ஆற்றக் கூடிய சக்தி இருப்பதை, அவள் அன்று தான் புரிந்து கொண்டாள்.

அவர்களைத் தயார் செய்து சாப்பாடு கொடுத்து ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றிவிட்டுத் திரும்பி வரும்போதுதான், அவர்களுடைய தந்தையை

சந்தித்தாள் அவள்.

தோட்டத்திலிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து சோர்ந்த விழிகளுடன் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

பார்த்தவுடனே அவனிடம் தேவியின் சாயல் இருப்பது புலப்பட, முருகனிடம் விசாரித்தாள் அவள்.

"ஆமாம்மா! அவர்தான் பெரியவர் தயாகரன்... காலையில நீங்க பாத்தது சின்னவரு வசீகரன்! அவர்தான் இங்க எல்லாமே! பொண்டாட்டி போனப்புறம், பெரியவரு எங்கேயுமே வெளியவே வரதில்லை... அந்த ரூம்தான் அவரோட உலகமே... எப்பவாவது இது மாதிரி வெளியே வருவாரு... அவ்வளவு தான்!" கவலையுடன் கூறினான்.

அதற்கு மேல் அந்த வீட்டினரைப் பற்றி ஒரு வேலையாளிடம் விசாரிப்பது தவறு என்று தோன்ற, யோசனையுடன் உள்ளே சென்றாள் தூரிகா.

*****

**அ**ன்றிலிருந்து, வாழ்க்கை இயல்பாய் அந்தக் குழந்தைகளுடன் பொருந்திக் கொண்டது.

தினமும் அதிகாலையில் எழுந்து வாக்கிங் செல்வது பழக்கமென்பதால், ஐந்து மணிக்கே வாக்கிங் செல்ல ஆரம்பித்தாள் தூரிகா.

ஆறு மணிக்கு வசீகரன் ஜாகிங் செல்வதை பார்த்திருந்ததால், அதற்குள் தன் நடையை முடித்துவிட்டு அவுட் ஹவுஸிற்கு வந்து விடுவாள்.

தோட்டத்தில் முகம் மலர்த்தி சிரிக்கும் டேலியா, பான்சி, வெர்பினா, கஸானியா, ஷெர்லிபாப்பி, ஐரிஸ், சைனா ஆஸ்டர் மலர்கள் மனதை நிறைக்கும். பிறகு, யோகா செய்து முடித்துவிட்டு தயாராகி பெரிய வீட்டிற்குச் செல்வது தினமும் வழக்கமாயிற்று!

அங்கு, பிள்ளைகளுடன் நேரம் விரைந்து சென்று விடும்.

அவர்களை தயார் செய்து பள்ளிக்கு அனுப்பிய பிறகுதான், தனிமை அவளை வெகுவாய் ஆக்கிரமிக்கும்.

அந்தப் பொழுதுகளில் தேவி, மஞ்சுவின் துணிகளை, புத்தகங்களை அடுக்கி வைப்பதும், அறையை சுத்தம் செய்வதிலும் பொழுதைப் போக்குவாள் அவள்.

பிறகு தன் அறைக்கு வந்து குரோஷா பின்னல் வேலையில் ஆழ்ந்து விடுவாள். இல்லையென்றால் புத்தகங்களைப் படித்தபடி குழந்தைகளின் வரவை எதிர் நோக்கியிருப்பாள்.

மதியம் சாப்பாடு கொடுத்துவிட்டு வந்து ஓய்வெடுத்து தயாராகி மூன்றரை மணிக்கு வெளி கேட்டருகே காத்திருப்பாள்.

இருவரும் வந்தவுடன், அன்று பள்ளியில் நடந்த கதைகளை மாறி மாறிக் கூற ஆவலாகக் கேட்பாள்.

அவர்களுக்கு உடைமாற்றி சாப்பிட செய்து, ஹோம் ஒர்க் செய்ய வைத்து பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, நேரம் றெக்கை கட்டிப் பறந்து விடும்.

பிறகு இரவு சாப்பாடு முடிந்து பால் கொடுத்து, ஏதாவது கதைகள் கூறி அவர்களை உறங்க வைத்த பிறகே, தன் அறைக்கு வருவாள்.

இரு குழந்தைகளுமே, பாசத்தையும் அன்பையும் அளிக்க ஆளின்றி தனித்திருந்ததால், அவளுடன் பிரியமாய் ஒட்டிக் கொண்டன.

சில்வர் ராக் எஸ்டேட்டுக்கு வந்து ஐந்து நாட்கள்தான் ஆகிறதென்று அவளால் நம்பவே முடியாத அளவுக்கு, மூவரும் இனம் புரியாத பாச உணர்வில் கட்டுண்டு போயினர்.

அழகான உறவுச் சொல்லாய்... அர்த்தம் செறிந்த பாச உச்சரிப்பாய்... 'மம்மி' என்று அழைத்தபடி, குழந்தைகள் அவளைச் சுற்றி சுற்றி வருவது, அவளை நெகிழச் செய்தது.

*****

**அ**ன்று சனிக்கிழமை! பள்ளி விடுமுறை என்பதால் ஹோம் ஒர்க் முடித்த பிறகு, அவர்களுடன் அமர்ந்து செஸ் விளையாட கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் தூரிகா.

எதேச்சையாக ஜன்னல் வழியே பார்வையைத் திருப்பியபோது, அவர்களுடைய தந்தை தயாகரன் எங்கோ செல்வது தெரிந்தது.

மனதில் ஒரு யோசனையுடன், "தேவி, மஞ்சு... நான் கத்துக் குடுத்த மாதிரி ரெண்டு பேரும் விளையாடிட்டிருங்க... நான் பத்து நிமிஷத்துல வரேன்!" என்று கூறிவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

அவன் சிறிது தூரத்தில் மெதுவாக நடந்து சென்று கொண்டிருந்தான். ஒரு வேக நடையுடன் அவனை அணுகியவள், "சார்.... ஒரு நிமிஷம்! நான் உங்களோடக் கொஞ்சம் பேசலாமா?" மெதுவாகக் கேட்டாள்.

பல நாட்களாக சவரம் செய்யப்படாத முகத்தில் தாடியுடனும், தன் அம்மாவின் மறுபதிப்பான உருவத்துடனுமிருந்த அவன் விழிகளில், வியப்பின் சாயல்!

ஒரு கணம் அவளையே கூர்ந்தவன், "நீங்க...? ஓ.... முருகன் சொன்ன அந்தப் பொண்ணு நீங்கதானா?" சிறு ஆர்வத்துடன் கேட்டான்.

"ம்... முருகன் என்ன சார் சொன்னார்? அது தெரிஞ்சாதானே, நான் தான் அந்தப் பொண்ணான்னு சொல்ல முடியும்?"

ஏதோ நினைவில் தனக்குள்ளேயே புன்னகைத்தவன், "ம்... தேவி, மஞ்சுவை பாத்துக்க

வந்திருக்கற புது டீச்சர் ரொம்ப நல்லவங்கன்னு சொன்னான்.... பசங்க ரெண்டும் எப்பவுமே ரொம்ப அடம்... காலையில ஸ்கூலுக்குப் போகறதுக்குள்ளே, வீட்டில பெரிய ரகளையே நடக்கும்... ஒரே அழுகை, பிடிவாதம்... அப்புறம் வசீ சத்தம் போட்டாதான் அடங்குவாங்க... எத்தனையோ ஆள் வச்சுப் பாத்தாச்சு! ரெண்டும் அடங்கறதே இல்லை... இப்ப ஒரு வாரமா தான் வீடு அமைதியா இருக்கு... அதான் முருகன் கிட்ட விசாரிச்சேன்... அவன் தான் சொன்னான் உங்களைப் பத்தி!" விட்டேத்தியாகக் கூறினான்.

என்ன மனிதன் இவன்! குழந்தைகளின் மேல் கொஞ்சமும் அக்கறையில்லாதவன் என்ற ஆயாசம் மனதில் சூழ்ந்தது.

"நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே? நீங்க கொஞ்சம் அன்பும் அக்கறையுமா இருந்திருந்தா, அவங்க ரெண்டு பேரும் இப்படி இருந்திருக்க மாட்டாங்க சார்... அன்புங்கிறது பெரிய மாய வலை மாதிரி... அதிலே மத்தவங்களை சுலபமா சிக்க வச்சிடலாம்... அவங்களை மென்மையாகவும் மாத்திடலாம்... அத நீங்க யாருமே செய்யலை... எங்கிருந்தோ வந்த நான் செஞ்சதாலே, அவங்க மாறி இருக்காங்க..."

சட்டென்று அவளை இடைமறித்தான் அவன்.

"ப்ச்... அதுக்கெல்லாம் இங்கே யாருக்கும் டைம் கிடையாது... நீ தான் பாத்துக்கணும்... எனிவே தேங்க்ஸ்" பட்டும் படாத குரலில் கூறிவிட்டு வேகமாக விலகிச் சென்றான்.

பொறுப்புகளை சுமக்க பயந்து விலகி ஓடும் கோழைத்தனம் அவனிடம் தெரிய, ஒரு நீண்ட பெருமூச்சொன்று அவளிடம் கசிந்தது.

* * * * *

## 4

**தி**யாகரனைப் பின் தொடர்ந்து செல்ல மனமின்றி, யோசனையுடன் திரும்பி வந்தாள் தூரிகா.

உறுதியான காலடிச் சப்தம் அவளைத் தொடர்வது கேட்டு, விதிர்த்துப் போய் திரும்பினாள்.

அங்கு, எஃகிரும்பாய் இறுகிய முகத்துடன் வசீகரன் வந்து கொண்டிருந்தான்.

அவள் பார்வையை உணர்ந்ததும், ஒரு கையசைப்பில் அவளை நிறுத்தினான்.

அருகில் வந்ததும், "என்ன? தயா எப்போ வெளியே போவான்னு பாத்துட்டிருந்து பின் தொடர்ந்து வந்தியா? பெரிய பணக்காரனாச்சே... வளைச்சிப் போட்டுடலாம்னு எண்ணம் இருந்தா மாத்திக்க! அவன் ஏற்கனவே மனைவியாலே சூடு பட்டவன்... அவனை அவ்வளவு சீக்கிரமா வளைச்சிப் போட முடியாது...! அவனை மயக்கி இந்த வீட்டுக்கு எஜமானியாயிடலாம்னு தப்புக் கணக்கு போடாதே..."

ஏளனமாய் வளைந்த உதடுகளுடன், பார்வை குத்தீட்டியாய் அவளை உரசக் கூறினான்.

மறுநொடியே மனதிற்குள் இனம் புரியாத ஒரு வலி எழ, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தாள் அவள்.

பிறகு "ரொம்ப அழகா மத்தவங்களை எடை போடறீங்க சார்... ஆனா நீங்க நினைக்கற மாதிரிப் பொண்ணு நான் இல்லை... பணம்தான் வாழ்க்கையில் முக்கியம்கிறது உங்க ஒபீனியனா இருக்கலாம்... ப்ச்! நூறு பணக்காரர்களைக் கேளுங்க... இன்னிக்கு நிம்மதியாத் தூங்கினீங்களான்னு... இல்லைன்னு தான் பதில் வரும்...! அதுவே ஒரு ஏழை கிட்டக் கேளுங்க... உடனே பாசிடிவ்வான பதில் கிடைக்கும்... ஹூ-ம்... உங்க பணத்தால சாதாரணத் தூக்கத்தையே விலை கொடுத்து வாங்க முடியலை! என்னைப் பொருத்தவரைக்கும் பணம் எனக்குப் பெரிசில்லை! உங்களுக்கு வேணும்னா, அதுதான் உலகமா இருக்கலாம்...!" சுள்ளென்று கூறினாள்.

"ப்ச்! ஆரம்பத்துல இப்படிதான் சொல்வீங்க... இதுவரைக்கும் வந்த டீச்சரெல்லாம் அப்படித் தான்... பசங்களை கவனிச்சாங்களோ இல்லையோ... தயாகிட்டே ஒரே உருகல் நாடகம் போட்டாங்க... தனியா எப்படி சார் இருப்பீங்க... ஒரு கல்யாணம் செஞ்சுக்கங்க... அது இதுன்னு! அவன் கொஞ்சம் சாஃப்ட் ஹார்ட்டட்... என்னை மாதிரி இல்லை..."

சுழித்த உதடுகளுடன் நக்கலாக வந்தது, அவன் குரல்.

## காற்றாடியல்ல பட்டாம்பூச்சி!

**ஆ**ந்திராவை சேர்ந்த ரெயில்வே ஊழியர் ஒருவர் கையில் வைத்திருக்கும் இது காற்றாடியல்ல, பட்டாம்பூச்சி. 15 சென்டிமீட்டர் நீளம் கொண்ட இது போன்ற பட்டாம்பூச்சியை இதுவரை யாரும் பார்த்திருக்க முடியாது. இந்த பட்டாம்பூச்சி இப்போது ஆந்திராவில் மிருகக்காட்சி சாலையில் வைக்கப்பட்டு உள்ளது.

- சாமி.

சட்டென்று மூண்ட கோபத்துடன், "ஆமாம்... அவரைப் பாத்தா கொஞ்சம் மனிதாபிமானம் உள்ளவரா, பண்புள்ளவராத் தெரியுது..." கூறிவிட்டாள்.

மறுகணமே, அவளுடைய கையைப் பற்றி சுழற்றித் திருப்பியவன், பின்புறம் அவள் கையை மடக்கி முகத்தருகே குனிந்தபோது, இதை எதிர்பார்க்காததால் அவள் முகம் பயத்தில் சட்டென்று வெளிறியது.

தன் வார்த்தைகள், கோபத்தில் எல்லை மீறி விட்டதை உணர்ந்தாள்.


அவனுடைய கோப மூச்சின் வெப்பம், எரிமலையின் தணலாய்!

"ஏய்! வார்த்தையை யோசிச்சிப் பேசு... நான் உனக்கு பாஸ்... அது ஞாபகம் இருக்கட்டும்... உன்னை மாதிரி கீழ்த்தரமானவங்க கிட்டல்லாம், மனிதாபிமானத்தோட பண்புள்ளவனா நடந்துக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை... எனக்கு வாழ்க்கைப் பாடம் கத்துக் கொடுக்க, உன்னை இங்கே வரவழைக்கலை... ஏழைக் குசும்புன்றது சரியாதான் இருக்கு... பிள்ளைகளோட உன் கொஞ்சலை எல்லாம் நிறுத்திக்க... தயா கிட்ட நீ பேசறதை இனிமே பார்த்தேன்... பி கேர்ஃபுல்" சீற்றத்துடன் உறுமிவிட்டு உள்ளே சென்றான்.

அவன் அழுந்தப் பிடித்திருந்த இடத்தை விட, சொல்லால் அடித்திருந்த இடம் மிகவும் வலித்தது.

இனி, இவன் பார்வையிலேயே படக் கூடாது என்ற உறுதியையும் மனதில் கொண்டு வந்தது.

முகம் கன்றிச் சிவந்து விட உள்ளே சென்ற போது, தேவியும் மஞ்சுவும் அவளுடைய முக மாற்றம் கண்டு, ஓடி வந்து என்னவென்று கேட்டனர்.



"ஒண்ணுமில்லைம்மா... இன்னிக்கு ஈவினிங்தானே படிக்க ஒதுக்கியிருக்கோம்... இப்ப ஃப்ரீ டைம்லே என்ன செய்யலாம்...?"

தன் மனதை மறைத்து இயல்பாகக் கேட்டாள் அவள்.

"ம்... கம்ப்யூட்டர் கேம்ஸ் விளையாடி போரடிக்குது மம்மி... கார்ட்டூனும் நிறைய தடவை பாத்தாச்சு..." சலிப்புடன் கூறினாள் மஞ்சு.

"சினிமா ஏதாவது டி.வி.யில பாக்கலாமா?" ஆவலுடன் தூரிகா கேட்க, இருவரின் முகமும் சுருங்கின.

"உஹூ-ம்... இங்கே கேபிளே கிடையாது.... சித்தப்பாவுக்கு பிடிக்காது..." பயத்துடன் கூறினாள் தேவி.

"கார்ட்டூன் சிடி மட்டும் நிறைய இருக்கு...?" அவள் யோசனையுடன் வினவினாள்.

"அதெல்லாம் சித்தப்பா வாங்கித் தந்தது... அதை மட்டும் பாப்போம்..." இருவரும் கோரஸாகக் கூறினர்.

"சரி... நாம டவுனுக்குப் போறப்ப ஏதாவது சினிமாப்பட சிடி வாங்கிட்டு வரலாம்..." உற்சாகத்துடன் கூறிவிட்டு, அவுட் ஹவுஸிற்கு அவர்களை அழைத்துச் சென்றாள் தூரிகா.

அங்கு சென்றதும், "உங்க ரெண்டு பேருக்கும் பாட்டு பிடிக்குமா... டான்ஸ்...?" ஆவலுடன் விசாரித்தாள்.

"டான்ஸ் ரொம்பப் பிடிக்கும்... ஆனா ஆடினா பாட்டி திட்டுவாங்களோன்னு பயமா இருக்கும்..." தேவி கூறினாள்.

"சரி... இனிமே வீக் எண்டுலே, சனிக்கிழமை பாட்டு... சன்டே டான்ஸ்... கத்துக்கலாமா?"

"ஓகே!....ஹை ஜாலி!" உற்சாகத்துடன் குழந்தைகள் ஆர்ப்பரித்தனர்.

"சரி... இப்ப பாட்டு ஆரம்பிக்கலாம்" என்றபடி அவர்களை அமரச் செய்து விட்டு "சரிகம..." என்று முதலில் ஸ்வரங்களை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தாள்.

நேரம் போனதே தெரியாமல் விரைய, ஒரு மணி நேரம் கழித்து அவள் முடித்து எழுந்த போது "மம்மி... ஒரு பாட்டு பாடுங்களேன் ப்ளீஸ்..." என்று இருவரும் கெஞ்சினர்.

"என்ன பாட்டு வேணும்...?"

தன் விரல்களால் தேவியின் மூக்கை செல்லமாக நிமிண்டியபடிக் கேட்டாள்.

"ம்... தெரியலையே!" அழகாகத் தலை சரித்து அவள் கையை விரித்தபோது, அதை ரசித்தபடி மெதுவாக புன்னாகவராளி ராகத்தில் சுருதி

கூட்டிப் பாட ஆரம்பித்தாள் தூரிகா.

"நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா - நின்னைச் சரணடைந்தேன்!

பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும் என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று..."

அதிர்ந்து பேசாத புல்லாங்குழலாய், அவள் குரலில் அந்தப் பாடல் இனிமையாக ஒலிக்க ஆரம்பித்தது.

தென்றலைக் கூடக் காயப்படுத்தாமல் காற்றில் இனிமையாகப் பரவிய அவள் குரல், அப்போதுதான் பின்புறம் சென்று கொண்டிருந்த தயாகரின் செவிகளில் விழுந்தது.

ஆராய்ச்சியும் ஆர்வமுமாய் ஜன்னல் வழியே பார்த்தவனுக்குள், பெரும் வியப்பு!

மகுடியின் நாதத்துக்கு மயங்கி தலையசைக்கும் அரவம் போல், இரு குழந்தைகளும் அமைதியாக அமர்ந்து ரசித்த விதம், அவன் கருத்தைக் கவர்ந்தது.

அவள் பாடி முடிக்கும் வரை கேட்டிருந்தவன், பிறகு சப்தமின்றி யோசனையுடன் விலகிச் சென்றான்.

மறுநாள் அவள், பரதத்தின் அரிச்சுவடிகளை ஜதி சுத்தத்துடன் கற்றுத் தர, ஆர்வத்துடன் கற்றுக் கொண்டனர் இருவரும்!

புதிதாய் ஒரு பாச மண்டலம் சூழ்ந்ததில், அந்தக் குழந்தைகளின் உலகம் இப்போதெல்லாம் வண்ணமயமாய்.... அர்த்தமுள்ளதாய் மாறியிருந்தது.

* * * * *

## 5

**வா**ழ்க்கை, ராஜபாட்டையில் தடையின்றிச் செல்லும் வாகனமாய் பயணிக்க அவளுக்கும் வசீகரனுக்கும் இடையே மட்டும், கண்ணுக்குத் தெரியாத ஒரு பனிப்போர் தொடர்ந்தது.

ஒரு நாள் மாலையில் பிள்ளைகளை படிக்கச் சொல்லி விட்டு, வேலைக்காரி ரமாவின் துணையுடன் அவள் கோவிலுக்குச் சென்றிருந்தாள்.

கோவிலுக்கு சென்றதில் எப்போதும் போல் மனம் அமைதியடையத் திரும்பிய போது, வழியில் ஊனமுற்ற முதியவர் ஒருவர் பாதையோரத்தில் சுருண்டு படுத்திருப்பதைக் கண்டாள்.

எப்போதுமே தர்ம சிந்தனையுடனிருக்கும் அவள் மனம், அன்றும் சஞ்சலமானது.

வருடா வருடம், இது போல் யாராவது ஒரு ஏழைக்கு துணிகளும் பொருட்களும் தான் பரிசளிப்பது நினைவிற்கு வந்தது.

உடனே, தான் கையில் எடுத்துச் சென்றிருந்த புது சால்வையை அவரிடம் கொடுத்தாள் அவள்.

அவர் நெகிழ்ந்து போய் கும்பிட்டதும், மனம் ஏனோ நிறைந்து போனது.

அப்போது, அவர்களைக் கடந்து சென்ற காரிலிருந்து இதை கவனித்த வசீகரனின் முகம், ஏளனத்துடன் இறுகியது.

அவள் வீட்டிற்குள் நுழையும் முன்பே, அவன் குரல் அவளை அழைத்தது.

"என்ன... தான தர்மமெல்லாம் பலமா இருக்கு! நீயே இங்கே ஒரு கவர்னஸ்...! அவனுக்கு நீ பிச்சை போடறியா...?"

தலையை சிலுப்பி வேகமாக நிமிர்ந்தாள் அவள்.

"ஓ! ஏழைங்கன்னா உங்களுக்கு அவ்வளவு கேவலமா? மத்தவங்களுக்கு உதவி செய்யறதுக்கு கோடீஸ்வரனா இருக்கணும்னு அவசியமில்லை சார்! உதவுற மனசு இருந்தாப் போதும்... ஆனா உங்களை மாதிரி ஆளுங்களுக்கெல்லாம், பணம் இருக்கற அளவு மனசு விஸ்தாரமா இருக்கறதில்லை..."

சுள்ளென்று பதில் கொடுத்து விட்டு, வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

முதன் முறையாக ஒரு பெண், அதுவும் தன் கீழ் வேலை செய்பவளின் எதிர்ப்பும், குத்தல் பேச்சும் அவனை ரௌத்ரமாக்கின...

"ராட்சசி..." உதடுகள் சீற்றத்துடன் முணுமுணுக்க, அருகிலிருந்த பூந்தொட்டியை எட்டி உதைக்க அது உருண்டு ஓடி உடைந்தது.

பிறகு, பிள்ளைகளின் அறைக்குச் சென்றும் அவளுடைய படபடப்பும் சினமும் குறையவில்லை.

பதட்டத்தை மறைத்தபடி விபூதிப் பிரசாதத்தை அவர்களுடைய நெற்றியில் பூசி விட்டாள்.

"ஏன் மம்மி... ரொம்ப டல்லா இருக்கீங்க?" மஞ்சு அக்கறையுடன் விசாரித்தாள்.

அதே நிமிடம் அறைக் கதவு வேகமாகத் திறக்கப்பட, அங்கு இரைக்கு காத்திருக்கும் புலியாய் நின்றிருந்தான் வசீகரன்.

"உன் கூடக் கொஞ்சம் பேசணும்... வர்றியா?" இறுகிய குரலில் அவளிடம் கேட்டான்.

"தேவி... மஞ்சு... சமத்தா படிக்கணும்! இப்ப வந்திடறேன்" என்றபடி தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல், அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

* * * * *

**பி**ன்புறம் யாருமில்லாத தோட்டத்திற்குச் சென்றவன், விருட்டென்று திரும்பினான்.

"இப்பதானே புரியுது உன் திட்டம்? ரொம்ப நல்லவளா நடிச்சி இந்த வீட்டுக்கு உரிமையுள்ளவா ஆகிடலாம்னு பெரிசா திட்டம்

போட்டு தான் நுழைஞ்சிருக்கியா?" குத்தலாகக் கேட்டான்.

"சத்தியமா நீங்க பேசறது எனக்குப் புரியலை..."

"எல்லார் கிட்டயும் நல்ல பெயர் வாங்கி... குழந்தைங்க மேல உயிரா இருக்கற மாதிரி நடிச்சி... தயாவை மயக்கி கைக்குள்ளே போட்டுக்கிட்டு, அந்தக் குழந்தைகளுக்கு அம்மாவாகிடலாம்னு பெரிய ப்ளான் எல்லாம் நல்லாதான் பண்ணியிருக்க... ஆனா நான் கொஞ்சம் புத்திசாலி... அதக் கண்டு பிடிச்சிட்டேன்.... இல்லை...?"

"கடவுளே! உங்களுக்கு நல்லதே கண்ணிலே படாதா? எதையுமே, தப்பாவும் கெடுதலாவுமேதான் நினைக்கத் தோணுமா? குழந்தைங்க கிட்ட நான் அன்பா இருந்தேன்... குழந்தைகளும் பாசத்துக்கு ஏங்கிட்டிருந்ததால என்கிட்ட ஒட்டிக்கிட்டாங்க...! நான் இதுவரைக்கும் எதுக்காகவும் யார்கிட்டயும் நடிச்சதில்லை... உங்கண்ணனை மயக்கி கைக்குள்ளே போட்டுக்கணும்கிற எண்ணமும் எனக்கு சத்தியமா கிடையாது... அவர் என்னைவிட எவ்வளவு பெரியவரு... ரெண்டு குழந்தைகளுக்கு அப்பா! எனக்கு ஒரு பெரிய அண்ணன் மாதிரி! சே! இப்படி எல்லாம் கற்பனை பண்ண உங்களுக்கு எப்படி மனசு வந்தது? யூ ஆர் ஏ பெஸ்ஸிமிஸ்ட்... அதோட பெரிய சாடிஸ்டும் கூட!" படபடவென்று கொட்டி விட்டாள்.

முரட்டுத்தனமாக அவளுடைய கையைப் பற்றி இழுத்தவன், "அப்புறம் ஏன் உன்னை 'மம்மி'ன்னு கூப்பிடச் சொல்லி அவங்களைப் பழக்கினே?" கண்ணோரங்கள் இடுங்க, கோபத்தில் பளிங்காய் பளபளத்த விழிகளுடன் கேட்டான்.

அவனிடமிருந்து விலக முயன்றபடி, "அவங்க சின்னக் குழந்தைங்க... ஏதோ ஆசைப்பட்டாங்க... அதான்! இது ஒரு பெரிய விஷயமா? கடவுளே... மலை மேல இருக்கறவங்க மனசும், உயர்ந்து இருக்கும்னு நினைச்சேன்... ப்ச்..." தனக்குள்ளே கூறிக் கொண்டாள் தூரிகா.

"அப்போ 'ப்ளெயின்ஸி'லே இருக்கறவங்க மனசெல்லாம் ரொம்ப தாழ்ந்ததா? ம்...." அவளைப் பிடித்த பிடியை விடாமலே கேட்டான் அவன்.

"சாரி சார்... என்னை விட்டுடுங்க... இனிமே உங்க அண்ணன் இருக்கற பக்கமே திரும்பிப் பாக்க மாட்டேன்... குழந்தைகளையும் ஆன்ட்டின்னு கூப்பிடப் பழக்கிடறேன்... போதுமா?... மை குட்நெஸ்!... எவ்வளவு 'நேரோ மைண்டட்'டா இருக்கீங்க?சே!" கையை உதறிவிட்டு வேகமாக உள்ளே சென்றாள்.

"ஏய்... பாத்து.... இது தான் நீ என்கிட்ட முகம் திருப்பற கடைசி தடவையா இருக்கணும்... நான் உனக்கு சம்பளம் குடுக்கற முதலாளி... அதை மறந்துட வேணாம்!" சொடக்குப் போட்டபடி கூறினான் அவன்.

மறுகணமே, மனிதத் தடங்கள் இல்லாத ஏதோ ஒரு மாய உலகத்திற்கு சென்று விடலாமா என்றிருந்தது அவளுக்கு!

வார்த்தைகளால் திருப்பிக் கொடுத்தாலும் பெரும் சோகமும், தவிப்பும் இதயப் பரப்பை ஆக்கிரமித்தன.... ஒரு இனிய நாள் இப்படியா முடிய வேண்டுமென்ற சுயபச்சாதாபமும் எழுந்தது!

உன் வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று சென்று விடத் துடித்தாலும், எங்கு செல்வதென்று புரியாத ஒரு பயமும் வேதனையும் வந்தன.

அன்றிலிருந்து வசீகரன் எதிர்பட்டாலே தன்னை ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் அவள் சுருக்கிக் கொண்டு விட, மேலும் பிரச்சினையின்றி நாட்கள் சென்றன.

அவள் வற்புறுத்திக் கேட்டதால் குழந்தைகள் இருவரும் 'ஆன்ட்டி' என்று அழைக்க ஆரம்பித்திருந்தனர்.

* * * * *

## 6

ஒரு நாள் இரவு, குழந்தைகளை உறங்க வைத்து விட்டு அவுட் ஹவுஸிற்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் தூரிகா.

தன் யோசனையிலேயே மூழ்கியபடிச் சென்றவள், அப்போதுதான் தோட்டத்தில் குப்புற விழுந்து கிடந்த அந்த உருவத்தைக் கவனித்தாள்.

உடனே பதட்டத்துடன் ஓடிச் சென்று பார்த்த போதுதான், அது தயாகரன் என்று தெரிந்தது.

உடனே பதறிப் போய், "முருகா... ரமா..." என்று அவள் கூக்குரலிட வீட்டிலிருந்த அனைவரும் ஓடி வந்தனர்.

தயாகரைத் தூக்கியபோது, அவன் தலையிலிருந்து ரத்தம் கோடாய் வழிந்திருக்க, அவன் குடித்திருப்பதை அவன் மீது வீசிய வாசமே உணர்த்தியது.

உடனே அவனைத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கு சென்ற பிறகு தான், தலையில் அடிபட்டு நிறைய ரத்தம் சேதாரமாகி இருந்ததால், அவனுக்கு உடனே ரத்தம் தேவைப்படுவது தெரிந்தது.

உடனே, வசீகரன் தானும் அதே குரூப் என்று ரத்தம் கொடுத்தான்.

அப்போது தான், தானும் அதே ப்ளட் குரூப்

என்ற நினைவு வந்தது தாரிகாவிற்கு!

உடனே சென்று டாக்டரிடம் கூறியவள், தானும் ரத்ததானம் செய்தாள்.

தாயில்லாத அந்தக் குழந்தைகளுக்கு, தந்தையாவது இருக்க வேண்டுமென்று மனம் பிரார்த்தனை செய்தது. பிறகு வெளியில் வரும்போது தான், ஏளனப் புன்னகையுடன் அவளை எதிர்கொண்டான் வசீகரன்.

"ம்... அப்போ நான் சொன்னப்ப மறுத்தே... இப்போ அக்கறையில்லாமலா துடிச்சுப் போய் எங்கண்ணனுக்கு ரத்தம் கொடுத்தே?" நக்கலாக வந்தது அவன் குரல்.

உடனே, மனதில் பெரும் ஆயாசமும் சஞ்சலமும் வந்து சூழ்ந்தன.

"ஹூம்... இந்த மாதிரி ஆபத்துல யார் இருந்தாலும்... ஏன் அது நீங்களாகவே இருந்தாக் கூட நான் அதை செஞ்சிருப்பேன்..."

"அதென்ன நீங்களாகவே இருந்தாலும்.... ம்...ம்?" தாழ்ந்த குரலில் சீறினான் அவன்.

"ம்... அப்படின்னா... எனக்கு உங்களை... பிடிக்காது... அப்படி இருந்தாக்கூட உங்களுக்கு ஒரு ஆபத்து சமயத்துல அதை நினைக்காம உதவி செய்வேன்னு சொன்னேன்..." அவளும் அழுத்தமாகவே கூறினாள்.

சுர்ரென்று பரவிய கோபத்துடன் எழுந்தவன், "எவ்வளவு திமிர் உனக்கு? நான் ஒரு தட்டுத் தட்டினா எட்டு குட்டிக் கரணம் போடுவே... என்னைப் பிடிக்கலைன்னு என்கிட்டயே சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்?" அடிக்குரலில் இடியாய் உறுமினான்.

உள்ளுக்குள் சிறிது பயம் பரவினாலும், அவள்



உடனே நிமிர்ந்தாள்.

"ஹ"ும்... என்னைப் பொருத்தவரைக்கும், ஒரு ஆணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லத்தான் தைரியம் வேணும்... பிடிக்கலைன்னு சொல்ல அது தேவையில்லைன்னு, நான் நினைக்கிறேன்...! நீங்க என்ன பெரிய மகாராஜாவா.... எல்லாரும் வந்து உங்க காலடியில விழ...?"

கூறிவிட்டு, வேகமாகச் சென்று எதிர்ப்புறம் வரிசையாகப் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்து, கண்களை இறுக மூடிக் கொண்டாள் அவள்.

அந்த நொடியே, உறங்கிக் கிடந்த அவனுடைய ஆண்மையை எழுப்பிவிட்டு உசுப்பேத்தின, அவளுடைய பேச்சும் புறக்கணிப்பும்!

பாறையைப் பிளக்கின்ற உளியாய், தன்னுடைய ஈகோவையும், தன்மான உணர்வையும் அவள் வார்த்தைகள் சிதறடிப்பதை, அந்த நொடியே உணர்ந்தான் அவன்.

கோபத்துடன் முகம் இறுகிவிட, அது மருத்துவமனை என்பதால் அமைதியாக இருந்தான் வசீகரன்.

* * * * *

**இ**ரண்டு நாட்களில், தயாகரன் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு வந்து விட்டான்.

அன்று காலையில், தூரிகா வாக்கிங் முடிந்து வந்து யோகாவும் செய்து முடித்து தயாராகிக் கொண்டிருந்தபோது தான், வாசல் கதவு தட்டப்பட்டது.

இவ்வளவு காலையில் யாராக இருக்குமென்ற யோசனையுடன் கதவைத் திறந்த போது, அங்கு தயாகரன் நின்றிருந்தான்.

"நான் உள்ளே வரலாமா? உங்களோட நான் கொஞ்சம் பேசணும்! நன்றி சொல்லணுமே..." சிறு புன்னகையுடன் கேட்டான்.

"வாங்க சார்... உள்ளே வாங்க... இது உங்க வீடு... என் அனுமதி கேக்கறீங்க?" என்றபடி வரவேற்பறையிலிருந்த பிரம்பு நாற்காலியில் அவனை அமரச் செய்தாள்.

சிறு சிரிப்புடன் நிமிர்ந்தவன், "மிஸ் தூரிகா! தேங்க்யூ சோ மச்... எல்லாத்துக்கும்! எனக்கு நீங்களும், வசியும்தான் ரத்தம் குடுத்துக் காப்பாத்தினதா, டாக்டர் சொன்னாரு... ரொம்ப நன்றி! நான் உங்களுக்கு நிறைய கடன் பட்டிருக்கேன்னு தோணுது!

தேவியும் மஞ்சுவும், முன்னாடி எல்லாம் ரொம்ப அடம் பண்ணுவாங்க...! ஒழுங்கா சாப்பிடறதில்லை... படிக்கறதில்லை... ஹோம் ஓர்க் செய்யறதில்லை.... அடிக்கடி ஸ்கூல்லே இருந்து கம்ப்ளெயிண்ட்ஸ் வந்துட்டே இருக்கும்... காலையில தினமும் அவங்க கிளம்பறதுக்குள்ளே வீடே ரணகளம்தான்!

அம்மா ஒரு பக்கம் சத்தம் போட... வசி கண்டிக்க போர்க்களமா இருக்கும்... இது எதையுமே பாக்கப் பிடிக்காம, நான் என் அறைக்குள்ளேயே இருப்பேன்... அதையே என் உலகமாகவும் ஆக்கிக்கிட்டேன்..!

ம்... அது ஒரு தனி உலகம்... யாருமே வரத் தேவையில்லாத தனிமை உலகம்!

எத்தனையோ கவர்னஸ் வந்தாங்க... ஆனா அவங்கல்லாம் பசங்களை இந்த அளவுக்கு மாத்தினதேயில்லை.... ஒவ்வொருத்தரும் வேலைய விட்டுட்டுப் போறப்ப, இவங்களோட அடமும் பிடிவாதமும் இன்னும் அதிகமாதான் ஆகியிருக்கே ஒழிய குறைஞ்சதில்லை...

ஆனா பெரிய அதிசயம்! நீங்க இங்கே வந்து ஒரு மாசம்தான் ஆகுது... அவங்க கிட்டதான் எவ்வளவு சேஞ்ச்... ரிமார்க்கபிள் சேஞ்ச்...!

காலையில சமத்தா சாப்பிடறாங்களாம்... அடம் பண்ணாம ஒழுங்கா ஸ்கூலுக்கு கிளம்பிப் போறாங்களாம்... மதியம் லன்ச் கூட ஒழுங்கா சாப்பிடறதா முருகன் சொன்னான்... அதே மாதிரி சாயந்திரமும் வந்தப்புறம், ப்ராம்ப்டா ஹோம் ஒர்க் செஞ்சுட்டு நேரத்துல படுத்துடறதா அம்மா சொன்னப்ப, ரொம்ப ஆச்சர்யமா இருந்தது.... இதை எப்படி உங்களால சாதிக்க முடிஞ்சது...?" ஆர்வமும் தவிப்புமாய் கேட்டான்.

"ம்... அதுக்கு காரணம் ஒரு சின்ன மந்திரம்தான்... மூணெழுத்து மந்திரம்... அதுக்கு 'அன்பு'ன்னு பேரு! அந்தக் குழந்தைங்ககிட்ட எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாம உண்மையான அன்போட எல்லாம் சொல்லித் தந்தேன்... அவங்களும் பழகிட்டாங்க...

குழந்தைங்க மனசு கண்ணாடி மாதிரி! நாம அதுக்கு முன்னாடி நின்னு என்ன செய்யறமோ, அதைத்தான் அவங்களும் பிரதிபலிப்பாங்க...

நான் ஹோம் சயின்ஸ் படிச்சப்ப 'சைல்ட் சைக்காலஜி... சைல்ட் கேர்' தான் எடுத்து ப்ராஜெக்ட் பண்ணினேன்... அதுல கத்துக்கிட்டது தான்! அதை ப்ராக்டிகலா செஞ்சு பாத்தப்ப, அவங்க கிட்டயிருந்து நான் எதிர்பார்த்த அந்த பாசிடிவ் ரிசல்ட் கிடைச்சிது... தட்ஸ் ஆல்...!"

இயல்பாகக் கூறியவளையே, பிரமிப்புடன் பார்த்தான் தயாகரன்.

"எனிவே... பசங்களோட பிடிவாதமெல்லாம் போக்கி, அன்பால அவங்களை வசப்படுத்தி, அவங்களை ஒபீடியண்டா மாத்தினதுக்கு, நன்றிங்கற வார்த்தையைத் தவிர என் கிட்ட சொல்ல வேற ஏதுமில்லை தூரிகா... தேங்க்ஸ்... இங்கே உங்களுக்கு என்ன குறை இருந்தாலும், ஒரு நல்ல நண்பனா என்கிட்ட நீங்க ஷேர் பண்ணிக்கலாம்!" என்றபடி எழுந்தான்.

"ஒரு நிமிஷம் சார்! அதே மாதிரி என்னை ஒரு தோழியா நினைச்சி, நான் சொல்லப்போற ஒரு

சின்ன ரிக்வெஸ்ட்டை நீங்க ஏத்துப்பீங்களா?" அவள் மென்குரலில் கேட்டாள்.

"ஷ்யூர்!" என்று இயல்பாகக் கள்ளமின்றிச் சிரித்தவனிடம், சட்டென்று ஒரு வித சகோதர வாஞ்சை வந்தது.

"உங்ககிட்ட இருக்கிற குடிக்கிற கெட்டப் பழக்கத்தை விட்டுட்டு குழந்தைங்க கிட்ட பாசமா... ஒரு ரோல் மாடலான அப்பாவா நீங்க வாழணும்கிறது தான் எங்க எல்லாருடைய விருப்பமும்... செய்வீங்களா? ப்ளீஸ்!"

"ம்... நேத்து தான் வசீயும் இதப்பத்திப் பேசினான்... ட்ரை பண்றேன்னு சொல்லியிருக்கேன்..." விரக்தியும் வேதனையும், அவன் வார்த்தைகளில் கலந்திருந்தன.

பிறகு அவன் விடைபெற்றுச் சென்றபோது, இவன் தன் தம்பியைப் போல் முரட்டுத் தனமும் ஆளுமைத்தனமும் மிகுந்தவனில்லை என்பது தெரிந்தது... முயன்றால் அவனை மாற்றி விடலாமென்பதும் புரிந்தது!

* * * * *

## 7

**வா**ழ்க்கை சீராகச் செல்ல, தயாகரின் செயல்கள் மிகவும் மாறத் துவங்கியது.

இப்போதெல்லாம், சுத்த மாக சவரம் செய்யப்பட்ட முகத்துடன் தினமும் வாக்கிங் செல்வதும், டைனிங் ஹாலில் அவன் எல்லோருடனும் சேர்ந்து அமர்ந்து சாப்பிடுவதும் வழக்கமாகியிருந்தன.

முன்பு போலன்றி, தேவியும் மஞ்சுவும் ஒழுங்காகச் சாப்பிடுவதைக் கண்டு, அவன் தூரிகாவை ஒரு நாள் பாராட்டிவிட்டு நன்றி கூறினான்.

"வெல்கம் சார்.... டேபிள்லே சாப்பிடறது நல்ல பழக்கம் தானே? அதனால தான் பழக்கினேன்... அதுக்கு உங்க அப்பாவுக்கு தான் நீங்க தேங்க்ஸ் சொல்லணும்! அவர்தான் மேடத்துக்கிட்டே ரெகமெண்ட் பண்ணினாரு!"

தோளைக் குலுக்கியபடி இயல்பான புன்னகையுடன் அவள் கூறியபோது, எதையுமே இலகுவாக ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துடன் அவள் இருப்பதைக் கண்டு, அவன் மனம் ஆச்சர்யமானது.

அந்த வாரக் கடைசியில், ஞாயிறன்று மதியம் எப்போதும் போல் இருவருக்கும் நாட்டியப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தாள் தூரிகா!

"தா...தை....தா....தை..." என்று அவள் ஜதி சொல்லியபடி ஆட ஆரம்பிக்க, அவளுடைய ஒலியிழைகள் நாத வெள்ளமாய் அந்தப் பிராந்தியமெங்கும் காற்றில் மிதந்தபடிப் பரவின.

அவளைப் பார்த்தபடியே, ஆர்வத்துடன் கை கால்களை அசைத்துத் தாளமிட்டபடி தேவியும் மஞ்சுவும் ஆடிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று பெரும் சப்தத்துடன் அந்த அறைக் கதவு திறக்கப்பட்டது. திரும்பினால், கோபத்தில் சிவந்த விழிகளுடன் அங்கு சீற்றத்தின் முகவரியாய் நின்றிருந்தான் வசீகரன்.

பிள்ளைகளிரண்டும், அடவுகளை நிறுத்தி விட்டு உறைந்து நின்றனர்.

அவனுடைய பார்வைகள், அவளைக் குத்திக் குதறி ரணமாக்கின.

பதறிப் போய் அவள் ஆட்டத்தை நிறுத்தினாள்.

"தேவி... மஞ்சு! வீட்டுக்குப் போங்க..." அமர்ந்த குரலில் ஆனால் கண்டிப்புடன் அவன் கூற, இருவரும் பயந்தபடி மெதுவாக வெளியேறினர்.

தாழ்ந்த தொனியிலேயே கோபத்தையும் கண்டிப்பையும் காட்ட முடியும் என்பதை, அவள் இன்றுதான் புரிந்து கொண்டாள்.

"ஏய்... இது என்ன கூத்தாடி வீடா? ஒரேயடியா ஆட்டம் போட்டுட்டிருக்கே? அதெல்லாம் உன்னோட நிறுத்திக்க! எங்களோடது பாரம்பரியம் உள்ள குடும்பம்... எங்க பிள்ளைங்களுக்கு இதெல்லாம் வேண்டாம்... இங்கே யாரும் போய் சினிமாவிலே ஆட்டம் போடப் போறதில்லை... குடும்பப்பாங்கான பொண்ணுங்களா எங்க வீட்டுக் குழந்தைங்க வளரணும்... இந்த ஆட்டத்தை எல்லாம் இன்னியோட மூட்டை கட்டிடணும்... புரிஞ்சுதா?"

ஒற்றை விரலை உயர்த்தி, சீற்றத்துடன் எச்சரித்தான்.

ஏனோ மனமும் உடலும் விதிர்த்துப் போய் விட, "இது நீங்க நினைக்கிற மாதிரியில்லை... க்ளாசிகல் டான்ஸ்தான்..." அவள் முடிப்பதற்குள் கையமர்த்தி அவளைத் தடுத்தான்.

"எனக்கும் தெரியும்... ஆனா இது தேவையில்லைங்கிறதுதான் என்னோட முடிவு! இனி ஒரு தரம் என் வார்த்தை இங்கு மீறப்பட்டுதுன்னா, அப்புறம் என்ன நடக்கும்னு என்னால சொல்ல முடியாது... உனக்கு இதுதான் லாஸ்ட் வார்னிங்!" கூறிவிட்டு விருட்டென்று வெளியேறினான்.

சட்டென்று தொய்ந்துபோய் அமர்ந்தவளுக்குள், பெரும் தவிப்பும் சோகமும் சூழ்ந்தன.

அந்தக் குழந்தைகளின் விருப்பத்தையும், தன் எண்ணங்களையும் நிறைவேற்ற இந்த வீட்டில் சிறு சுதந்திரம் கூடக் கிடைக்காதோ என்ற ஆதங்கமும் எழுந்தது.

உடனே தன் துப்பட்டாவை எடுத்துப் போர்த்திக் கொண்டு குழந்தைகளைப் பார்க்கச் சென்றாள்.

* * * * *

தங்கள் அறையில் குழந்தைகள் இருவரும் மிரட்சியுடன் விழித்தபடி கட்டிலில் பயத்துடன் அமர்ந்திருந்தனர்.

அவளைக் கண்டதும் ஓடிவந்து காலைக் கட்டிக் கொண்ட தேவி, "சித்தப்பா ரொம்பத் திட்டினாங்களா?" விரிந்த விழிகளுடன் கேட்டாள்.

"ஊஹூம்! அதெல்லாம் இல்லை... இனிமே டான்ஸ் வேண்டாம்... நாம இன்னிக்கு ஷாப்பிங் போகலாமா?" முயன்று வரவழைத்த உற்சாகத்துடன் கேட்டாள்.

"ஓ... போகலாமே..." என்ற கூச்சலுடன் இருவரும் அவளைக் கட்டிக் கொண்டனர்.

"இருங்க... உங்க அப்பாகிட்ட பர்மிஷன் கேட்டுட்டு வரேன்" என்று கூறிவிட்டு தயாகரிடம் சென்றாள்.

ஆனால், அவனோ தானும் அவர்களுடன் வருவதாகக் கூறினான்.

காரின் முன்புறம் டிரைவருடன் அவன் ஏறிக் கொள்ள, பின்புறம் பிள்ளைகளுடன் அவள் அமர்ந்து கொண்டாள்.

டவுனுக்குச் சென்றதும், குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களுடன் அவர்களுடைய அறையை அலங்கரிக்க மிக்கி, டோனால்ட், ஸ்கூபி, கேஸ்பர் என்று விதவிதமான வால் ஸ்டிக்கர்களை வாங்கினாள்.

திரைச் சீலைகளும் மிருகங்களின் உருவங்களுடன் ரெடிமேடாகவே கிடைக்க அதையும் தேர்ந்தெடுத்தாள்.

பிறகு துணிக் கடைக்குச் சென்றபோது, இரு குழந்தைகளுக்கும் மினி ஸ்கர்ட்களும் சிறு சோளியும் எடுத்து வைத்தாள்.

உடனே தேவி அவளிடம், "இது வேண்டாம் ஆன்ட்டி! சித்தப்பாவுக்கும் பாட்டிக்கும் பிடிக்காது" என்றாள் பயத்துடன்.

"ஏன்... உனக்குப் பிடிச்சிருக்கில்லே?" அவள் கேட்கும்போதே அங்கு மஞ்சுவுடன் தயாகரும் வந்து விட்டான்.

"என்ன சொல்றா தேவிக் குட்டி?" என்றான்.

"இந்த டிரஸ் அவளுக்குப் பிடிச்சிருக்காம்... ஆனா அவங்க சித்தப்பாவுக்கு தான் பிடிக்காதாம்... வேண்டாம்கிறா!" கேலியாகக் கூறினாள்.

அந்த உடையை எடுத்துப் பார்த்தவன், "ம்... இது வசீ சித்தப்பாவுக்கு பிடிக்கலைன்னு சொன்னானா தேவிம்மா? அப்போ வேணாம்" என்று தனியே எடுத்து வைத்தான்.

சுள்ளென்று வந்த கோபத்துடன், "இந்த ட்ரெஸ் பசங்க போட்டுக்கப் போறது... உங்க தம்பி போட்டுக்கப் போறதில்லை... பசங்களுக்கு இது ரொம்பப் பிடிச்சிருக்கு... அதுக்கு அவரை

# குழந்தைகளுக்கும் உப்பை குறையுங்கள்

ரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் மற்றும் வயதானவர்கள் உப்பை குறைத்து சாப்பிடுவது வழக்கம். ஆனால் குழந்தைகளுக்கும் உப்பை குறைக்க வேண்டும். இதனால் ரத்த அழுத்தம், இருதய நோய் போன்றவற்றை தடுக்க முடியும் என்று நிபுணர்கள் கண்டு பிடித்து உள்ளனர்.

4 வயது முதல் 18 வயது வரை உப்பை குறைவாக சேர்த்தால் உடல் குண்டாவதை தடுக்க முடியும் என்றும் உணவியல் நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

- சாமி.

ஏன் சார் கேட்கணும்?" சுளித்த முகத்துடன் முணுமுணுத்தாள் அவள்.

"தூரிகா... வசீ சொன்னா சரியாத்தான் இருக்கும்... சரியான காரணம் இல்லாம அவன் எதையும் தடுக்க மாட்டான்... அது எனக்குத் தெரியும்... என்னை விட அவன் புத்திசாலி! மத்தவங்களை பத்தி கணிக்கறதில ஜீனியஸ்..." பெருமையுடன் கூறினான்.

"ப்ச்..." என்று தலையைக் குலுக்கியபடி அலுப்புடன் திரும்பியவளிடம், "உனக்கும் அவனுக்கும் ஏனோ ஒத்துப் போகலைன்னு நினைக்கிறேன்... ஆனா அது ஏன்னுதான் எனக்குப் புரியலை... நீ மத்தவங்க மாதிரிக் கூட இல்லையே... அவனுக்கு ஏன் உன்னை பிடிக்காமப் போகணும்?" தனக்குள்ளேயே கேட்பது போல், யோசனையுடன் கேட்டு நிறுத்தினான்.

"அதென்ன சார்...! நான் மத்தவங்க மாதிரி இல்லைன்னா....?" நெறித்த புருவங்களுடன் கேட்டாள் தூரிகா.

"ம்... இது வரைக்கும் வந்த கவர்னஸ் எல்லாருமே, குழந்தைங்க கிட்டே ஆர்வம் காட்டினதை விட, என்கிட்டயும் வசீ கிட்டயும் ரொம்ப ஆர்வம் காட்டி உருகினாங்க... அதனால தான், அவன் குழந்தைங்க கிட்டே கூட ரொம்ப ஸ்ட்ரிக்டா இருக்க ஆரம்பிச்சான்... ஆனா நீ வித்தியாசமானவ... பாக்கப் போனா என்னையும் வசீயையும் பல நேரங்களிலே நீ தவிர்க்க முயற்சி பண்றதை நானே கவனிச்சிருக்கேன்... அப்புறம்



ஏன்...?"

"ஹூம்... அவர் மத்தவங்களை கணிக்கறதில ஜீனியஸ்னு நீங்கதானே சொன்னீங்க... ஆனா தப்பா கணிக்கறதிலன்னு நான் நினைக்கிறேன் சார்..." கிண்டலாகக் கூறினாள்.

"ஏன் அப்படி சொல்றே?"

"பின்னே? சரியான காரணம் இல்லாம எதையும் அவர் தடுக்க மாட்டாருன்னு சொன்னீங்க... ஆனா உங்க கூட நான் பேசறது அவருக்குப் பிடிக்கலையே...?"

"ம்... மத்தவங்க கூட நீ பேசறது அவனுக்குப் பிடிக்கலைன்னா... அதுக்கு வேற ஸ்பெஷல் காரணம் என்னவா இருக்கும்... ம்... ஒண்ணே ஒண்ணுதான் இருக்கணும்!" குறும்புடன் புருவங்களை உயர்த்திக் கேட்டான்.

சட்டென்று அவனுடைய சொற்களின் அர்த்தம் புரிந்து, இதயம் சுரம் தப்பியது.

"ஓ காட்! அப்படி நிச்சயமா இருக்காது... கோடி குடுத்தாலும் வேண்டாம்ப்பா... இந்த மாதிரி ஒரு திமிரும் கர்வமும் அகங்காரமும் படைச்சவரை, என் லைஃப்லே நான் பாத்ததில்லை..." அலட்சியமாக தோளைக் குலுக்கியபடி கூறினாள் தூரிகா.

"அவனுக்கு உன்னை மாதிரி ஒரு ஜோடிதான் சரி! எதுக்கெடுத்தாலும் ஆமாம் சாமி போட்டு நடக்கற ஒரு பயந்தாங்கொள்ளிப் பொண்ணு அவனுக்கு சூட் ஆகவே மாட்டா... உன்னை மாதிரி போல்டான பொண்ணுதான் மேட்ச் ஆகும்!"

"ஓ... மேட்ச் மேக்கிங்கா! நான் பாவம்ப்பா... என்னை விட்டுடுங்க சார்!.... வேணும்னா லேடி ஜாக்கிசான் மாதிரி யாரையாவது உங்க தம்பிக்கு பார்க்கலாம்... அது தான் சரி! ஹி இஸ் ஸோ அர்ரகண்ட் அண்ட் அன் அப்ரோச்சபிள்... ப்ச்" அவளும் கோபமும், குறும்புமாய் பதிலடி கொடுத்தாள்.

"என் தம்பியப் பத்தி என்கிட்டயே தைரியமா ஒபினியன் சொல்றியா?" சுட்டு விரலைக் காட்டியபடி அவன் எச்சரிக்க, இவனுடன் தான் எவ்வளவு இயல்பாகப் பேச முடிகிறதென்ற ஆச்சர்யமும், வியப்பும் எழுந்தன.

பிறகு குழந்தைகளுக்கு உடைகளை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது, அருகிலிருந்த 'சிடி' கடையில் கிங்காங், ஹாரி பார்ட்டர், நார்னியா, ஜுமாஞ்சி என்று குழந்தைகளுக்குப் பிடித்த மாதிரி படங்களாக வாங்கிக் கொண்டு வீடு வந்தனர்.

அன்று மதியம், வாங்கி வந்திருந்த மிக்கி, டொனால்ட், ஸ்கூபி, ப்ளூட்டோ ஸ்டிக்கர்களையெல்லாம் சுவரில் ஒட்டிவிட்டு, தேவி மஞ்சுவின் சிறு வயது போட்டோக்களையும் மூவருமாக மாட்டினார்கள்.

பிறகு, சிறு தொட்டிகளில் செயற்கை செடிகளை வைத்து, நான்கு மூலைகளிலும் வைத்தனர்.

ஜன்னலுக்கு திரைச்சீலைகளை மாட்டி அலங்கரித்து படுக்கை உறைகளை மாற்றி, எல்லாம் முடிந்த பிறகு சுற்றிப் பார்த்தால், அந்த அறையே வித்தியாசமான அழகுடன் மிளிர்ந்தது.

* * * * *

## 8

அன்று மாலையில் படித்து முடித்த பிறகு, ஹாரிபாட்டர் சிடியை அவள் போட்டுவிட, இரு குழந்தைகளும் இமைக்காமல் அதில் ஆழ்ந்து போயினர்.

அவளும் ஆர்வத்துடன் அந்த சினிமாவில் ஆழ்ந்திருந்தபோது, திடீரென்று 'டிவி' நிறுத்தப்பட்டது.

யோசனையுடன் திரும்பினால், ரிமோட்டுடன்

வசீகரன் அங்கு நின்றிருந்தான்.

அவன் முகத்தில் இயல்பான உணர்ச்சிகள் துடைக்கப்பட்டிருக்க, கடும் கோபம் தெரிந்தது அதில்!

"உனக்கு லாஸ்ட் வார்னிங் குடுத்தும் அறிவில்லை...? சினிமாக் காத்தே இந்தக் குழந்தைங்க மேல படக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன்... இந்த சிடியெல்லாம் யார் வாங்கினது?" கோபத்துடன் இரைந்தான்.

"ஏன்... நானும் தயா சாரும்தான்..." அவள் முடிப்பதற்குள் அவன் சீறினான்.

"உனக்கு தான் அறிவில்லைன்னா, அந்த இடியட்டுக்குக் கூட புத்தி மழுங்கிடுச்சா? சே... இனிமே நீ அவங்களை வெளியே அழைச்சிட்டுப் போனா, எனக்குத் தெரியாம எதையும் வாங்கக் கூடாது... புரியுதா? ஏய் பசங்களா.... சினிமா பாத்தது போதும்... போய்ப் படிங்க..." அங்கிருந்த சிடிக்களை அள்ளி எடுத்தபடி வெளியேறினான்.

பதட்டமும், பரிதவிப்புமாய் அப்படியே தொப்பென கட்டிலில் சரிந்து அமர்ந்தவளிடம், அருகில் வந்த இரு பிள்ளைகளும் ஒட்டி நின்று கொண்டனர்.

இதைப் பற்றி தயாகரிடம் உடனே பேச வேண்டுமென்று தோன்றினாலும், வசீகரனும் பிள்ளைகளும் இல்லாத நேரமாகப் பார்த்துத்தான் பேச வேண்டுமென்று, அவள் முடிவெடுத்தாள்.

பிறகு, தேவியையும் மஞ்சுவையும் உறங்க வைத்துவிட்டு தன் அறைக்குச் சென்றபோது, ஏனோ உறக்கம் வர மறுத்தது.

* * * * *

**அ**ந்த நிமிடம், அவளையே நினைத்திருந்த வசீகரனுக்குள் மாலையில் நடந்த நினைவுகள்!

அவன் சிடிக்களுடன் கோபமாக வெளியேறித் தன் அறைக்குள் செல்லும்போது, அவனைத் தேடி வந்தார்அகிலாண்டேசுவரி.

"என்னப்பா அதெல்லாம்...?" ஆர்வத்துடன் விசாரித்தார்.

"இந்த சினிமா சிடி எல்லாம் வாங்கிட்டு வந்து குழந்தைங்களை கெடுக்கறாம்மா நீங்க அப்பாயிண்ட் பண்ணியிருக்கீங்களே... அந்த கவர்னஸ்! அதான் திட்டிட்டு எடுத்துட்டு வரேன்" வெறுப்புடன் கூறினான்.

"நீ நினைக்கிற மாதிரி இல்லப்பா அந்தப் பொண்ணு! ரொம்ப நல்லவ... வந்த ரெண்டு மாசத்துக்குள்ளே, தேவியையும் மஞ்சுவையும் எவ்வளவு சமத்தா மாத்தியிருக்கா தெரியுமா? எல்லா விதத்திலேயும் ஒபீடியண்டா அருமையா பசங்க மாறி இருக்காங்க... நான் பயந்த மாதிரி, பணத்துக்கு மயங்கி உங்ககிட்ட மத்த பொண்ணுங்களாட்டம் அவ பழகலை... அந்த விதத்திலயும், அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... ஆனா அவகிட்டே எதையும் நான் காண்பிச்சிக்கறதில்லை... இதெல்லாம் குழந்தைங்க பாக்கற படங்கள் தானேப்பா...?" என்று பரிந்து வந்தார்.

"ப்ச்... வேண்டாம்மா... சினிமாவோட நிழலே அவங்க மேல பட வேண்டாம்!" உறுதியான குரலில் கூறிவிட்டுத் தான் சென்றது, ஞாபகம் வந்தது.

அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கியபடி, உறங்க ஆரம்பித்தான் அவன்.

மறுநாள் மதியமே, தூரிகாவிற்கு, தயாகருடன் மீண்டும் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மதியம் சாப்பிட்டுவிட்டு அவள் அவுட் ஹவுசிற்குத் திரும்பியபோது, தயாகரே அவளை அழைத்தான்.

"தூரிகா... ஒரு நிமிஷம்.... நேத்து நடந்ததெல்லாம் அம்மா சொன்னாங்க..." அவளை தயக்கத்துடன் நிறுத்தினான் அவன்.

"ம்... உங்க தம்பி ஏன் இப்படி ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் வயலண்ட்டா ரியாக்ட் பண்றாருன்னு எனக்கு புரியலை சார்! அந்தச் சின்னக் குழந்தைங்க, தங்களோட சின்னச் சின்ன விருப்பங்களைக் கூட இந்த வீட்டில் நிறைவேத்திக்க முடியலை... ஃபேஷனா ட்ரெஸ் பண்றது, டான்ஸ் கத்துக்கறது.... சினிமா பாக்கறது... இதெல்லாம் தப்பா என்ன? சின்னப் பசங்க செய்யற இயல்பான விஷயம் தானே?

அவங்களோட சந்தோஷச் சிறகுகளை வெட்டி சிறகடிக்க விடாம செய்யறதில அவருக்கு அப்படி என்னதான் திருப்தியோ?... எனக்குத் தெரியலை!" சிறு கசப்புடன் அவள் கூறும்போதே, பெரும் குழப்பமும் ஆராய்ச்சியும் அவள் குரலில்!

"ம்... ஆனா அது ஏன்னு எனக்குத் தெரியும்..." ஒரு பெருமூச்சுடன் கூறினான் தயாகரன். அவன் முகத்தில், பெரும் விரக்தியும் வேதனையும் திடீரென்று தடம் பதித்திருந்தன.

"ஏன்...?"

"வேண்டாம்... அதை விட்டுடலாமே!" சலிப்புடனும் விரக்தியுடனும் அவன் பேச, இடைமறித்தாள் அவள்.

"அது போகட்டும் சார்! அது அவர் இஷ்டம்!.... ஆனா நீங்க மாறணும்... பசங்ககிட்ட இன்னும் அதிக நேரம் நீங்க செலவழிக்கணும்... அவங்களுக்குள்ளே ஒரு பாதுகாப்புணர்வை வரவழைக்கணும்... ஒரு அன்பான அப்பாவா நடந்துக்கணும்... முடியுமா?

எதுக்கெடுத்தாலும் சிடுசிடுக்கற சித்தப்பா... கண்டிக்கிற பாட்டி... கவனிக்காத அப்பா... எப்பவாவது பாசத்தைப் பொழியற தாத்தா!

இந்தக் குடும்பச் சூழல்லே, எதைச் செஞ்சாலும் யாராவது திட்டுவாங்களோ அடிப்பாங்க ளோன்னு பசங்க பயந்துட்டேதான் இருப்பாங்க...

அவங்களுக்குள்ளே ஒருவித பாதுகாப்பற்ற உணர்வு இருந்துகிட்டே இருக்கும்... புது மனுஷங்களோட இயல்பாப் பழக மாட்டாங்க... பேசப் பயப்படுவாங்க... அதுதான் இவங்க புதுசா வந்த கவர்னஸ் எல்லார் கிட்டயும் பயந்ததுக்குக் காரணம்!

இதெல்லாம் மாத்தணும்னா, குழந்தைங்க எதைப் பாத்து பயப்படுதோ அதுல பயப்பட ஒண்ணுமே இல்லைன்னு புரிய வைக்கணும்! பல புது விஷயங்களை பொறுமையா கத்துக் குடுக்கணும்... பிள்ளைங்க உங்க மேல வச்சிருக்கற இமேஜிக்கும், அவங்களோட செயல்களுக்கும் நெருங்கின தொடர்புண்டு! நீங்க தான் அவங்களோட ரோல்மாடலே!

அவங்களோட அதிக நேரம் செலவு பண்ணுங்க... அவங்களை இயல்பா இருக்கற துக்கும், சுதந்தரமா செயல்படவும் அனுமதிங்க! அவங்களுக்கும் நமக்கும் நடுவில ஆரோக்கி யமான ஒரு நட்பு வளையத்தை உண்டாக்குங்க...

சின்னச் சின்ன வேலைகளை அவங்களே செஞ்சிக்கற மாதிரி பழக்கணும்... சாரி! ரொம்ப லெக்சர் அடிக்கிறேனோ?.... கடைசியா ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... மனைவி இறந்தா, இப்படித் தான் இருக்கணும்னு கட்டாயமில்லை! கொஞ் சம் சியர்ஃபுல்லா இருக்கலாம்..." சிறு முறுவலுடன் ஆறுதலாகக் கூறினாள்.

வேகமாகத் திரும்பியவன், "மனைவி இறந்துட்டா பரவாயில்லை, மறந்துடலாம்... ஆனா ஓடிப் போனா... அந்த துரோகத்தை மறக்க நாளாகுமே..."

வறண்ட முறுவலுடன் அவன் கூறியபோது, உடனே மனம் விதிர்த்துப் போய்விட நிமிர்ந்தாள் அவள்.

மனதில் சடசடவென்று ஏதோ முறிந்தாற் போல் ஒரு உணர்வு வர, சோகம் கனத்த திரையாய் அவளை சூழ்ந்தது.

"சாரி..." மென்மையாக உச்சரித்தன, அவள் உதடுகள்.

"ப்ச்... பரவாயில்லை தூரிகா! எனக்கும் அந்த மன பாரத்தை எல்லாம் யார்கிட்டயாவது ஷேர் பண்ணினா பெட்டர்னு தோணுது... எல்லாத்தையும் அடக்கி அடக்கி இப்ப குமுறிட்டிருக்கேன்... அதனால உன்கிட்ட சொல்றேன்..." என்றபடி இறந்த காலத்திற்குள் தன் எண்ணங்களைத் தேட ஆரம்பித்தான் அவன்.

* * * * *

**ப**ழைய ஞாபகங்கள் கலங்கலாய் மனதில் வர ஆரம்பித்தன.

அவனுக்கும் அமுதாவுக்கும் நடந்த திரு மணம்... உடனே அவள் கருத்தரித்தது... ஒரு வருடத்திலேயே தேவியும் மஞ்சுவும் பிறந்தது... ஐந்தாவது மாதம் அவள் குழந்தைகளுடன் இங்கு தன் வீட்டிற்கு வந்து வசந்தத்தை அறிமுகப்படுத்தியது, எல்லாமே நினைவு வந்தன.

அமுதாவும், குழந்தைகளும் இங்கு வந்து ஒரு மாதத்தில், அவளுடைய உறவினர் ஒருவர் வரப்போவதாக ஒரு கடிதம் வந்திருந்தது.

தூரத்து உறவில் அவளுக்கு மாமாவென்றும் ஒரு திரைப்படப் புரொடக்ஷன் கம்பெனியில், புரொடக்ஷன் மேனேஜராக அவர் இருப்ப தாகவும், அமுதா கூறினாள்.

இங்கு மூணாறில் ஒரு ஷூட்டிங்கிற்காக அவர் வரவும், அந்தக் குடும்பமே அவரை மகிழ்ச்சி யுடன் வரவேற்றது.

ஒரு வாரம் அங்கிருந்தவர், தினமும் தன்னுடன் அமுதாவையும் ஷூட்டிங்கிற்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தார்.

அமுதாவிற்கு, சிறு வயதிலிருந்தே சினிமாவின் மீது மிகவும் ஆர்வம் அதிகம்.

இப்போது கூட, தினமும் ஏதாவது ஒரு சிடியை எடுத்து வந்து போட்டுப் பார்த்தபடி தன் பொழுதைக் கழிப்பவள் அவள்.

அதனால், தயாவுக்கும் எதுவும் தவறாகத் தெரியவில்லை.

ஆனால், ஒரு வாரமாகக் காலையில் கிளம்பி செல்பவள் இரவுதான் வருகிறாளென்று அகிலாண்டேசுவரி கூறியபோது, அவளை அழைத்துக் கண்டித்தான், அவன்.

"அமுதா! குழந்தைங்க ரெண்டும் ரொம்பச் சின்னவங்க... இப்படி நீ விட்டுட்டுப் போயிட்டா என்னதான் வேலைக்காரங்க பார்த்துக்கிட் டாலும், அது நீ கவனிக்கிற மாதிரி ஆகுமா? நீ ஷூட்டிங் பாத்ததெல்லாம் போதும்... நாளை யிலிருந்து நீ போக வேண்டாம்..." உறுதியாகக் கூறினான்.

அப்போது, அவளும் மறுப்பேதும் சொல்ல வில்லை... அமைதியாகவே இருந்தாள்!

ஆனால், பாம்பு தன் வாயில் அடக்கி வைத்திருக்கும் விஷத்தை நேரம் பார்த்து கக்குவதைப் போல், அவளும் தன் வாழ்க்கையில் செய்வாளென்று அவன் சிறிதும் எதிர்பார்க்க வில்லை.

மறு வாரத்தில் ஒரு நாள், எஸ்டேட் கணக்குகளைப் பார்த்துவிட்டு இரவு அவனும் வசீகரனும் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

அவன் தன் அறைக்குச் சென்றபோது, அங்கு அமுதாவைக் காணவில்லை... தேவி மட்டும்

உறங்கிக் கொண்டிருந்தாள்!

சிறிது நேரம் கழித்து, வேலைக்காரி பரிமளம் மஞ்சுவைத் தூக்கி வந்து படுக்கையில் படுக்க வைக்க, அப்போதுதான் அவளிடம் கேட்டான் தயாகர்.

"அமுதா எங்கே பரிமளம்?"

''தெரியலிங்கய்யா! காலையில அவங்க மாமாவோடப் போனாங்க... இன்னும் வரலைய்யா..." என்றபடி வெளியேறினாள்.

உடனே தன் தாயிடம் சென்று கேட்டபோது, "என்னப்பா பண்றது? நான் சொன்னா அவளுக்கு கோபம் வருது... அதான் விட்டுட்டேன்... வந்துடுவா..." கவலையுடன் கூறினார்.

கோபத்துடன் தன் அறைக்கு அவன் சென்றபோதுதான், அவனுடைய செல் அழைக்க ஆரம்பித்தது.

எடுத்தவுடனேயே எந்த சப்தமும் இல்லாமல் போக, நம்பரும் புதிதாக இருக்கவே, "ஹலோ... ஹலோ'' என்று பலமுறை அவன் பேசியும் பலனில்லை.

பிறகு அவன் வைத்துவிட உடனே மறுபடி மணியடித்தது... எடுத்த போது அமுதா தான் பேசினாள்!

"என்னங்க... நான் மாமாவோடப் போறேன்! எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கலை... குழந்தைங்களை நீங்களே வளர்த்திடுங்க... எனக்கு சினிமாவுல நடிக்கணும்னு சின்ன வயசிலிருந்தே ரொம்ப ஆசை... இப்ப அந்த வாய்ப்பு வந்திருக்கு... அதை யாருக்காகவும், எதுக்காகவும் கைவிட நான் தயாரா இல்லை... என்னை புரிஞ்சிக்கங்க..." என்றபடி லைனைத் துண்டித்தாள்.

ஆனால், அவன் தலையில்தான் மின்னலாய் ஒளிராமல்... சப்தமாய் முழங்காமல்... பெரிதாய் ஒரு இடி விழுந்தது.

அப்படியே ஒய்ந்து போனவனுக்குள், எதிர்காலமே பெரும் கேள்விக் குறியாய்!

உடனே ஓடிச் சென்று வசீகரனிடம் கூறியபோது, அவன் கொதித்துப் போனான்.

போலீஸுக்குப் போய் கம்ப்ளெயிண்ட் கொடுத்து, அவளை மீட்டு வரலாமென்றான்.

பெரியவர்கள் இருவரும் செய்வதறியாது தவித்து நின்றனர்... ஆனால் தயாகரன் தான் மறுத்து விட்டான்.

அவளை அழைத்து வந்தாலும், சினிமா மோகத்தில் மீண்டும் ஒட மாட்டாள் என்பது என்ன நிச்சயம் என்று தோன்ற, எந்த நடவடிக்கைக்கும் உடன்பட மறுத்து விட்டான்.

தன்னையும் குழந்தைகளையும் மறுத்து, அவள் சினிமாக் கனவே பெரிதென சென்றது... அவனுடைய ஆண்மைக்கும், தன்மானத்திற்கும், சுயகௌரவத்திற்கும் பெரிய அடியாய்!

மறு நாளிலிருந்து குழந்தைகளை கவனிக்க ஆட்கள் ஏற்பாடு செய்யப்பட, அவன் உலகமே அந்த அறைதானென்று ஆனது.

வெளியே யாரையும் ஏறிட்டுப் பார்க்க தைரியமின்றி, தனக்கென்று ஒரு போதை உலகத்தை உருவாக்கிக் கொண்டு, அதற்குள் தன்னை பட்டுப் புழுவாய் சுருக்கிக் கொண்டான் அவன்.

இப்போது, அமுதா சினிமா உலகில் ஒரு கவர்ச்சித் தாரகையாய் ஒளிர்கிறாள்.

தயாவின் உலகம்தான், இருண்டு போய் தனிமைச் சிறையாய்!

நினைவுகளின் சுழற்சியிலிருந்து மெதுவாக நிமிர்ந்த போது, அவனுடைய கடந்த கால நினைவலைகள், சுனாமியாய் அவனை சுழற்றிப் போட்டதில் பெரிதும் ஓய்ந்திருந்தான் அவன்!

* * * * *

## 9

தியாகரன் எல்லாவற்றையும் கூறி முடித்ததும், அந்தத் தாங்க முடியாத அதிர்ச்சியிலிருந்து, தாரிகாவால் மீளவே முடியவில்லை.



மனம் பலப்பல எண்ணியது..! தாய்மை என்பது பெரும் வரம் என்பார்களே... அது ஏன் இங்கு பொய்த்துப் போனது? தாய்மையை விட அரிதாரம் பூசிய போலி வாழ்க்கை பெரிதாகி விட்டதா? ஒரு பெண்ணால் எப்படி இவ்வளவு சுயநலத்துடன் இருக்க முடிந்தது... பல கேள்விகளால் மனம் குறுகிப் போனது.

அவளுடைய எண்ண ஓட்டத்தைத் திடீரெனத் தடை செய்தது, தயாவின் குரல்.

"தாரிகா! இப்பப் புரியுதா வசீயோடக் கோபத்துக்கும் என்னோட நிலைமைக்கும் காரணம் என்னன்னு? நான் வெளியே எங்கேயுமே போறதில்லை... ஆனா அவன்தான் இங்க எல்லாமே! வெளியே போறப்ப், போஸ்டர்லே அவ முகத்தைப் பாக்கிறப்ப... நாலு பேர் அவனைக் கேக்கிறப்ப, அவன் எவ்வளவு பாதிக்கப்பட்டிருப்பான்...?"

அந்தக் கேள்வி முகத்திலறைய, அந்த நிமிடம் உண்மை உறைத்தது.

அந்தக் குழந்தைகளின் மீது, சினிமா எனும் மாயக் கண்ணாடியின் நிழல் கூடப் படாமல் வசீகரன் வளர்க்க முயலும் தீவிரம் புரிந்தது.

அவனைத் தவறாக எண்ணியதற்கு மனம் தன்னையே இடித்துரைக்க, எந்த ஒரு விஷயமுமே தனக்கென்று வந்தால்தான் அதன் வலியையும், வீர்யத்தையும் பரிபூரணமாக உணர முடியுமென்ற உண்மையும் புரிந்தன.

சட்டென்று உடைந்து போனது, மனது!

தயாவின் குரல், மீண்டும் அவ்ளை இவ்வுலகிற்கு மீட்டது.

"ஓடிப் போனதுக்கு அப்புறமும் என்னை அவ நிம்மதியா வாழ விடலை... ஒரு வருஷம் கழிச்சி ஒரு நாள், முழு போதையோடத் தள்ளாடிட்டு வந்து நின்னு விவாகரத்து வேணும்னு சத்தம் போட்டா....

வெறுத்துப் போய் அவ கேட்ட விடுதலைப் பத்திரத்துல, உடனே கையெழுத்துப் போட்டு குடுத்துட்டேன். மறு நிமிஷமே தன் மாமாவோடயே திரும்பிப் போயிட்டா... குழந்தைகளை திரும்பிக் கூடப் பாக்கலை...

ப்ச்! அதிலிருந்து வசீக்கு சினிமா, நடிகை கள்னாலே கடும் வெறுப்பு! பெண்களையே வெறுக்க ஆரம்பிச்சிட்டான் அவன்! என் வாழ்க்கையிலே நடந்த பாதிப்பால, கல்யா ணம்கிற ஒரு சடங்கையே இப்ப அவன் வெறுக்கிறான்...

என் வாழ்க்கைய அழிச்சதே சினிமாங்கற மாயக் கவர்ச்சிதான்னு அவனுக்குள்ளேயே ஒரு எண்ணம் ஆழப் பதிஞ்சிடுச்சி... எந்த கெட்டப் பழக்கமும் இல்லாம 'டீ டோட்டலரா' இருந்து மாறிப் போன நானும், அதுக்கு காரணமான அவளும், அவனை ரொம்பவே மாத்திட்டோம்... எப்பவுமே சிடுசிடுப்பான கோபத்தோட, ரொம்ப இறுக்கமானவனா மாறிட்டான்..." துயரம் பொங்கக் கூறினான்.

ஒரு புயல் வந்து சேதப்படுத்திவிட்டுப் போன மிச்சங்கள் தெரிந்தன அவன் முகத்தில்... அவளுக்குள்ளும் அதே பாதிப்புகள்!

"உங்க மனைவி என்ன பெயரிலே சினிமாவில நடிக்கிறாங்க சார்?" மெதுவாகக் கேட்டாள் அவள்.

"ம்... சதுர்முகி!" ஒரு பெருமூச்சுடன் கூறிய அவன் கண்களில், இனம் புரியாத ஒரு சோகம் தென்பட்டது.

'சதுர்முகி' என்ற பெயரைக் கேட்டதுமே மனதில் ஒரு விதிர்ப்பு வர, ஒரு முறை அவளை நேரில் பார்த்த நினைவுகள், மனதில் தடம் பதித்தன.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், "சாரி தயா சார்... இத நான் சத்தியமா எதிர்பார்க்கலை..." மெதுவாக முணுமுணுத்து விட்டு தன் அவுட் ஹவுசிற்குள் சென்று கதவை அழுந்த மூடிக் கொண்டாள் அவள்.

அந்தக் குழந்தைகளை நினைத்தால், இன்னும் வேதனையாய்...

அந்த நிமிடம், தன்னைப் போல் அனாதரவாய் நிற்கும் குழந்தைகளுக்கு, தான் இன்னும் அனுசரணையுடன் இருக்க வேண்டுமென்று, மனதில் உறுதி பூண்டாள் தாரிகா!

* * * * *

## தாத்தாக்களின் உடற்பயிற்சி

**உ**டற்பயிற்சி என்றால் அது இளைஞர்களுக்கு மட்டுமல்ல தாத்தாக்களும் செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டு உள்ளது. ஜப்பானில் இப்போது இந்த நிலை அதிகரித்து வருகிறது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் தாத்தாக்கள் உடற்பயிற்சி செய்யும் காட்சி நடந்தது. இதில் 80 வயதை கடந்த ஒருவர் 'டம்புல்ஸ்' பிடித்து உடற்பயிற்சி செய்து அனைவரையும் அசத்தினார்.

- சாமி.

**அ**ன்றிரவு, மெதுவாக வெளியே வந்து அந்தத் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறு செயற்கை குளத்தின் அருகே அமர்ந்தாள் தூரிகா.

அந்தத் தண்ணீரில் பிம்பமாய் விழுந்திருந்த முழு நிலவு, அதிர்வலைகளால் நடனமாடியபடி அழகான தங்கக் கவிதை போலிருந்தது.

'தான் ஒளி வீசச் சொந்தமாய் வெளிச்சமின்றி சூரியனிடம் இரவல் வாங்கி ஒளிர்கிறோமே வென்று நிலவு என்றாவது வருத்தப்படுமா?' அவள் மனதிற்குள் சிறு கேள்வி துளிர்விட்டது.

சட்டென்று ஒரு கரிய நிழல் தண்ணீரில் தெரிய, பதட்டத்துடன் நிமிர்ந்தாள்.

இரவு உடையில் வசீகரன் அங்கு நின்று கொண்டிருந்தான்.

பார்வை அவளையே கூர்மையாய் ஊடுருவ, விழிகள் வைரங்களாய் ஒளிர்ந்தன.

நிலவின் சாயம் அவன் மேல் தங்க நிறத்தைப் பூசியிருக்க, செதுக்கினாற்போன்ற அவன் முகமும், கருத்தடர்ந்த சிகையும் மீசையும், அசாத்திய உயரமும், கம்பீரமும் ஒரு கிரேக்கச் சிற்பத்தை அவளுக்கு நினைவுபடுத்தின.

முதன் முதலாய், அவள் மனதில், புரிந்த மொழி மறந்ததைப் போல் ஒரு நிலை வந்தது...!

அவள் விழிகளிலும், சட்டென்று ஒரு நிலவு உதித்து, பிறகு கவிதைகள் சிந்தின.

'கர்வமும் திமிரும் இருக்கற மனசால யாரையுமே கவர்ந்திழுக்க முடியாதுன்னு நினைப்பேன்... ஆனா உன் திமிரும் கர்வமுமே என்னை வீழ்த்திடுமோன்னு ரொம்ப பயமா இருக்கு...!' விழிகள் சன்னமாய் முறுவலிக்க, அவள் மனம் செல்லமாய் சிணுங்கியது.

ஆனால், முகம் இறுகிவிட, சீற்றத்துடன் நின்றிருந்தான் அவன்.

தன்னையறியாமலே தனக்குள் கிளர்ந்தெழுந்த உணர்வுகளை அடக்கியவள், வேகமாக எழுந்து உள்ளே சென்றாள்.

ஆனால், பின்புறம் அவனுடைய பார்வை அம்புகள் தன்னைத் துளைப்பதை, அவளால் திரும்பாமலே உணர முடிந்தது.

ஏனோ தூரிகாவால் அன்றிரவு உறங்கவே முடியவில்லை... அவனுடைய திடீர் கோபத்தின் காரணம் புரியாமல் புழுங்கியது மனம்...!

* * * * *

**ம**றுநாள் காலையில் அவள் எழும்போதே, மழை பெய்து நின்றிருந்த வானம் சிறிது சோகமூட்டத்துடனிருந்தது.

வாக்கிங் செல்வதற்காக எழுந்து வெளியே வந்தபோது, நனைந்திருந்த பச்சைப் புல்வெளி வெல்வெட்டாய் பாதை விரித்திருக்க, மனதின் சந்தோஷம் முகத்திலும் விழிகளிலும் கசிந்தன.

இயற்கையின் எந்த முகத்தைப் பார்த்தாலும் மனதின் ஓரம் சேமித்து வைத்து, தேவைப்படும் போது கவிதையாய் வெளிப்படுத்தும் கலை, ஊற்றாய் பொங்கி வந்தது.

தொலைதூர வானத்தில் தேவதைகளின் வண்ண வாழ்த்து மடலாய், வானவில்லொன்று அழகாகத் தெரிய, உடனே மனம் ஏக்கமாய் முணுமுணுத்தது.

'அழகிய வானவில்லை... எப்போதாவது மாலையாய் சூடுகின்ற வானமே... நீ... அதை நிரந்தரமாகச் சூடிக் கொள்ள மாட்டாயா?' என்று!

திடீரென்று, 'அவளுடைய மௌன தவத்தை உறுதியான ஒரு காலடியோசை கலைக்கத் திரும்பினால், அங்கு வசீகரன் ஜாகிங் வந்து கொண்டிருந்தான்.

ஏனோ அன்று அவனைக் கண்டதும், மனதில் முதல் சூரியனின் உதயம்!

வாழ்க்கையில், முதன் முதலாக காதல் பாரம் இதயத்தில் கனமாகப் பரவியது.

வேகமாகத் திரும்பியவள், தன் மனதை மறைத்தபடி வேறுபுறம் சென்றாள்.

தன்னைக் கண்டதும் அவள் முகம் திருப்பிச் செல்வதை, சுளித்த புருவங்களுடன் அளவிட்டவனது முகம், ஏனோ உடனே சுருங்கி இறுகியது.

மறுநாளிரவு சாப்பிடும் நேரத்தில், ஓரக் கண்ணால் அவள் வசீகரனை ஆராய்ந்தாள்.

முதன் முதலாக அந்த முகத்தில் தெரிந்த ஒரு பாதுகாப்பற்ற உணர்வும், அலைப்புறுதலும், அவளைப் பெரிதும் சஞ்சலத்தில் ஆழ்த்தின.

ஆனால், அவனோ அவளிருந்த பக்கம் கூடத் திரும்பவில்லை.

இரவு, பிள்ளைகளை உறங்க வைத்து விட்டு கனத்துப் போன மனசுடன் அவுட் ஹவுஸிற்குச் சென்றாள்.

* * * * *

## 10

**கா**லம் தன் போக்கில் செல்லும் பறவையாய் விரைய, இப்போதெல்லாம் தேவியும், மஞ்சுவும் தங்கள் தந்தையிடம் உரிமையுடன் பழக ஆரம்பித்திருந்தனர்.

தினமும் மாலை நேரங்களில், அவனுடன் இருவரையும் வாக்கிங் செல்லப் பழக்கியிருந்தாள் தூரிகா.

அவர்களிடையே புதிதாய் உருவாகியிருந்த அன்னியோன்யத்தையும், நெருக்கத்தையும் கண்ட கிருபாகரன், ஒரு நாள் அவளை தனியே அழைத்துப் பேசினார்.

அன்று பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி

விட்டு, அவள் திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

அப்போது, வெளியே செல்லக் கிளம்பி வந்து காரில் ஏறப்போன கிருபாகரன் அவளை அழைத்தார்.

"தூரிகா! ரொம்ப நன்றிம்மா! இந்த அஞ்சு வருஷத்தில எங்களால சாதிக்க முடியாத ஒரு நல்ல விஷயத்தை நீ மூணே மாசத்துல செஞ்சிருக்கே! நானும் எவ்வளவோ முயற்சி பண்ணியிருக்கேன்... தேவியையும், மஞ்சுவையும் தயாவோட நெருங்க வைக்கவே முடிஞ்ச தில்லை... அவனும் ரொம்ப விட்டேத்தியா இருப்பான். பசங்களும் பயப்படுவாங்க! எல்லாத்தையும் மாத்தினதுலே உன்னோட பங்கு தான் அதிகம்னு நான் நினைக்கிறேன்."

கம்பீரமான குரலில், நன்றி தெரிவித்தார்.

அவள் பதில் கூறும் முன்பே, காரில் முன்புறம் அமர்ந்திருந்த வசீகரனின் குரல் அவளைத் தடுத்தது.

"அப்பா... லேபர் யூனியன் மீட்டிங்குக்கு டைம் ஆச்சு!" இறுகிய குரலில் நினைவுபடுத்தினான் அவன்.

தூரிகாவிற்கு மனதிற்குள், ஏதோ உடைந்தாற் போல்...!

"அது என்னோட ட்யூட்டி சார்! தேவியையும் மஞ்சுவையும் மாத்தினது நான் இல்லை... அவங்கப்பாவோட அன்பும் அக்கறையும் தான்!" சிறு முறுவலுடன் கூறினாள்.

"தன்னடக்கத்தோட நீ பேசினாலும், அதுக்கு உண்மையான காரணம் நீதான்னு எங்க எல்லாருக்குமே தெரியுமே... அப்படித்தானே வசீ...?" அவனையும் துணைக்கழைத்தார்.

"ப்ச்... அப்பா... ரொம்ப லேட்டானா அப்புறம் லேபரர்ஸ் எல்லாம் டென்ஷனாயிடு வாங்க... வாங்க! நீங்க எல்லா விஷயத்திலயும் ரொம்ப பங்க்சுவல்னு பேரு... இன்னிக்கு அதை மாத்திடாதீங்க!" மெல்லிய குரலில் சலித்துக் கொண்டான்.

"நீங்க கிளம்புங்க சார்..." பவ்யத்துடன் கூறிவிட்டு உள்ளே சென்றாள் அவள்.

முகம் திருப்பாமலே அவளைத் தவிர்த்த அவனுடைய பாராமுகமும், முகத்திலறைவது போல் வந்த நிராகரிப்பும், இப்போதெல்லாம் அவளுக்குப் பழகி விட்டன.

இதழில் ஜனித்திருந்த ஒரு சோகப் புன்ன கையுடன், உள்ளே சென்றவளை வழி மறித்தான் தயாகரன்.

"தூரிகா! இப்பதான் போன் வந்தது... சென்னையில நீ வளர்ந்த ஆசிரமத்து ஃபாதர் ஆண்டனி இறந்துட்டாராம்... சாரி!" மெதுவாகக் கூறினான்.

உடனே விதிர்த்துப் போனது மனது...! ஃபாதரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இதயம் உருகிப் பிரார்த்தனை செய்தது.

திடீரென்று மனதிற்குள் ஒரு இரும்புக் குண்டை வைத்தாற்போல் கனக்க, இறப்பின் கொடூரமான பரிணாமமும், இழப்பும், மூர்க்கமாய் உட்புகுந்தன.

* * * * *

**அ**ன்று மாலையில், தயாகரனின் அனுமதி யுடன் தேவிக்கும் மஞ்சுவிற்கும் சில கீர்த்தனை களை அவள் சொல்லிக் கொடுத்தபோது, வசீகரனின் நினைவுகளே அவளை அதிகம் ஆக்கிரமித்திருந்தன.

இரவு அனைவரும் சாப்பிடும்போது, தேவிக்கும், மஞ்சுவிற்கும், அவள் சாப்பிட உதவி செய்து கொண்டிருந்தாள்.

அப்போதுதான், அகிலம் கிருபாகரனிடம் ஃபாதர் ஆண்டனி இறந்த விஷயத்தைக் கூறினார்.

அதைக் கேட்டதும், அவர் வருந்தியபடி தூரிகாவிடம் திரும்பினார்.

"ஏம்மா... தூரிகா... நீ ஏதும் ஃபாதரோட ஃப்யூனரலுக்குப் போகணுமா? அப்படின்னா சொல்லு... நான் ஏற்பாடு பண்றேன்" என்றார்.

"இல்லை சார்... நான் போகலை! அப்புறம் தேவிக்கும் மஞ்சுவுக்கும் கஷ்டம்" தயங்கியபடி அவள் சொல்ல, மெதுவாகத் திரும்பி அவளை நோக்கிய வசீகரனின் முகத்தில், சிறு ஆராய்ச்சி!

பிறகு குழந்தைகளைத் தூங்க வைத்துவிட்டு அவள் வெளியே வந்தபோது, அகிலாண்டேசுவரி அவளுக்காகக் காத்திருந்தார்.

"தூரிகா! நான் முதல்லே உன்னை ரொம்பத் தப்பா நினைச்சிட்டேன்... தேவியையும், மஞ்சுவையும் நீ நிறைய மாத்தியிருக்கே... அன்பா கவனிச்சிக்கறே! அதுக்கே உனக்கு நான் நன்றி சொல்லணும்..." மிகுந்த உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

"இதுல என்னம்மா இருக்கு? எனக்கு அவங்க ரெண்டு பேரையும் ரொம்பப் பிடிச்சிருக்கு! நாம அன்பைக் கொடுத்தா பதிலுக்கு அன்புதானே கிடைக்கும்... நீங்க பெரியவங்க... ஏன் நன்றியெல்லாம் சொல்லிகிட்டு..." சிறு முறுவலுடன் கூறினாள்.

"அப்புறம்... இன்னொரு விஷயம்! என் மனசுல இருக்கற ஒரு ஆசையை முதன் முதலா உன்கிட்டதான் கேக்கறேன்... இது வரைக்கும் வந்த கவர்னஸ் எல்லாருமே எங்கே தயாவைத் தன் கைக்குள்ளே போட்டுப்பாங்களோன்னு நான் பயந்திருக்கேன்... ஆனா இப்ப கேக்கறேன்... உனக்கு விருப்பமிருந்தா நீ தயாவை கல்யாணம் செஞ்சுக்கிட்டு, அந்த பிள்ளைகளுக்கு நிஜமான ஒரு தாயா மாறலாம்!" மெல்லிய குரலில் கேட்டார்.

அந்தகணம் வசீகரனின் நினைவுகள் பனிச் சாரலாய் உள்ளே பரவ, காதலை அடகு வைத்து எதிர்காலத்தை வாங்க மனம் ஒப்பவில்லை.

மனதில் முதல் காதல் மொட்டவிழ்க்க ஆரம்பித்திருக்க, அவளுக்குள் கம்பீரமாய் விசுவரூபம் எடுத்தது... அவன் உருவம்!

"என்னம்மா யோசிக்கறே... தயாகிட்டே நான் பேசட்டுமா" அகிலம் கேட்டார்.

"சாரிம்மா... எனக்கு அந்த மாதிரி ஏதும் விருப்பமில்லை... அவரை ஒரு பிரதர் ஃபிகராதான் என்னால நினைக்க முடியுது... தப்பா நினைக்காதீங்க... தயா சாருக்கேத்த மாதிரி ஒரு நல்ல பொண்ணாப் பாருங்க... அவரோட நல்ல மனசுக்கு, இனி அவர் வாழ்க்கை சந்தோஷமாவே இருக்கும்" தர்ம சங்கடத்துடன் கூறினாள்.

அந்த நிமிடம், அந்த அறை வாசலில் நின்று அவர்கள் பேசுவதை மூச்செடுக்காமல் கவனித்திருந்த வசீகரனுக்குள், பெரும் பாரம் இறங்கிய நிம்மதி!

அவள் பணத்திற்காக வந்தவளில்லை... பொய்த்தும் போகவில்லை என்ற ஒரு வித நிறைவும், திருப்தியும் மனதில் வேகமாக இழை கோர்த்தன.

* * * * *

## 11

அந்த வாரம், தேவியும் மஞ்சுவும் பள்ளி விழாவில் 'பேன்சி டிரஸ் காம்படிஷனி'ல் பங்கேற்றதால், அவளுக்கும் நேரம் சரியாக இருந்தது. அவர்களுக்கான உடைகளை வாங்குவதிலும், போடும் வேடத்திற்கேற்ப அவர்களை தயார்படுத்து வதிலும் முனைந்திருந்தாள்.

அந்த நேரம் வசீகரனுடைய நண்பன் ஒருவன் வெளிநாட்டிலிருந்து வந்து தங்கப் போவதாக தயாகரன் கூறியிருந்தான்.

ஆனால், அவளும் குழந்தைகளும் புரோகிரா மிற்காக காலையும் மாலையும் ரிகர்சல் செய்ததில், எவரையும் சந்திக்க முடியவில்லை.

முதன் முதலாக பள்ளி விழாவில் பங்கேற்க தன் பாட்டியிடமும் சித்தப்பாவிடமும் அனுமதி பெற்றுத் தந்ததற்காக, குழந்தைகள் இருவருமே அவளை அணைத்து முத்தமிட்டு நன்றி கூறினர்.

அன்று, புரோக்ராம் முடிந்து தேவி முயல் உடையிலும், மஞ்சு பாரத மாதாவாகவும் பரிசுடன் வந்தபோது, தயாகர் இருவரையும் பெருமையுடன் அணைத்துக் கொண்டான்.

இருவரும், தாம் பேசியவற்றை எல்லோருக்கும் நடித்துக் காட்டினர்.

தேவி முடிக்க, மஞ்சு பாரத மாதாவாக



வீறுகொண்டெழுந்தாள்.

"இந்த சமுதாயத்தில் பெண்களைத் தாயென் கின்றனர்! ஆனால் பல ஊர்களில் பெண் சிசுவா?... கர்ப்பத்திலேயே ஜனனம் மறுக்கப்படு கின்றது...! புதிதாய் பிறந்த் பெண் பூவா!... இந்த சமூகத்தில் வாழும் உரிமை பறிக்கப்படுகிறது...! பருவ வயது வந்த பெண்ணா?... எதற்கு படிப்பென்று கல்வி நிறுத்தப்படுகின்றது! திருமணம் முடிந்ததா?... அவளுடைய திறமைகள் நான்கு சுவர்களுக்குள் முடக்கப்படுகின்றன...! ஹூம்! அன்னையர் தினம் கொண்டாடு கிறோம்... பெண்மையை புழுதியில் அல்லவா வீசியிருக்கிறோம்! நன்றாக யோசியுங்கள் நண்பர்களே...!"

மழலைக் குரலில் மூச்சு வாங்க அவள் முடித்தபோது, அகிலம் ஓடிவந்து அவளை அணைத்துக் கொண்டார்.

"யாருடா இதெல்லாம் உனக்கு சொல்லித் தந்தது?... டீச்சரா?"

கிருபாகரன் ஆர்வத்துடன் கேட்டதும், "இல்லை! ஆன்ட்டி தான் தாத்தா!" என்று தூரிகாவைக் கைகாட்டினாள் மஞ்சு.

உடனே, அவர் அவளைப் பாராட்டினார். அதை மென்மையாக மறுத்தாள் அவள்.

"நான் சொன்னாலும், இவ்வளவு கஷ்டமான பெரிய டயலாக்கை மஞ்சு சொன்னதுதான் ரொம்ப அதிசயம் சார்...ஸோ உங்க பாராட்டு எல்லாம், அவளுக்குத்தான் உண்மையா சேரணும்" என்றாள் தூரிகா கூச்சத்துடன்.

வசீகரனின் முகத்தில் கூட, தன் இறுக்கத்தை தொலைத்து சட்டென்று அத்திபூத்தாற்போல், ஒரு இயல்பான முறுவலும், வியப்பும் படர்ந்தன.

அதைக் கண்டபோது, அவன் மந்திரப்

## முகம் பளபளக்க...

ஒரு கைப்பிடி அளவு ரோஜா இதழ்களை எடுத்து அதை நன்றாக பசைபோல் அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு சந்தனத் தூளை சேர்த்து கலக்கி முகத்தில் தடவவேண்டும். 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவினால் முகம் பளபளக்கும்.

- சாமி.

புன்னகை நீர்வீழ்ச்சியாய் அவள் மனதிலும் பொங்கி பரவியது.

ஆனால், உடனிருந்த வசீகரனின் நண்பன் தினேஷுக்கோ, அவளைக் கண்டதும் சிறு அதிர்ச்சி!

அதை மறைத்தபடி, அவளையே கவனித்துக் கொண்டிருந்தான், அவன்.

அவளை முன்பு பார்த்த ஞாபகம், மனதில் கலங்கலாய் நிழலாடியது.

"நீங்க... மிஸ் தூரிகா தானே?" ஆச்சர்யத்துடன் கேட்டான் தினேஷ்.

"ஆமாம்... என்னை... உங்களுக்கு எப்படித் தெரியும்?" சிறு கலக்கத்துடன் கேட்டாள் அவள்.

"உங்களை எப்படி என்னால மறக்க முடியும்? உங்களோட பர்த் டே அன்னிக்கு தான் நான் ஃபாரீன் போறதுக்கான ஆஃபரே எனக்கு கிடைச்சது... ஆனா நீங்க எப்படி இங்கே... அதுவும் தேவி. மஞ்சுவுக்கு கவர்னஸா? புரியலையே?"

அவன் குழப்பத்துடன் கேட்டவுடன், அவள் கையிலிருந்த புத்தகப் பை பயத்துடன் நழுவிக் கீழே விழ, முகம் ரத்தப் பசையின்றி வெளுத்தது.

அதை மறைத்தபடி குனிந்து, கீழே விழுந்தவற்றைச் சேகரித்தவள், வேகமாகப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, அவர்களின் அறைக்குச் சென்று விட்டாள்.

அவள் மனதில், போர்க்களமாய் பழைய நினைவுகள்!

பிறகு அவர்களை உடை மாற்றி சாப்பிட வைத்து, உறங்கச் செய்த பிறகும், இதயம் பலமாக முரசு கொட்டியபடியே இருந்தது.

சாப்பிடப் பிடிக்காமல், பாலை மட்டும் குடித்துவிட்டு அவுட் ஹவுஸிற்குச் சென்றபோது, மனம் பதட்டத்துடன் துடித்துக் கொண்டிருந்தது.

தான் யார் என்று தினேஷ், வசீகரனிடம் கூறிவிடுவானோ... உண்மை தெரிந்தால் தன்னை அவன் மேலும் வெறுப்பானோ என்ற விதிர்ப்பும், பரிதவிப்பும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

* * * * *

அதே நேரம், தினேஷ் வசீகரனிடம் அவளைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தான்.

"வசி! நீங்க எல்லாரும் நினைக்கிற மாதிரி, அந்தத் தூரிகா சாதாரணமா ஆசிரமத்துல வளர்ந்தவ இல்லை... எங்கேயோ தப்பு நடந்திருக்கு! ரெண்டு வருஷத்துக்கு முந்தி அவளோட பதினெட்டாவது பிறந்த நாளை ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே செலிப்ரேட் பண்ணினப்ப நானே அதுக்குப் போயிருந்தேன்...

என் பெரியப்பா ஒரு சினிமா ஃபைனான்சியர்னு சொல்லியிருக்கேன் இல்லை... அவரோட ஃப்ரண்டைப் பார்த்துப் பேச என்னை அங்கே அழைச்சிட்டுப் போயிருந்தாரு... அப்போதான் எனக்கு இந்த ஃபாரீன் ஆஃபரே கிடைச்சது... அன்னிக்கும் தேவதை மாதிரி இருந்தா இந்தத் தூரிகா! அவ அழகும், வித்தியாசமான பெயரும் என் மனசுல நல்லாப் பதிஞ்சிடுச்சி!"

"டேய், நீ உண்மையாவா சொல்றே? வேற யாரையாவது கன்ஃப்யூஸ் பண்ணிக்கலையே?" அவசரமாகக் கேட்டான் வசீகரன்.

"இல்லைடா... ப்ராமிஸ்! அப்புறம் உனக்கு இன்னொரு ஷாக்கிங் நியூஸ்... அவ யாரோட பொண்ணு தெரியுமா! முன்னாடி பெரிய ஹீரோயினா இருந்து, அப்புறம் அம்மா கேரக்டர்ல எல்லாம் நடிச்சி சமீபத்துல ஒரு கார் விபத்துல இறந்து போனாங்களே... நடிகை பாரிஜாதத்தோட பொண்ணுதான் இவ... எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு!"

சுனாமியும், சுழற்காற்றும் சேர்ந்து தாக்கியதைப் போன்ற அதிர்ச்சியில், நிலை தடுமாறிப் போனான் வசீகரன்!

விழிகள் செந்நிற மாணிக்கக் கல்லாய் ஒளிர, முகம் சீற்றத்துடன் சிலையாய் இறுகியது!

அவன் முகத்தில் தெரிந்த கடினத் தன்மையையும், ரௌத்ரத்தையும் கண்டு தினேஷே ஒரு கணம் ஆடிப்போனான்.

"வசீ... ஏன்டா இவ்வளவு கோபமாயிட்டே... நான் சொன்னது, இந்த அளவுக்கு உன்னை பாதிக்கும்னு நான் எதிர்பார்க்கலை... சாரி!" இறங்கிய குரலில் கூறினான்.

"சே... ஒரு சின்னப்பொண்ணு... அவ எங்களையெல்லாம் பொய் சொல்லி ஏமாத்தலாம்னு ப்ளான் பண்ணி இங்கே வந்திருக்கா... அவளை நம்பி ஏமாந்து போயிட்டமே...அதான்!"

அருகிலிருந்த டீபாயில், அவன் தன் கை விரல்களை மடித்து வேகமாகக் குத்த, அந்த

இடமே அதிர்வது போல்!

தான் ஏன் அவனிடம் இந்த உண்மையைச் சொன்னோம் என்று வருந்தியபடி, ஊருக்குக் கிளம்பினான் தினேஷ்.

தன் அறைக்கு வந்து படுத்த தூரிகாவிற்கு, உறக்கம் வர மாட்டேன் என்று அடம் பிடிக்க, மெதுவாகத் தூங்க ஆரம்பித்தாள் அவள்.

சுருதி விலகாத சந்தமாய், அவன் நினைவுகள் கனவுகளாய்!

* * * * *

திடீரென்று, நித்திரைச் சிதைவு ஏற்பட்டு சோம்பலுடன் கண் விழித்தபோது, வாசல் கதவு படபடவென்று தட்டப்படுவது புரிந்தது.

பதட்டத்துடன் யாருக்கு என்ன ஆபத்தோ வென்று அவசரமாக எழுந்து கதவைத் திறந்தால், அங்கு பசித்திருக்கும் புலியாய், ரௌத்ரமாய் நின்றிருந்தான் வசீகரன்.

ஒரே ஒரு கை அசைவில் அவளைத் தள்ளி விட்டு, வேகமாக உள்ளே நுழைந்து கதவை அறைந்து சாத்தினான்.

"ஏய்... எங்களை எல்லாம் என்ன நினைச்சிட்டிருக்கே நீ? பொய் சொல்லி வீட்டுக்குள்ளே நுழைஞ்சி எதைத் திருடத் திட்டம் போட்டிருக்கே? அதான் ஆரம்பத்துல யிருந்து ரொம்ப நல்லவளா நடிச்சியா...? பெரிய நடிகையோட மகளாச்சே... அந்தப் புத்தி எங்கே போகும்...?" மிருகமாய் உறுமினான்.

"நான்... மிஸ்டர் வசீகரன்... நீங்க நினைக்கற மாதிரி..."

"போதும்..." இடியாய் ஒலித்தது அவன் குரல்!

"நாளைக்கு காலையிலே நீ என் முகத்தில முழிக்கக் கூடாது... இங்கே இருக்கக் கூடாதுன்னு சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்! எனக்கு உன் சுயரூபம் தெரிஞ்சிடிச்சி... நீ எந்த நோக்கத்தோட இங்கே வந்தியோ அது இனிமே நடக்க சான்சே இல்லை...

அதானே... ஃபாதர் இறந்துட்டாருன்ன உடனே உன்னோட ரியாக்ஷனே சரியில்லை யேன்னு யோசிச்சேன்... அப்பப் புரியலை! ஏற்கனவே ஒருத்தி இந்த வீட்டுக்கு வந்து, சினிமா மோகத்துல என் அண்ணன் வாழ்க்கைய சீரழிச்சது போதும்...

நாளைக்கே உன் சம்பளத்தை வாங்கிட்டு நீ கிளம்பலாம்... அம்மா அப்பாவுக்கு இன்னும் உண்மை தெரியாது... உன்னையே அசிங்கப் படுத்திக்க நீ விரும்பமாட்டேன்னு நினைக்கி றேன்... கெட் லாஸ்ட்..."

அவனுடைய குரலில் படிந்திருந்த சீற்றத்தின் துரு, அவள் மீது சடசடவென்று உதிர்ந்தது.

கண்களில் கண்ணீர் அருவி உற்பத்தியாக ஆரம்பிக்க, வேகமாகத் திரும்பி கதவை முகத்திலறைவது போல் சாற்றிவிட்டுச் சென்றான் அவன்.

அவன் போன பிறகு அழ ஆரம்பித்தவள், வெகு நேரமாயிற்று... தன்னைத் தேற்றிக் கொள்ள!

* * * * *

## 12

மறுநாள் காலையில் எழும்போதே, அவளுடைய உடல் முழுவதும் கணகண வென்றிருக்க, உடலும் மனமும் துவண்டு போனதில் காய்ச்சல் வந்திருந்தது.

தேவியும், மஞ்சுவும் அவளைத் தேடி அவுட்ஹவுஸிற்கே வந்து விட்டனர்.

பிறகு, அவளின் உடல்நிலை புரிந்து, தயாகரும் அகிலமும் பிள்ளைகளை கவனித்து பள்ளிக்கு அனுப்பினர்.

வசீகரனும், கிருபாகரனும் எஸ்டேட் ஆபீஸிற் குச் சென்ற பிறகு, மெதுவாக வீட்டிற்கு வந்த தூரிகா, தயாகரிடம் தனியே பேச வேண்டு மென்றாள்.

அகிலத்திடம், தூரிகாவை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போவதாகக் கூறிவிட்டுக் கிளம்பினான் தயாகரன்.

ஒரு பார்க்கின் வெளியே காரை நிறுத்தியவன், அவளிடம் திரும்பினான்.

"என்ன தூரிகா... ஏன் ரொம்ப டல்லா இருக்கிங்க?... உண்மையிலேயே டாக்டர் கிட்டப் போகணுமா? இல்லை..." பரிவுடன் விசாரித் தான்.

"வேண்டாம் சார்... நான் உங்ககிட்ட ஒரு உண்மையை... நான் யாரு...? இங்கே ஏன் வந்தேங்கிறதப் பத்தி சொல்லணும்... நீங்களாவது நான் சொல்லப் போவதைக் கேட்பீங்களா?" கண்ணீருடன் இறைஞ்சினாள்.

"சொல்லும்மா... ஏன் ஏதாவது பிரச்சினையா... உனக்கும் வசீக்கும் நடுவிலே?" சரியாகக் கண்டுபிடித்துக் கேட்டு விட்டான்.

"நான்... நீங்க நினைக்கற மாதிரி ஆசிரமத்துல வளர்ந்த தூரிகா இல்லை... சினிமா நடிகை பாரிஜாதத்தோட மகள்..."

அவள் கூறியதும் திடுக்கிட்டுப் போன தயாகரன், தொடர்ந்து அவள் பேசுவதை உன்னிப்பாய் கவனிக்க ஆரம்பித்தான்.

"நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்ய இங்கே வரலை... நான் யாருங்கிற உண்மை தெரிஞ்சு, மிஸ்டர் வசீகரன் எரிமலையாயிட் டாரு! தினேஷ் எல்லா உண்மைகளையும் சொல்லிட்டாரு போலருக்கு! என்னோட ஒரு பர்த்டே பார்ட்டியில என்னைப் பாத்ததை

முடித்து ஹாஸ்டலிலிருந்து வீட்டிற்கு வந்திருந்தாள்.

திடீரென்று ஒரு நாள் மாலையில், புரொட்யூசர்களையும், புகைப்படக்காரர்களையும் விருந்துக்கு அழைத்திருப்பதாக அவன் கூறிய போது, யோசனையுடன் சம்மதித்தாள் பாரிஜாதம்.

ஆனால், அடுத்தப்படத்தில் தூரிகாவை கதாநாயகியாக்கப் போவதாக பொன்ராஜ் அவளிடம் கூறியபோதுதான், பெரிதும் உடைந்து போனாள் அவள்.

உடனே முழுமையாக எதிர்த்து மறுத்தவள், கணவனிடம் சண்டையிட்டு விட்டு, கோபமாகக் காரை எடுத்துக் கொண்டு ஒரு முடிவுடன் வெளியே சென்றாள்.

ஆனால் போவதற்கு முன், தூரிகாவைத் தனியே அழைத்துப் பேசினாள்.

''தூரிகா! உங்கப்பா நல்லவரில்லைம்மா! இந்த சினி ஃபீல்ட் உனக்கு வேண்டாம்... நான் பட்ட கஷ்டமெல்லாம் போதும்! நீயாவது நிம்மதியா இருக்கணும்! உன் பேருக்கு, இருக்கற சொத்தை எல்லாம் மாத்தி எழுதிடப் போறேன்!... உனக்கு இருபத்தியோரு வயசு முடிஞ்சிட்டா, அதெல்லாம் உன் கைக்கு வந்துடும்... சட்டப்படி உங்கப்பாவை எதிர்த்து, உன் வாழ்க்கைப் பத்தி சுயமா நீ முடிவெடுக்கலாம்... ஆனா அதுக்காக இன்னும் பத்து மாசம் நாம காத்திருக்கணும்... பார்ப்போம்... கடவுள் நமக்கு நல்லதே





செய்வாரு'' என்று கூறிவிட்டு உச்சந்தலையில் முத்தமிட்டு விட்டு சென்றவர் தான்...!

வக்கீல் வீட்டிலிருந்து திரும்பும்போது, அவள் சென்ற கார், லாரியின் மீது மோதி விபத்துக் குள்ளாகிவிட, தலையில் அடிபட்டு உடனே நினைவிழந்து கோமா நிலைக்குப் போய்விட்டார்.

மகளுக்காகவே இதுவரை சுவாசித்த அந்தத் தாய் உணர்விழந்து கிடந்தார்.

டாக்டர்கள் அவரை பரிசோதித்துவிட்டு "ப்ரெயின் ஸ்டெம் டெத்" என்றார்கள்.

பாரிஜாதத்துக்கு மூளைச் சாவு நேர்ந்துவிட, மற்ற அவயங்கள் இறுதி மூச்சுக் காற்றை விட்டபடி துடித்துக் கொண்டிருந்தன.

தூரிகாவிற்குத் தான் பேரிடியாய்...!

இனித் தனக்கென்று யாருமே இல்லாதது போன்ற ஒரு சூனியம், அவளை வியாபித்து இறுகச் செய்தது.

தன் தந்தையே, தன் வாழ்க்கையின் போக்கை மாற்ற நினைப்பதை எண்ணும் போது, பெரும் வேதனையும் துக்கமும் எழுந்தன.

ஆதரவின்றி அழ ஆரம்பித்தவளுக்கு, தன் தாய் முன்பு ஒரு நாள் பேச்சுவாக்கில் கூறியது நினைவிற்கு வந்தது.

மனம் நெகிழ்ந்திருந்த ஒரு பொழுதில், உடல் உறுப்புகளின் தானம் பற்றி அவர் பெருமையாகக் கூறிய வார்த்தைகள், ஞாபகம் வந்தன.

''தூரிகா... நம்ம குடும்பத்துல கூட யாருக்காவது 'ப்ரெயின் டெத்' ஆச்சுன்னா, உடலுறுப்புகளை கட்டாயம் தானம் பண்ணணும்!... எதுக்காகவும் தயங்கக் கூடாது, பயப்படக் கூடாது. மண்ணு திங்கப்போகிற உடம்பு... இல்லைன்னா அக்னிக்கு இரையாகப் போகிற உறுப்புகளை, ஒரு உயிர் வாழ தானம் பண்றது எவ்வளவு பெரிய விஷயம்!

நம்மாலே ஒரு உயிரை உருவாக்க முடியாது.. பிரம்மா மாதிரி பலருக்கு உயிர்ப்பிச்சை தரப்போகிற இந்த தானம், எல்லார் மனசுலயும் ஆழமாய் பதியணும்... எல்லாருக்கும் அந்த உறுதி வரணும்... ஆனா அந்த விழிப்புணர்ச்சி வர ரொம்ப காலம் ஆகலாம்... ஆனா மத்தவங்க செய்யட்டும்னு வேடிக்கை பாக்கறதை விட, நம்மால முடிஞ்சா, அத முயற்சி செஞ்சு பாக்கறதிலே தப்பில்லை...

எதையாவது சாதிக்கணும்... சமூகத்துக்கு ஏதாவது செய்யணும்கிற வெறி வாழும் போது இருக்கறதோட, சாகிறப்பவும் இருந்ததை, இப்பதான் ஒரு பத்திரிகையிலப் படிச்சேன்.... வாழ்க்கையில எதுவுமே நிரந்தரமில்லை. சாவு மட்டும் தான் ஒரு மனிதனுக்கு சாசுவதமானது...

தன்னோட பையன் தசைச் சிதைவு நோயினாலப் பாதிக்கப்பட்டிருக்கிறதாலே அவனோட விருப்பத்தை முன்னிறுத்தி, ஒரு தாய் தன் மகனோட உறுப்புகளை தானம் செய்ய கோர்ட் வரைக்கும் போய்கூட முடியலை... எவ்வளவு மன உறுதி இருந்திருக்கணும் அவங்க ரெண்டு பேருக்கும்.

தன் இழப்பையும் மீறி மத்தவங்களை வாழ வைக்கணும்னு நினைச்ச அவங்களோட மன உறுதி, மனிதநேயம், சேவை மனப்பான்மை இதெல்லாம் நினைச்சா எனக்கு பிரமிப்பா இருக்கு... இதக் கட்டாயம் நிறைவேத்தணும்கிற உறுதியும் வருது!"

அவர் விழிகள் கசிந்தன.

சில கணங்கள் மௌனித்தவர், மீண்டும் தொடர்ந்தார்.

''தான் சாகப் போறோம்னு தெரிஞ்சதும் உடைஞ்சு போகாம, தன்னால இன்னும் பலர் பயன் அடையணும்னு தன் உறுப்புகளை தானமா அளிக்க முன் வந்த அந்த மகனோட உயர்ந்த உள்ளமும், இறவாத மனிதநேயமும், வானளவு உயர்ந்து தெரியற அவரோட பரிணாமமும், மனசிலே ஆணித்தரமா பதிஞ்சிடுச்சி...!

ஒரு பேச்சுக்கு சொல்றேன்... எனக்கோ, உங்க அப்பாவுக்கோ அப்படி ஒரு நிலைமை வந்தா, நீ கட்டாயம் மறக்காம இதைச் செய்யணும்.. செய்வியா?"

அவளுடைய கைகளைப் பிடித்தபடி, கண்களில் ஒருவிதத் தீவிரத்துடன் நெகிழ்ந்து போய் அவர் கேட்டது, சற்று முன்பு நடந்தது போல்...!

மனம் ஒரு முடிவுடன் இறுகியது! இறக்கப் போகும் ஒரு மனிதரால், பலருக்கு உயிர்ப்பிச்சை அளிக்க முடியுமென்பதை நினைத்தாலே அந்த துக்கத்திலும் நெஞ்சம் நெகிழ்ந்து போனது.

இறந்து போனவரின் உயிலில், உடலுறுப்பு தானம் பரிந்துரைக்கப்பட்டிருந்தால் பிரச்சினை இல்லாது போயிருந்திருக்கும்.

அது இல்லாததால் அவள் தன் அப்பாவிடம் பேச, அவர் அதற்கு முதலில் ஒப்புக் கொள்ள மறுத்தார். தன் மனைவி ஊனப்படுத்தப் படுவதை தாங்க முடியாதென்று உறுதியுடன் மறுத்தார்! ஆனால், தன் அம்மாவின் கடைசி ஆசையென்று அவள் வற்புறுத்தி எடுத்துக் கூறிய பிறகு, அரை மனதுடன் ஒத்துக் கொண்டார்... ஒரு நிபந்தனையும் விதித்தார்!

ஆனால் அந்த நிமிடம் மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணமே மேவி இருக்க, அவளும் சம்மதித்தாள்.

பிறகு, மருத்துவர்களிடம் கலந்தாலோசித்து கணவர் என்ற முறையில் அவர் ஒப்புதல் தர,

பாரிஜாதத்தின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டன.

* * * * *

**தா**யின் இறப்பிற்குப் பிறகு வெகுவாய் ஓய்ந்திருந்தவளை, மெதுவாக நச்சரிக்க ஆரம்பித்தார் பொன்ராஜ். தன் நிபந்தனையையும் நினைவுபடுத்தினார்! தன் தாயின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற வேறு வழியின்றி ஒப்புதல் தந்திருந்த தூரிகா, நிலைகுலைந்து போனாள்.

சினிமாவில் நடித்தால் பெரும் பணமும் புகழும் சம்பாதிக்கலாம் என்று அவர் ஆசை காட்டியபோது, அவர் போக்கிலேயே போய்தான் அவரிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்று தூரிகாவிற்கு தோன்றியது.

இருபத்தோரு வயது முடிவதற்கு இன்னும் ஒன்பது மாதங்களே இருந்தன.

அப்போது தான், ஒரு நாள் இது பற்றி தன் நெருங்கிய தோழி அருணாவிடம், அவள் வருத்தத்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய அப்பா ராஜேந்திரன் ஒரு வக்கீல் என்பதால், இருவரும் இது பற்றி அவரிடம் கலந்தாலோசித்தனர்.

அவளுக்கு இருபத்தோரு வயது முடிந்து விட்டால், சொத்தும் அவள் கைக்கு வந்துவிடும்... அவளுடைய தந்தையின் வற்புறுத்தலுக்கும் இணங்க வேண்டியிராது...!

அதையும் மீறி அவர் கட்டாயப்படுத்தினால், சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம்... அதுவரை, எங்காவது பாதுகாப்பான இடத்தில் இருந்துவிட்டுப் பிறகு திரும்பி வந்தால், அவருடைய சினிமா ஆசைக்கு பலியாகாமல் தப்பிவிடலாம் என்று கூறினார் அருணாவின் தந்தை.

அவர் கூறியபடி, ஒரு நாள் தன் துணிகள் சிலவற்றையும், பேங்க் பாஸ் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு, வீட்டிலிருந்து கிளம்பி அவர்கள் வீட்டிற்கு வந்து விட்டாள் தூரிகா!

ஆனால், அன்றிரவே ராஜேந்திரனின் வீட்டிற்கு குடித்துவிட்டு வந்து ரகளை செய்ய ஆரம்பித்தார் பொன்ராஜ்.

தூரிகா இங்கு வரவில்லையென்று கூறி அவரை அனுப்புவதற்குள், அருணாவும் ராஜேந்திரனும் ஓய்ந்து போயினர்.

அப்போது தான், அந்த யோசனையைக் கூறினாள் அருணா.

ராஜேந்திரன் ஒரு குழந்தைகள் காப்பகத்திற்கு வக்கீலாக இலவச சேவை செய்து வருகிறார்.

அங்கு, அருணாவும் அவரும் அடிக்கடி சென்று வருவார்கள்.

அப்போது, அங்கு அறிமுகமானவள் தான், அந்த காப்பகத்திலேயே சிறு வயதிலிருந்து வளர்ந்து வரும் ஒரு பெண்... அவள் பெயரும் தூரிகா தான்!

அவள், போன வாரம் தான் அருணாவைத் தேடி வந்திருந்தாள்.

தான் கம்ப்யூட்டர் படிக்கும் இடத்தில், அங்கு பணிபுரிபவரை விரும்புவதாகவும், ஆனால் ஃபாதர் தனக்கு மூணாறில் ஒரு கவர்னஸ் வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் கூறி யோசனை கேட்டாள்.

அதைப்பற்றி, ராஜேந்திரனும் அருணாவும் தான் ஃபாதரிடம் பேசி தன் காதல் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டாள்.

ஆனால், மறுநாளே சென்று ராஜேந்திரன் அவரிடம் பேசியபோது, ஃபாதர் மறுத்து விட்டார்.

என்ன செய்வதென்று அவர்கள் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், காப்பகத்து தூரிகாவே தன் காதலனுடன் போலீஸ் ஸ்டேஷனில் போய் திருமணம் முடித்துக் கொண்டு, அவர்களைத் தேடி வந்து விட்டாள்.

பிறகு அவர்களிடம் விடைபெற்று அவள் வட இந்தியாவிற்கும் சென்று விட்டாள்.

அப்போது ஃபாதருக்கு பக்கவாதம் தாக்கியதில் திடீரென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருடைய கடிதம் இப்போது ராஜேந்திரனிடம் இருந்தது.

அந்தக் கடிதத்துடன் பாரிஜாதத்தின் மகள் தூரிகாவை மூணாறுக்கு அனுப்ப முடிவு செய்தார் அவர்.

ஃபாதர் ஆண்டனியைப் பொருத்தவரை, காப்பகத்திலிருந்த தூரிகாதான் மூணாறுக்கு செல்வதாக அவர் நினைக்க, ராஜேந்திரன் கொடுத்த கடிதத்துடன் மூணாறுக்குப் பயணித்தாள், நடிகை பாரிஜாதத்தின் மகள் தூரிகா!

* * * * *

## 13

**த**ன் வாழ்க்கையின் மறு பக்கத்தை, கலங்கிய விழிகளுடன் தயாகரனிடம் கூறிய தூரிகாவிற்குள், தாயின் நினைவுகள்!

உள்ளே அழுது, வெளியே ஃப்ளாஷ் லைட்டில் புன்னகைக்கும் சோக தேவதையாய், தாயின் முகம் நினைவடுக்குகளில் மிதந்தது.

மனம் முழுவதும் ஈரம் நிறைந்து, விழியோரங்கள் கசிந்தன.

"எனக்குப் புரியுது தூரிகா... நீ எந்தத் தப்பும் செய்யலைம்மா... யாரையும் ஏமாத்தறதுக்

காகவும் நீ இங்கே வரலை... நான் வசீ கிட்டப் பேசறேன்..." தயாகரன் ஆதரவாகக் கூறினான்.

உடனே பதறினாள் அவள்.

"ஐயோ... வேண்டாம் சார்... எனக்காக நீங்க பேச வேண்டாம்... அவருக்கு தான் நடிப்பு, சினிமா இதெல்லாம் பிடிக்காத விஷயமாச்சே... எனக்கு அவரோட கோபம் புரியுது!"

"அதுதான் தூரிகா பிரச்சினையே! நீ வேற யாரா இருந்தாலும், ஆள் மாறாட்டம் செஞ்சு இங்கே வந்ததுக்கு, அவன் இவ்வளவு ரியாக்ட் பண்ணியிருந்திருக்க மாட்டான்!

அட்லீஸ்ட் நீ யாரு... எதுக்காக இப்படி வந்தேன்னு கேக்கற பொறுமையாவது அவனுக்கு இருந்திருக்கும்... ஆனா நீ ஒரு நடிகையோட மகள்ங்கிற ஒரு வார்த்தை போதுமே... அவனை எரிமலையாக்கறதுக்கு! நான் கூட அமுதாவை மறந்திட்டேன்... ஆனா வசீ இன்னும் அவளை மன்னிக்கலை!

ம்... உங்கம்மா ரொம்ப நல்லவங்களா... புருஷன் சொல்லுக்காக நடிப்பு தொழிலை ஏத்துக்கிட்டு குழந்தைக்காகவே வாழ்ந்திருக்கறது தெரிஞ்சா, அவனே கொஞ்சம் மாறலாம்... பார்ப்போம்...! எல்லாருமே மோசமானவங்க இல்லை... சந்தர்ப்ப சூழ்நிலைகளும் தனி மனித விருப்பமும், சுயநலமும் தான் ஒரு மனுஷனோட குணங்களை நிர்ணயம் பண்ணுதுங்கறது, ஒரு நாள் அவனுக்கும் புரிய வரும்!" யோசனையுடன் கூறினான் தயாகரன்.

"நீங்க சொல்றது நிஜம் தான்... பொதுவா சினிமாத்துறையையும், நடிக நடிகைகளையும் பத்தி, எப்பவுமே ஒரு தப்பான அபிப்ராயமே இருந்திட்டிருக்கு... ஆனா அவங்களும் மனுஷங்கதான்கிறதை எங்கம்மாவைப் பார்த்துதான் நான் புரிஞ்சிகிட்டிருக்கேன்... ஒரு தனி மனிதனுக்கு இருக்கற எல்லா ஆசாபாசங்களும், பிரச்சினைகளும், வேதனைகளும் நிறைஞ்சதுதான் அவங்க வாழ்க்கையும்!

என்ன..? பிரபலமானவங்களா இருக்கறதாலே அவங்களோட ஒவ்வொரு நடவடிக்கையும் கண்காணிக்கப்படுது... வெளிச்சம் போட்டுக் காட்டப்படுது... அவ்வளவுதான்!

திரை வானிலே பல நிறம் காட்டற வானவில் மாதிரி அவங்க இருந்தாலும், அவங்களும் மாயக் கவர்ச்சியில்லாத நிஜ வாழ்க்கையிலே, மத்தவங்களாலே ஆட்டுவிக்கப்படற ஒரு கருவிதான்!

எங்கம்மாவும் கலை விற்பன்னர் சந்தையிலே ஒரு வாசமில்லா மலர்தான்...! அதனாலேயோ என்னவோ, என்னை அந்தக் கனவுத் தொழிற்சாலைக்குள்ளே வர அவங்க அனுமதிக்கலை...

பொய்மைப் பூச்சு இல்லாத அவங்களோட அந்தரங்க வாழ்க்கையில அவங்களும் ஒரு பெண்... அன்புக்காக ஏங்கற ஒரு ஜீவன்... ஒரு தலையாட்டி பொம்மைங்கிறதை உணர்ந்ததாலேயோ என்னவோ, எனக்கும் அந்த நிழல் வாழ்க்கை வாழப் பிடிக்கலை!

தன் சுய விருப்பமில்லாமலே, பிறர் வற்புறுத்தலுக்காக இந்த துறைக்கு வந்தவங்க தான் அதிகம்! எங்கம்மாவும் அப்படித்தான்!

முதல்லே எங்க பாட்டி... அப்புறம் எங்கப்பா! ரெண்டு பேருமே எங்கம்மாவை ஒரு பணம் சம்பாதிச்சிப் போடற மிஷினாத்தான் பயன்படுத்திக்கிட்டாங்க!

தேங்க் காட்... எங்கம்மா என்னை ரொம்ப அருமையா வளர்த்தாங்க...! விடுமுறையில வந்து தங்கி இருக்கிறப்ப ஷூட்டிங்கெல்லாம் ஒத்தி வச்சிட்டு, குடும்பம், உறவுகள், பாசம் இதெல்லாம் தான் பெரிசுன்னு உணர்த்தினாங்க! எப்பவுமே பணத்தை விட மனுஷங்கதான் பெரிசுன்னு சொல்லி சொல்லி வளர்த்தாங்க!"

அவளுடைய இமைகள் நனைந்தன.

தயாகருக்குள், மெல்லிய நெகிழ்ச்சியும் பரிவும் ஊற்றெடுத்தன.

"தூரிகா... எவ்வளவு அற்புதமான பொண்ணும்மா நீ! கட்டாயம், வசீ ஒரு நாள் உன்னைப் புரிஞ்சிப்பான்...அவசரப்படாதே! நீ எங்கேயும் போக வேண்டாம்..." என்றான்.

"இல்லை சார்! நான் முடிவு பண்ணிட்டேன்... எனக்கு உதவி செய்யணும்னு நினைச்சிங்கன்னா, இங்கேயே உங்களுக்குத் தெரிஞ்ச இடத்திலே எனக்கு ஒரு வேலை வாங்கித் தர முடியுமா... ப்ளீஸ்!" தவிப்புடன் கேட்டாள் அவள்.

"ம்... பார்க்கலாம்..." யோசனையுடன் பதிலளித்துவிட்டுச் சென்றான் அவன்.

## உலகிலேயே மிக வயதான மரம்!

உலகிலேயே மிகவும் வயதான மரம் எங்கு உள்ளது தெரியுமா? அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள ஐனோ தேசியக் காட்டில் 5000 ஆண்டுகளுக்கு முந்தைய மரம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இது தான் உலகிலேயே மிக வயதான மரம் என்று கருதப்படுகிறது.

- சாமி.

ஆனால், அன்று மதியமே தயாகரன் அவளைத் தேடி வந்தான்.

"தூரிகா! நம்ம பக்கத்து எஸ்டேட் வில்லியம்ஸ் அங்கிள், அவருக்கு ஒரு கம்பானியன் கேட்டிருந் தார்... வாக்கிங் போகும் போது உன்னை பசங்களோட பாத்திருக்காரு... அந்த காப்பகத்து லயிருந்தே தனக்கும் ஒரு பெண்ணை வேலைக்கு அனுப்ப முடியுமான்னு, அன்னிக்கு வாக்கிங் போனப்ப என்கிட்ட கேட்டார்... இப்பதான் ஞாபகம் வந்தது... அவர்கிட்ட போன்லேயே எல்லாம் பேசிட்டேன்."

"அவர் என்ன சொன்னாரு சார்?" ஆர்வத்துடன் கேட்டாள் தூரிகா.

"நீயே வரேன்னவுடனே ரொம்ப சந்தோஷப்பட்டாரு... உன் குவாலிஃபிகேஷன்ஸ் எல்லாம் சொன்னேன். நீ ஒரு சின்ன மிஸ்டேக் பண்ணிட்டே.. அந்தத் தூரிகா பி.ஏ. எகனா மிக்ஸ்... ஆனா அன்னிக்கு நீ ஹோம் சயின்ஸ் படிச்சதா என்கிட்ட சொன்னியே... நானா இருந்ததால கவனிக்கலை... இதுவே, வசியா இருந்தா அப்பவே கண்டுபிடிச்சிருப்பான்..."

"ப்ச்... சாரி" உதட்டைக் கடித்தபடி சன்னமாக முறுவலித்தாள் அவள்.

"ஓகே.. தேவியும், மஞ்சுவும் வந்து கேட்டா நான் என்ன சொல்றது? அவங்க நீ இல்லாம எப்படி இருக்கப் போறாங்க... பயமாருக்கு!"

"எனக்கும் அதுதான் ரொம்ப வருத்தமாகவும் உறுத்தலாகவும் இருக்கு சார்... எவ்வளவு அற்புதமான குழந்தைங்க ரெண்டு பேரும்... நான் இங்க வந்தப்ப தேவியையும், மஞ்சுவையும் பாத்தவுடனே, 'ரிஜக்டட் சைல்ட்' மாதிரி எனக்கு என்னோட இளமைக் காலம் தான் ஞாபகம் வந்தது...

அம்மா, அப்பா இருந்தும், கவனிக்க ஆளில்லாம நான் ஹாஸ்டல்லே வளர்ந்தேன்... எங்கப்பா மாதிரியே நீங்களும் பொறுப்பில்லாம இருந்தது... உங்க மேல கோபத்தை வரவழைச் சிது... அதுவே அவங்க மேல பாசத்தையும் பரிவையும் அதிகமாக்குச்சு!

இப்போ, அவங்களை விட்டுப் பிரியறதுதான் எனக்கு பெரிய கஷ்டம்! நீங்க தான் அவங்களைப் பாத்துக்கணும்.. பாலையா வறண்டிருந்த என் மனசுக்கு சந்தோஷச் சாரலா வந்தவங்க, அவங்க ரெண்டு பேரும் தான்! அவங்களைப் பிரிஞ்சு எப்படி இருக்கப் போறேன்னு தான் தெரியலை..." அவள் விழிகள் கண்ணீர்த் துளிகளைச் சுமந்தி ருந்தன.

சட்டென்று அவளின் கைகளைப் பற்றிக் கொண்டான் அவன்.


"நான் பாத்துக்கறேன் தூரிகா... எனக்கும் அப்பாங்கிற ஒரு பொறுப்பு வரவேணாமா? நானும் மாறிட்டேம்மா..." ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

"மேடமும் சாரும் இதை எப்படி எடுத்துப் பாங்கன்னு நினைச்சா கவலையா இருக்கு" அவள் தவிப்புடன் கூறினாள்.

"இப்பதான் அம்மாகிட்ட இது பத்திப் பேசினேன்... அவங்களுக்கும் இது ரொம்ப ஷாக்! அவ்வளவு பெரிய பணக்காரப் பொண்ணு, நம்ம வீட்டுக்கு வந்து ஏன்பா இப்படி வேலை செஞ்சு கஷ்டப்படணும்னு வருத்தப்பட்டாங்க!

நீ திரும்பி போகும் நாள் வரை இங்கேயே இருக்கலாமேன்னு சொன்னாங்க... வசியோட முடிவைப் பத்தி சொன்னேன். உடனே தயக்கத்தோட சரின்னுட்டாங்க" குற்றவுணர்வுடன் நிறுத்தி விட்டு கைகளை விலக்கிக் கொண்டான்.

"ஆமாம்... அவர் பேச்சுக்குத்தான் இந்த வீட்டில் அப்பீலே இல்லியே? இந்த வீட்டு மகாராஜாவாச்சே அவர்... ஹூம்... உங்க அப்பா கூட அவர் சொல்றதைத் தானே கேக்கிறாங்க..." ஏதோ நினைவில் கூறினாள். இதழோரங்கள் விரக்தியில் சுழித்தன.



"ஆமாம் தூரிகா! அவன் எதையுமே சரியாத்தான் செய்வான்...

அவன் செய்யற ஒவ்வொரு விஷயத்துக்கும் ஏதாவது ஒரு நியாயமான காரணம் இருக்குமே ... அதான்.."

"ம்...! அவரை விட்டுக் கொடுக்க மாட்டீங்களே...!"

"அவன் என் தம்பிங்கறதை விட எனக்கு ஒரு நல்ல நண்பன் மாதிரிம்மா... அதை விடு! சுலபத்துல யாரையும் யாரும் மாத்த முடியாது.. அவங்கவங்களுக்கு அவங்கவங்களோட பிடிவாதம், கொள்கைகள் பெரிசு...ம்...!

இன்னும் அஞ்சு மாசம் தானே இருக்கு, உனக்கு இருபத்தியோரு வயசு முடிய! அதுவரைக்கும் நீ வில்லியம்ஸ் அங்கிள் வீட்டிலேயே சேஃப்பா இருக்கலாம்" ஆதரவுடன் கூறினான்.

"தேங்க்யூ சார்... நான் இதை மறக்கவே மாட்டேன்..." நெகிழ்ந்து போய் கையெடுத்துக் கும்பிட்டாள் தூரிகா.

"என்னம்மா இது... ஏன் இப்படி சொல்றே! நீ எங்க குடும்பத்துக்கு செஞ்சதை விடவா? நாங்க தான் உனக்கு நிறைய நன்றிக்கடன் பட்டிருக் கோம்! நான் கூட என்னென்னவோ எதிர்பார்த் தேன்...ம்... பாப்போம்! சாயந்திரம் அஞ்சு மணிக்கு ரெடியா இரு தூரிகா... பசங்க வந்தப்புறம் சொல்லிட்டுக் கிளம்பலாம்" வறண்ட குரலில் கூறிவிட்டுச் செல்பவனைப் பார்த்த போது, ஏனோ இதயம் வலித்தது.

இந்த நல்ல மனிதர்களைப் பிரிந்து செல்ல வேண்டுமே என்று நினைக்கும்போதே, அவளைப் பெரிதும் சோர்ந்து போகச் செய்தது.

எல்லாவற்றிற்கும் மேல், வசீகரனின் நினைவுகளை உயிர் நூலில் கோர்த்துப் பாதுகாக்க ஆரம்பித்திருந்த இதயம், தீப்பட்டாற்போல் தகித்தது.

அவனுடைய வெறுப்பால், உள்ளம் சுக்கு நூறாய் சிதறிக் கிடந்தது.

ஒரு பெருமூச்சுடன் மெதுவாகத் தன் பொருட்களை எல்லாம் எடுத்து வைக்க ஆரம்பித்தாள் அவள்.

* * * * *

**அ**ன்று மாலையில், தேவியும் மஞ்சுவும் அவளை காணாமல் தேடி அவுட் ஹவுஸிற்கே வந்து விட்டனர்.

"ஆன்ட்டி... ஏன் நீங்க எங்களைத் தேடி வரலை?" கேட்டபடி கழுத்தை இறுகக் கட்டி முத்தமிட்டாள் மஞ்சு.

மனம் அப்படியே ஆடிப்போய் விட, "மஞ்சு! நான்..." அவள் ஆரம்பிக்கும் போதே தயாகரன் வந்து விட்டான்.

"ஏய்... குட்டிப் பசங்களா? தூரிகா ஆன்ட்டி.. நாளையிலருந்து நம்ம பக்கத்து எஸ்டேட்டுக்கு வேலைக்குப் போறாங்க... கொஞ்ச நாள்தான்... அப்புறம் திரும்பி வந்திடுவாங்க! அது வரைக்கும் நானே உங்களைப் பாத்துப்பேனாம்...! இல்லேன்னா வேற ஒரு ஆன்ட்டி வருவாங்க... நீங்க ரெண்டு பேரும் சமத்தா இருப்பீங்களாம்!"

அவன் முடிப்பதற்குள் ஓடி வந்த தேவியும், அவளுடைய காலை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"ஊஹூம்... எங்களுக்கு வேற ஆன்ட்டி வேணாம்... இவங்க தான் வேணும்... ஆன்ட்டிய நாங்க போக விடமாட்டோம்... ப்ளீஸ்ப்பா! இங்கேயே இருக்கச் சொல்லுங்கப்பா..." மிரட்சியும் கண்ணீருமாய் இரு குழந்தைகளும் கலங்கின.

அப்படியே இருவரையும் சேர்த்து மார்போடு அணைத்துக்கொண்டாள் தூரிகா.

"தேவி... மஞ்சு! நான்... சாயந்திரம் தினமும் பஸ் ஸ்டாப்பிலே உங்களை வந்து பாக்கறேன்... மதியம் லன்ச் டைம்லே முடிஞ்சப்ப ஸ்கூலுக்கே வந்து உங்களோட கொஞ்ச நேரம் இருக்கேன்... சன்டேஸ்லே அப்பாவோட நீங்க அங்கே வரலாம்...ஓகேயா?"

தன் சோகத்தை மறைத்தபடி சிறு முறுவலுடன் கேட்டாள்.

"மாட்டோம்... நீங்க இங்கேதான் இருக்கணும்!" குழந்தைகள் பிடிவாதம் பிடித்தனர். அவளின் பிரிவை எண்ணி, தவிப்புடன் அழ ஆரம்பித்தனர்.

"அப்பா சொன்னா கேட்பீங்களா? மாட்டீங் களா...?" என்றான் தயாகரன்.

"முடியாது..." என்ற குழந்தைகளை உடனே அமைதியுறச் செய்தது...அவன் கேட்ட அடுத்த வார்த்தை!

"வசீ சித்தப்பா தான் தூரிகாவை போகச் சொல்லியிருக்காங்க... இப்ப என்ன சொல்றீங்க?" அவன் கேட்டவுடனேயே இருவரும் பயத்துடன், சரியென்று உடனே தலையசைத்தனர்.

பிறகு அவர்களிடம் பிரியாவிடை பெற்று, அகிலாண்டேசுவரியிடமும், கிருபாகரனிடமும் சொல்லிக் கொண்டு அவள் கிளம்பினாள்.

அனைவரும் இறுகிய முகத்துடன் மௌனமாய் அவளுக்கு விடை கொடுக்க, அவள் கிளம்பும் வரை, வசீகரன் வீட்டிற்கு வரவில்லை.

* * * * *

14

**ப**க்கத்து எஸ்டேட்டிற்கு சென்று அந்த வில்லியம்ஸ் என்பவரைப் பார்க்கும் வரை, தூரிகாவின் மனம் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தது.

ஆனால், கருணை நிரம்பிய

விழிகளோடு பாசத்துடன் அவர் அவளை வரவேற்றபோது, அவளுடைய மனபாரம் சிறிது குறைந்தது போலிருந்தது.

"கம் மை சைல்ட்... எல்லா விஷயமும் தயா சொன்னான்... நீ இங்கே சேஃப்பா இருக்கலாம்... அஞ்சு மாசம் கழிச்சி உன் விருப்பப்படி உங்க வீட்டுக்குப் போகலாம்..'' வாஞ்சையுடன் கூறினார்.

நெகிழ்வுடன் அவர் கூறியபோது, ஏனோ தன் தாயின் நினைவு வந்தது அவளுக்கு!

பிறகு வந்த நாட்களில் வில்லியம்ஸிற்கு உதவியாக பேங்குக்கு செல்வதும், அவரோடு அமர்ந்து கார்ட்ஸ் விளையாடுவதும், புத்தகம் படித்துக் காண்பிப்பதும், வாக்கிங் செல்வதும் எனப் பொழுது மெதுவாகவே சென்றது.

தன்னை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள இந்த வேலைகள் போதாதென்று அவளுக்குத் தோன்றியது.

வில்லியம்ஸிடம் கூறிவிட்டு, பள்ளிக்குச் சென்று மதிய இடைவேளையில் தேவியையும், மஞ்சுவையும் பார்த்து வருவதை, வழக்கமாக்கி கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் மிகவும் மகிழ்ந்து போன குழந்தைகள் இருவரும், தினமும் அவளை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தனர்.

அவர்களை ஏமாற்ற விருப்பமின்றி தினமும் சென்று சாப்பாடு ஊட்டி விட்டு வந்து விடுவாள்.

ஒரு நாள் இரவு, அனைவரும் சாப்பிடும் நேரத்தில் தயாகரன் தேவியிடம் விசாரித்தான்.

''இப்பல்லாம் தூரிகா போனப்புறம் கூட சமத்தா டிபன் பாக்ஸுல சாப்பாடெல்லாம் மிச்சம் வைக்காம சாப்பிடுறீங்களாம்... பாட்டி சொன்னாங்க... வெரி குட்!"

செல்லமாக அவள் தலையைக் கோதியபடி கேட்டான்.

''தூரிகா ஆன்ட்டி டெய்லி ஸ்கூலுக்கு வந்துடறாங்களே! பேசிகிட்டே சாப்பிட்டுடுவோம்.. சில நாள் அவங்களே ஊட்டி விடுவாங்க..."

உற்சாகத்துடன் மஞ்சு கூறியபோது, சட்டென்று விழிகள் சீற்றத்துடன் மின்னத் திரும்பினான் வசீகரன்.

"அவ ஏன் அங்கே வந்து உங்களைப் பாக்கறா? அவ நிழலே உங்க மேலப் படக்கூடாதுன்னு தானே இங்கேயிருந்து அனுப்பினேன்... என்ன தயா இது?" அடிக் குரலில் இரைந்தான்.

''விடுப்பா! திடீர்னு அந்தப் பொண்ணு போனதினாலே, பசங்களுக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும்... கொஞ்ச நாளானா பழகிடும்! அந்தப் பொண்ணும், இன்னும் அஞ்சாறு மாசம்தானே இங்கே இருக்கப் போறா!" மெதுவாகக் கூறினார் கிருபாகரன்.

உடனே அமைதியாகி சாப்பிட ஆரம்பித்தவனுக்குள் கடும் சீற்றம் எரியும் தணலாய்!

இப்போதெல்லாம், தயாகரனே குழந்தைகளிடம் தனி அக்கறை செலுத்தி கவனிக்க ஆரம்பித்திருந்தான்.

அவனுடைய அன்பிலும் அனுசரணையிலும், மெல்ல மெல்ல தூரிகா இல்லாத தனிமை உணர்வை குழந்தைகளும் மறக்க முயற்சித்தனர்.

* * * * *

**அ**ந்த ஞாயிறன்று, காலையில் அவர்களிருவரையும் வாக்கிங் அழைத்துச் சென்றான் தயாகரன்.

"இன்னிக்குதான் நாம தூரிகா ஆன்ட்டியப் பாக்க முடியாது இல்லை?" சிறு வருத்தத்துடன் பேசியபடி இருவரும் நடந்து வந்தனர்.

திடீரென்று, "ஏய்... அங்கே பாரு... ஆன்ட்டி?" உற்சாகக் குரலில் ஆர்ப்பரித்தாள் மஞ்சு!

இருவரும் ஓடிச் செல்ல, தயாகரன் நிமிர்ந்தபோது எதிரில் சுடிதார் அணிந்து ஜாகிங் வந்து கொண்டிருந்தாள் தூரிகா!

"ஹாய் தூரிகா... குட்மார்னிங்!'' தயாகரன் வாழ்த்தியதும், ''தேவி, மஞ்சு வர நேரமாப் பார்த்து இன்னைக்கு லேட்டா கிளம்பி வந்தேன்" என்றபடி இருவரையும் அணைத்துக் கொண்டவள், "ஏய்! குட்டிப் பசங்களா? எப்படி இருக்கீங்க! அப்பாவுக்கும் பாட்டிக்கும் தொந்தரவு குடுக்காம அமைதியா, சமத்தா இருக்கணும்..." என்றாள்.

"ஓ.கே. ஆன்ட்டி! ஆனா சித்தப்பா தான் திட்டினாங்க..." கூறிவிட்டு சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள் மஞ்சு.

''ஏன் சார்...அவர் மாறவே இல்லையா? இல்லை... என் மேல உள்ள கோபம் வசீகரன் சாருக்கு இன்னும் தீரலையா?'' சோர்வுடன் தலையைக் குலுக்கியபடி கேட்டாள் அவள்.

"அதெல்லாம் இல்லைம்மா... ஏய் வாலு... சும்மாயிருக்க மாட்டியா?" மகளை அதட்டினான் அவன்.

"ம்... தம்பிய விட்டுக் கொடுக்க மாட்டீங்களே? அம்மா, அப்பா நல்லாருக்காங்களா?'' ஆவலுடன் விசாரித்தாள்.

"ம்...ஃபைன்...இந்த குட்டீஸ் ரெண்டும் தான், உன்னை நினைச்சி சில சமயங்கள்ல ரொம்ப அடம் பண்ண ஆரம்பிச்சிடுதுங்க... ஆனா நான் இப்பல்லாம் சமாளிக்க கத்துக்கிட்டேன்...'' என்றான்.

''உங்க அன்பும், கவனிப்பும் அவங்களை நிச்சயமா மாத்திடும் சார்! எப்படி இருந்தாலும் இன்னும் அஞ்சு மாசம் கழிச்சு நான் போய் தானே

ஆகணும்... ஆனா... இந்த மூணாறை விட்டுப் போகணும்னு நினைச்சாலே ரொம்பக் கஷ்டமா இருக்கு... ஏதோ ஒரு இனம் புரியாத பாண்டேஜ்!"

அவள் மனதின் கசங்கலில், முகமும் சுருங்கியது.

பிறகு இருவருமே மௌனமாக வர, பிள்ளைகள் இருவரும் அவளிடம் பள்ளிக் கதைகளை ஆர்வத்துடன் சலசலத்தபடி வந்தனர்.

அன்றிரவு, எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் வசீகரனின் நினைவுகள் விடாமல் அவளைத் துரத்தின.

* * * * *

**ம**றுவாரமே, அமெரிக்காவிலிருந்த வில்லியம் ஸின் மகன் ஆலன், தன் மனைவி ஜெசிகாவுடன் மூணாறுக்கு வரப் போவதாக 'இ மெயில்' கொடுத்திருந்தான்.

வில்லியம்ஸ், தன் மகனுடைய வருகைக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு, ஆவலுடன் காத்திருந்தார்.

"தூரிகா! ஜெசிகாவை இங்கே எல்லாருக்கும் அறிமுகப்படுத்தணும்...கல்யாணம் முடிஞ்சி ஒரு வருஷம் ஆகப் போகுது... இப்பதான் முதன் முதல்லே இந்தியாவுக்கு வராங்க! ஒரு கெட்-டு-கெதருக்கு ஏற்பாடு செய்யணும்..." ஆர்வத்துடன் கூறினார்.

''சரி சார்! நான் எல்லா ஏற்பாடுகளையும் கவனிச்சிக்கறேன்.. என்னவெல்லாம் செய்ய ணும்னு மட்டும் சொல்லுங்க..."

''ஒரு நாள் ஈவினிங், பார்ட்டி ஏற்பாடு பண்ணணும்... நம்ம க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் மட்டும் தான்! அதுவே நூறு பேராவது வந்துடும்... எல்லாருக்கும் இன்விடேஷன் அனுப்பணும்... கேட்டரிங் சர்வீஸஸ்க்கு சொல்லணும்...'' வரிசையாகக் கூற ஆரம்பித்தார்.

ஒவ்வொன்றாக அவர் கூறக் கூற, எழுதி வைத்துக் கொண்டாள் அவள்.

அவர் முடித்ததும், "சார்.. நான் ஒரு விஷயம் சொன்ன நீங்க தப்பா நினைக்க மாட்டீங்களே?" தயக்கத்துடன் கேட்டாள் தூரிகா.

"கமான் மை சைல்ட்... நான் எப்போ உன்னை தப்பா நினைச்சிருக்கேன்...? ப்ளீஸ் கேரி ஆன் டியர்...!"

"இல்லை சார்... எல்லாரையும் கூப்பிடணும்னு சொன்னீங்க.. முக்கியமானவங்களை மறந்துட் டீங்க... உங்க எஸ்டேட் பணியாளர்களை, ஆபீஸ் ஸ்டாஃபை விட்டுட்டீங்களே... அவங்க தானே உங்க உயர்வுக்கு முக்கிய காரணம்... அவங்க வாழ்த்து நிச்சயமா உங்க பையனுக்கு வேணும்னு நான் நினைக்கிறேன் சார்... அவங்களுக்கும் ஒரு நாள் விருந்து கொடுக்கலாம்கிறது என்னோட ரிக்வெஸ்ட்" மெதுவாகக் கூறினாள்.

"ஷ்யூர் பேபி... அப்படியே செஞ்சிடலாம்... தேங்க்யூ ஃபார் ரிமெம்பரிங் மீ... வயசாயிடுச்சா... எல்லாமே மறந்துடுது...'' சிறு சலிப்புடன் கூறினார் அவர்.

வயதில் சிறியவளாக இருந்தாலும் அவளுக்கு இருக்கும் பக்குவமும் பெருந்தன்மையும், அவரை வியக்க வைத்தன.

* * * * *

15

**ம**றுவாரமே, ஆலனும், ஜெசிகாவும் வந்து விட்டனர்.

முதன் முதலில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தாலும், வில்லியம்ஸைக் கண்டவுடன் பாசத்துடன் அணைத்து, ''ஹௌ ஆர் யூ பப்பா? ஐ லைக் யூ ஸோ மச்" என்று பிரியத்துடன் அணைத்துக் கொண்ட ஜெசிகாவை, வில்லி யம்ஸ¬க்கு உடனே பிடித்துப் போனது.

தூரிகாவை யாரென்று அறிந்தவுடன் எந்தவிதப் பாகுபாடுமின்றி, ''இந்த நிமிஷத் திலயிருந்து நீங்களும் நானும் குட் ஃப்ரெண்ட்ஸ்" என்று கைப்பிடித்து அவள் கூறிய போது, நெகிழ்ந்து போனாள் தூரிகா.

ஆலனைக் கண்ட மகிழ்ச்சியில், வில்லியம்ஸ் பார்ட்டியை அவர்களுடைய முதல் திருமண நாளன்று நடக்கும்படி ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார்.

உடனே இன்விடேஷன் அடிக்கப்பட்டு, அனைவருக்கும் அனுப்பப்பட்டன.

முன்புற லானிலேயே விழா நடத்துவதென்று

## தங்க சீட்டுக்கட்டு

**பே**ப்பர் மற்றும் பிளாஸ்டிக் சீட்டுக்கட்டுக்கள் இப்போது பிரபலமாக உள்ளது. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மிட்சுபிஷி நிறுவனம் இப்போது தங்கத்தினாலான சீட்டுக்கட்டுக்களை தயாரித்து உள்ளது. இதன் விலை என்ன தெரியுமா? ஏறத்தாழ ரூ.2 லட்சம். ஜப்பானைச் சேர்ந்த சானியோ நிறுவனமும் தங்க சீட்டுக்கட்டு தயாரிக்கப் போவதாக அறிவித்து உள்ளது.

\- சாமி.



முடிவாயிற்று... பஃபே முறையில் சாப்பாடும், கேக் வெட்டும் ஃபங்ஷனும் ஏற்பாடு செய்தனர்.

ஜெசிகா வந்த முதல் நாளே தூரிகாவுடன் இயல்பாகப் பழகியதில், நெருங்கிய தோழியாக நெஞ்சில் இடம் பிடித்துக் கொண்டாள்.

இருவருமாகச் சென்று ஒரு பொட்டிக்கில் அவளுக்கான பார்ட்டி உடையைத் தேர்வு செய்தனர்.

அழகிய வெள்ளை லேஸ் டாப்பும், நீண்டு விரிந்த பெரிய பாவாடையும் அவளுக்கு மிக அழகாய் இருந்தன.

ஜெசிகாவின் வற்புறுத்தலால், அங்கேயே ஒரு டிசைனர் புடவையை வாங்கினாள் தூரிகா.

அழகிய பிங்க் நிறத்தில் ஜர்துசி வொர்க்கும், சீக்வின்ஸ் வேலைப்பாடும் நிறைந்த அந்தப் புடவை, மிக அழகாக இருந்தது.

எல்லா ஏற்பாடுகளும் விரைந்து நடக்க, பார்ட்டி நடக்கப் போகும் நாளும் நெருங்கியது.

பக்கத்து எஸ்டேட் என்பதால், கிருபாகரன் குடும்பத்தினருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

விழா நடக்கப் போகும் நாளை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்த தூரிகா.. வசீகரனுடைய விழித் தீண்டலுக்காக, சிலிர்ப்புடன் தவித்தபடி தனித்திருந்தாள்.

* * * * *

ஒரு நாள், ஜெசிகாவும் அவளும் மாலை நேரத்தில் பேசியபடி மெதுவாக வாக்கிங் சென்று கொண்டிருந்தனர்.

"எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கு தூரி!... இந்த நாட்டு கல்ச்சர் பத்தி நினைச்சா... அதே சமயம் ரொம்பவும் பிடிச்சிருக்கு!" எங்கோ பார்த்தபடி வியந்த முகத்துடன் கூறினாள் ஜெசிகா.

"ஏன்... எங்க கல்ச்சர்லே உங்களுக்கு அப்படி என்ன ஆச்சர்யம்?" இதழ்களில் விரவிப் பரவிய முறுவலுடன் கேட்டாள் தூரிகா!

"எங்க நாட்டுலல்லாம் கல்யாணம்கிறது இங்கே மாதிரி கிடையாது... பழகிப் பாப்போம்...பிடிச்சிருந்தா சேர்ந்து வாழ்வோம்.. இல்லைன்னா பிரிஞ்சிடுவோம். அங்கே நாலைஞ்சு தடவை டிவோர்ஸ் பண்ணவங்கள்லாம் இருக்காங்க! ஆனா இங்கே மட்டும் எப்படி? ஹெள இட் இஸ் பாஸிபிள்? அரேன்ஜ்ட் மேரேஜ் வேற... அம்பதாவது வருஷம் கல்யாண நாள் கொண்டாடுறவங்கள்லாம் இருக்காங்க... டிவோர்ஸ் குறைச்சலா இருக்கு... ஒருவனுக்கு ஒருத்தின்ற அந்த டிசிப்ளின்... ஓ...இட்ஸ் அமேசிங்!" வியப்பினால் விரிந்த விழிகளுடன் பாராட்டினாள்.

"யெஸ் ஜெசிகா! இங்கே எங்க நாட்டில் டிவோர்ஸ் அவ்வளவா கிடையாது... கணவனும், மனைவியும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிட்டு விட்டுக் கொடுத்து அனுசரிச்சிப்போனா, அங்கே பிரிவுங்கற ஒண்ணு வர சான்ஸே இல்லையே!

அதோட எங்க பாரம்பரியம், பண்பாடு இதெல்லாம் மனசிலேயும் உடம்பிலேயும் ஊறி இருக்கறதாலேயோ என்னவோ, அதிலிருந்து முரண்படறவங்க ரொம்பக் குறைச்சல்! வாழ்க்கையில எல்லாத்துக்கும் அடித்தளமா இருக்கறது காதல், நேசம், பரஸ்பர நம்பிக்கை இதெல்லாம் தானே! அது இங்கே ரொம்ப அதிகம்!

முன்பின் பாக்காத் ஒரு ஆண் பெண்ணைக் கூட, கல்யாணம்கிற அந்த மேஜிக் வித்தை, ஒரேயொரு மஞ்சள் கயிறால கட்டிப் போட்டுடும்...!இங்கே அன்புக்கு ஆழமும் அதிகம்... ஆயுளும் அதிகம்... அதோட வீர்யமும் அதிகம்! அதான் இங்கே விவாகரத்துக்கள் குறைச்சலா இருக்கு! ஒருத்தனுக்கு ஒருத்திங்கற அந்த உன்னதமான... உணர்வுபூர்வமான பந்தம் மாறாம இருக்கு!" பெருமை பொங்கக் கூறினாள்.

உடனே அவளுக்குத் தன் தாயின் நினைவும் கூடவே வந்தது.

அவ்வளவு பெரிய நடிகையாக இருந்தும்... புகழின் உச்சிக்கே சென்றும்.. கணவன் கொடுமைக்காரனாக இருந்தும்... தன் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் இழக்காத அவரின் தனித்தன்மை, இன்று பெரும் பிரமிப்பாய்...!

''என்ன யோசனை தூரி?'' அவள் நினைவுகளைக் கலைத்தாள் ஜெசிகா.

''ம்... ஒண்ணுமில்லை! எங்கம்மாவை நினைச்சேன்...'' சிறு விரக்தியுடன் கூறினாள்.

"அவங்க இப்ப எங்க இருக்காங்க?"

''இறந்துட்டாங்க... ஒரு ஆக்சிடெண்ட்...'' பழைய நினைவுகளால் அவள் விழியோரங்களில் சோகத் துளிகள் அரும்பின.

"ஓ! சாரி... சாரி..." என்று அவளை அணைத்து ஆறுதல்படுத்தினாள் ஜெசிகா.

பிறகு மெதுவான குரலில், ''எனக்கும் ஆலனுக்கும் இடையில கூட நிறைய மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்.. மேரேஜ் ஆகி ஒரு வருஷம்தான் ஆகுது! ஆனா, என்னால அவன் கிட்ட இருக்கற சில 'வீக்நெஸ்'ஸை டைஜஸ்ட் பண்ண முடியலை... மே பி... இது என்னோட கடைசி ட்ரிப்பாக் கூட இருக்கலாம்'' வேதனையுடன் கூறினாள்.

"ஜெசிகா...அப்படி எல்லாம் பேசக் கூடாது... வாழ்க்கையோட சக்சஸே பரஸ்பரம் விட்டுக் கொடுக்கறதிலயும், அனுசரிச்சி போய் அன்பு செலுத்தறதிலயும் தான் இருக்கு. ப்ளீஸ்.. பொறுமையா இருங்க... ஆலன் சாரைப் பாத்தா ரொம்ப நல்லவராத்தான் தெரியுது" ஆறுதலாகக் கூறினாள்.

ஆனால், அவனைத் தவறாக கணித்ததின் விளைவு, அவளே பிறகு பெரும் ஆபத்தில் சிக்க நேர்ந்தது.

அன்று, ஆலனுக்கும் ஜெசிகாவிற்கும் முதல் திருமண நாள்!

அழகிய பொக்கேயுடன் அவர்களை வாழ்த்திய தூரிகா, வெள்ளியில் செய்து தங்க முலாம் பூசப்பட்ட ஒரு நகை செட்டை ஜெசிகாவுக்குப் பரிசளித்தாள்.

அவர்கள் இருவருமாக வாங்கிய பார்ட்டி உடைக்கு மேட்சாக தூரிகா தேர்வு செய்திருந்த நகையையே அன்று போடப் போவதாக மகிழ்ச்சியுடன் கூறினாள் ஜெசிகா.

* * * * *

## 16

அன்று காலையிலிருந்தே வீடு அமர்க்களப்பட்டது.

வீட்டின் பின்புறம் ஷாமியானா போடப்பட்டு, எல்லா எஸ்டேட் ஊழியர்களுக்கும், மதியம் கறி விருந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இரவு, நண்பர்களுக்கு பஃபேயும், மெல்லிசையும் நடத்த முடிவு செய்திருந்தனர். முன்புற லானில் சிறு மேடை அலங்காரமும், மரங்களிலெல்லாம் வண்ண சீரியல் விளக்குகளும், தோரணங்களாய் தொங்க விடப்பட்டிருந்தன.

ஒரு புறம் மேசை நாற்காலிகளும், மறுபுறம் ஆடுபவர்களுக்கென ஒரு தளமும் அமைக்கப்பட்டது.

மாலை ஆறு மணிக்கே ஜெசிகாவும் ஆலனும் தயாராகி விட்டனர்.

அப்போது தான் சூரியன் விடைபெற்றுச் சென்றிருக்க, வண்ண விளக்குகளின் ஒளிர்தலிலும் விரவித் தெரிந்த பசுமையிலும், அந்த இடமே ஒரு இந்திர லோகம் போல் காட்சியளித்தது.

தூரிகா, பிங்க் சேலையணிந்து அதற்குப் பொருத்தமான சிறு நகைகளுடன் தயாராகி வந்த போது, ஒரு வானுலக தேவதை போலிருந்தாள்.

அவளைக் கண்டதும் புருவம் உயர்த்தி ஆலன் ஆச்சர்யப்பட, ஓடிவந்து அணைத்து முத்தமிட்டாள் ஜெசிகா.

"வாவ்... யூ ஆர் சோ ப்யூட்டிஃபுல் தூரிகா! யு ஆர் ஏ லவ்லி ஏஞ்சல்!" ரசித்துப் பாராட்டினாள்.

''தேங்க்யூ ஜெசிகா! நீங்களும் தான்... உங்க ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் அற்புதமா இருக்கு! ஹேப்பி மேரீட் லைப்" மென் குரலில் வாழ்த்தினாள்.

பிறகு ஒவ்வொருவராக வர துவங்க, இசை நிகழ்ச்சியும் ஆரம்பித்து விட, வாசலில் வில்லியம்ஸின் அருகில் துணை நின்று, வருபவர்களை வரவேற்கவே அவளுக்குப் பொழுது சரியாக இருந்தது.

சரியாக ஏழு மணிக்கு கிருபாகரன் தன் குடும்பத்துடன் வர, தேவியும் மஞ்சுவும் ஓடி வந்து அவளிடம் நின்று கொண்டனர்.

அகிலமும், கிருபாகரனும் அவளிடம் நலம் விசாரித்து விட்டுச் செல்ல, தயாகரன் அவள் அலங்காரத்தை புகழ்ந்து பாராட்டினான்.

''ம்... வசி சார் வரலையா?'' ஆர்வத்துடன் அவள் கேட்க, ''பின்னாடி வருவான்மா... கிளம்பிட்டிருக்கான்'' என்று கூறிவிட்டு, குழந்தைகளுடன் உள்ளே சென்றான் அவன்.

அரை மணி நேரம் கழித்து, அழகிய நீல நிற பிளேசர் அணிந்து கம்பீரமாக வந்தான் வசீகரன்!

நேரே வில்லியம்ஸிடம் வந்தவன், அவரை கை பிடித்துக் குலுக்கி வாழ்த்திவிட்டு, அவளை மரியாதை நிமித்தமாகக் கூட திரும்பியும் பார்க்காமல் உள்ளே செல்ல, அப்படியே உறைந்து போனாள் தூரிகா.

மனம் முட்களில் சிக்கிய சிறகாய்... கட்டுப் படுத்த முடியாத காற்றாய், சடசடத்தது.

ஏனோ தன் நிழலையும், உயிர்ப்பையும் யாரோ திருடிக் கொண்ட உணர்வு! சட்டென்று ஒரு வித சோகம் அவளை சூழ்ந்து விட அமைதியாய் நின்றிருந்தவளை லானுக்கு அழைத்துச் சென்றார் வில்லியம்ஸ்.

ஜெசிகா அவளை அருகில் அழைக்க, விழா முடியும் வரையில் பரிசுப் பொருட்களை எல்லாம் வாங்கி அடுக்கியவள், காலையிலிருந்து அலைந்ததால் பெரிதும் ஓய்ந்து போனாள்.

ஒவ்வொரு முறை அவளுடைய பார்வை வசிகரனிடம் சென்று மீளும் போதும், அவள் முகம் பெரும் ஏமாற்றத்தையே சுமந்திருந்தது.

மெல்லிசைக்கேற்றபடி, மெல்லிய அசைவுடன் ஜோடியாகப் பலர் ஆட ஆரம்பித்திருந்தனர்.

கடைசியில் ஆலனும் ஜெசிகாவும் ஆட, விழா இனிது முடிய அனைவரும் சாப்பிடச் சென்றனர்.

* * * * *

**தூ**ரிகா, எல்லோரையும் கவனித்து விட்டு தேவி மஞ்சுவுடன் பேசியபடி சாப்பிட ஆரம்பித்தாள்.

வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் விடைபெற்று சென்று விட, மிகவும் நெருங்கிய நட்புடைய சில குடும்பங்கள் மட்டுமே லானில் மீதமிருந்தனர்.

ஜெசிகா ஓய்வெடுக்கச் சென்று விட, தேவி மஞ்சுவை வண்ண மீன்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் சென்றாள் தூரிகா.

வில்லியம்ஸிற்கு பிடித்த ஹாபியே விதவித மான மீன்கள் வளர்ப்பது தான்! பல நேரங்களில் அவள் அங்கு சென்று அமர்ந்து விடுவாள்.

வீட்டின் பின்புறம் ஒரு சிறு கண்ணாடி வீட்டிற்குள் நிறைய மீன் தொட்டிகளும், சுற்றிலும் மண் தொட்டிகளில் வண்ண வண்ண மலர்ச் செடிகளும் நிறைந்திருக்க, மேலே வேயப்பட்டிருந்த ட்ரான்ஸ்ப்ரண்ட் ஓடுகளின் வழியே ஊடுருவும் நிலா வெளிச்சம், மிகவும் அற்புதமாக இருக்கும்!

அவளுடைய மனம் அலைப்புறும் நேரங்க ளில், ஆறுதல் தேடி அவள் வருகின்ற இடம் இது தான்!

பிள்ளைகள் இருவரும் ஆவலுடன் ஒவ்வொரு தொட்டியாகச் சுற்றிப் பார்த்தபடி வந்தனர்.

அவள், மீனுக்கான உணவினைப் போட்டபடி ஒரு புறம் வந்து கொண்டிருந்தபோது, தன் உணர்வுகளுடனே உழன்றபடி திரும்பியவள், திடீரென்று யார் மீதோ இடித்துக் கொண்டாள்.

பதட்டத்துடன் நிமிர்ந்தபோது அங்கு ஒரு மாதிரிப் புன்னகையுடன் ஆலன் நின்றிருந்தான்.

''சார்! ஜெசிகா ரெஸ்ட் எடுக்க போயிருக் காங்க!'' சிறு எச்சரிக்கையுடன் விலகியபடி கூறினாள் அவள்! அவன் குடித்திருப்பது, நடையின் தள்ளாட்டத்தில் தெரிந்தது.

"நான் அவளைப் பார்க்க வரலை... உனக்காக தான் வந்தேன்! ஐ லவ் யூ தூரிகா! நான் ஜெசிகாவைப் பாக்கறதுக்கு முன்னாடி உன்னைப் பார்த்திருந்தேன்னா, நிச்சயமா உன்னைத்தான் கல்யாணம் செஞ்சிட்டிருப்பேன்... ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக்க... எனக்கு கம்பெனி குடு!" குழறிய குரலில் கெஞ்சினான்.

உடனே பதறிப் போய் விலகியவள், "சாரி சார்! நீங்க நினைக்கிற மாதிரிப் பொண்ணு நான் இல்லை.... இந்த மாதிரி என்கிட்டே நீங்க பேசறதே தப்பு... ஜெசிகா உங்களுக்காகக் காத்திட்டிருப்பாங்க....ப்ளீஸ்.. இங்கிருந்து போயிடுங்க!" அடிக்குரலில் எச்சரித்தாள்.

"ஏய்... என்னடி என்கிட்டேயே அட்வைஸ் பண்றியா? எங்க வீட்டில வேலை செய்யறவ நீ.. உன்கிட்ட என்ன கெஞ்சறது? நான் வான்னா நீ வரணும்" என்றபடி அவள் கையைப் பிடித்தான்.

அவள் கையை உதறியபடிப் போராடிய போது தான், தேவியும் மஞ்சுவும் ஓடி வந்தனர்.

"எங்க ஆன்ட்டிய விடுங்க..." கெஞ்சலுடன் தடுத்த இருவரையும், கோபமாகப் பிடித்துத் தள்ளினான் அவன்.

குழந்தைகள் இருவரும் அலங்கோலமாகத் தரையில் கிடக்க, பதட்டத்துடன் ஓடிச்சென்று அவர்களை குனிந்து தூக்கினாள் தூரிகா.

அப்போது அவளைப் பிடித்து அவன் இழுத்தபோது தான் ''சித்தப்பா...'' என்று தேவியின் அலறல் கேட்டது.

* * * * *

**நெ**ஞ்சம் பதறிப்போய் அவள் திரும்ப, அந்த நிமிடம் ஒரு வேங்கையின் லாவகத்துடன் பாய்ந்து வந்த வசிகரன், ஆலனை நையப் புடைத்து எடுத்து விட்டான்.

இரு குழந்தைகளையும் அணைத்தபடி அவள் நடுக்கத்துடன் ஒரு ஓரமாய் நின்றிருக்க, இருவரும் அடித்துக் கொண்ட வேகத்தில், ஒரு மீன் தொட்டி உடைந்து சிதறியது.

அதிலிருந்த தங்க மீன்கள் தரையில் சிதறி, பரிதாபமாக வாய்திறந்து மூச்சுக்குத் தவிக்க, ஓடிச் சென்று ஒவ்வொன்றாய் எடுத்து வேறு தொட்டி களில் போட ஆரம்பித் தாள் தூரிகா.

ஒரு தங்க மீனை எடுத்துப் போடும்போது மீன்களுடன் சேர்ந்து உடைந்து சிதறி இருந்த ஒரு கண்ணாடித் துண்டு, அவள் விரல்களில் நன்றாகக் குத்தி விட்டது.

மெலிதாக ரத்தம் கசிய ஆரம்பித்த விரலை அழுத்திப் பிடித்தபடி, பயத்துடன் நின்றிருந்தாள் அவள்.

அப்போது வசிகரனின் பார்வை, அவளின் வேதனை சுமந்த முகத்தில் ஒரு கணம் அதிகமாகவே பதிந்து விலகியது.

கண்ணாடி சிலீரென்று சிதறிய சப்தம் கேட்டு, முன்புற லானில் இருந்த அனைவருமே அங்கு கூடி விட்டனர்.

தயாகரும், வில்லியம்ஸும் ஓடி வந்து வசிகரனை சமாதானம் செய்தனர்.

அங்கு என்ன நடந்திருக்கும் என்று, அனைவரின் மனங்களும் உடனே ஊகித்துவிட்டன.

கிருபாகரன் வசிகரனை சமாதானப்படுத்த, தனக்குள் குறுகிப் போய் நின்றிருந்தாள் தூரிகா!

''அப்பா! என்னை அடக்காதீங்க! விருப்பமில்லாதவ மனைவியா இருந்தாக்கூட தொடறது தவறுன்னு எனக்கு போதிச்சீங்களே? ஆனா மனைவி கூப்பிடு தூரத்தில் இருந்து இன்னொரு பெண்ணை பலவந்தப்படுத்த நினைக்கிற கேவலமானவன் இவன்! இவனையெல்லாம் சும்மா விடக் கூடாது!'' ரௌத்ரமாய் உறுமினான் வசீகரன்.

தான் செய்த தவறின் அளவு புரிந்தாலும், அதை ஒத்துக் கொள்ள மனமின்றி, இறுமாப்புடன் நின்றிருந்தான் ஆலன்.

தன் செயல்களுக்கான வருத்தமோ, கழிவிரக்கமோ அவனிடம் சிறிதும் தெரியவில்லை.

உடனே முன்னால் வந்த வில்லியம்ஸ், ''சாரிம்மா தூரிகா! இவனை விட்டுடுப்பா வசிகரன்... நான் பாத்துக்கறேன்... எனக்கு போய் இப்படி ஒரு மகன்! ம்... இந்த நேரத்துலயும் என் செல்ல மீனையெல்லாம் காப்பாத்தியிருக்கியே... தேங்க் யூ மை சைல்ட்...'' தூரிகாவை அணைத்தபடி வருத்தம் தெரிவித்தார்.

அவளுடைய உள்ளத்தில் கடந்த புயலின் எதிரொலியாய், உடலிலும் சிறு நடுக்கம் இழையோடியது.

* * * * *

## 17

மற்றவர்களை நிமிர்ந்து பார்க்கவே கூச்சமாகி விட, கலங்கிய விழிகளுடன் மெதுவாக நகர்ந்து வாசல்புறம் சென்றவளைத் தடுத்தது வசீகரனின் ஆணையிடும் குரல்.

"எங்கே போறே? இன்னும் வேற எங்காவது போய் அங்கே ஏதாவது ஆபத்துல மாட்டிக்கவா? எல்லா இடத்துக்கும் என்னால காப்பாத்த வர முடியாது... போய் என் காரில ஏறி உக்காரு! என் கார் டேஷ் போர்டில ஒரு ஃபர்ஸ்ட் எய்ட் கிட் இருக்கும்... முதல்லே கண்ணாடி குத்தின இடத்தைக் க்ளீன் பண்ணிட்டு, பான்ட் எய்ட் எடுத்துப் போடு!'' கோபமாகச் சீறியவன் தயாகரிடம் திரும்பினான்.

''தயா! அவளையும் அம்மாவையும் பசங்களையும் நீ முதல்லே வீட்டுக்கு அழைச்சிட்டுப் போ! நானும் அப்பாவும் பின்னாடி வரோம்'' தூரிகாவையே உறுத்து விழித்தபடிக் கூறினான்.

மழையில் நனைந்த பறவையாய் அவள் நின்றிருந்தாலும், உள்ளே இதயம் துள்ளும் மீனாய் துடித்துக் கொண்டிருந்தது.

அப்போது தான் அங்கு வந்த ஜெசிகா, தூரிகாவைக் கண்டதுமே நிலைமையை உடனே புரிந்து கொண்டாள்.

நேரே அவளிடம் வந்து அவளுடைய கைகளைப் பிடித்தவள், ''சாரி... உனக்கு ஆலனைப் பத்தி வார்ன் பண்ணணும்னு நினைச்சேன் தூரி! பட்... நான் இருக்கும்போதே... இவன் இந்த அளவுக்கு இறங்குவான்னு நிச்சயமா எதிர்பார்க்கலை! ஐ'ம் சோ சாரி!'' நெகிழ்ந்து போய் மன்னிப்புக் கேட்டாள்.

அதற்கு எந்த பதிலும் கூறாமல் மௌனமாக நின்றிருந்த தூரிகாவை அணைத்துக் கொண்டாள்.

"ம்... நீ சொன்ன எல்லா அட்வைஸையும் இந்த ஒரே ஒரு செய்கை தகர்த்திடுச்சி பாத்தியா?... இது எனக்கு பழகிப் போச்சு... ஆனா கண்ணுக்குத் தெரியாம நடக்கறதும் இதுவும் வேற!... எங்களோட இந்த தாம்பத்யம் இனியும் நீடிக்கணும்னு நீ விரும்பறியா?'' அவளிடமே கேட்டாள்.

அந்த நிமிடம், அங்கு பூ விழுந்தால் கூடக் கேட்குமளவு ஒரு அசாத்திய மௌனமும் அமைதியும்!

"தெரியலை ஜெசிகா! எந்த ஒரு விஷயமும் நமக்குன்னு வரப்பதான் அந்தக் கஷ்டமே

## ஐரோப்பிய நாடுகளில் பிரபலமாகி வரும் சைக்கிள் ரிக்ஷா!

ஒரு காலத்தில் இந்தியாவின் பெருநகரங்களான டெல்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் ஐதராபாத்தில் மிகவும் புழக்கத்திலிருந்த வாகனமான சைக்கிள் ரிக்ஷா, இப்போது இந்த நகரங்களில் அவ்வளவாக காணப்படவில்லை. ஆனால் அவை இப்போது பெர்லின், லண்டன், ஆம்ஸ்டர்டாம் போன்ற ஐரோப்பிய நகரங்களில் பிரபலமாகி வருகிறது.

பைபர் கண்ணாடி அல்லது மரத்தால் செய்யப்பட்ட இந்த ரிக்ஷாக்களை மக்கள் குறுகிய தூரப் பயணத்துக்கு

புரியும்பாங்க... அது சரிதான்!...உங்க நிலைமையில நான் இருந்திருந்தா..." சட்டென்று உதட்டைக் கடித்து நிறுத்தினாள்.

"சொல்லு... கமான்!... நீ இருந்திருந்தா..." இறுக்கத்துடன் ஊக்கினாள் ஜெசிகா.

"சத்தியமா நான் அவரை மன்னிக்க மாட்டேன் ஜெசி... கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முன்னாடி ஒருத்தர் எப்படி வேணும்னா இருந்திருக்கலாம்... ஆனா, அப்புறமா தன்னோட கணவனுக்கோ, மனைவிக்கோ, அவங்க கடைசி வரைக்கும் உண்மையா நடந்துக்கணும்... மாரல் வேல்யூஸோட இருக்கணும்... அப்படி வாழ முடியலைன்னா, பிரிஞ்சிடறது தான் சரி!... பை ஜெசிகா..."

மெல்லிய குரலில் கூறினாலும், அவள் குரலில் பெரும் தெளிவும் தீர்க்கமும்!

அவள் கூறுவதையே கேட்டுக் கொண்டிருந்த வசீகரனுக்குள்ளும், சிறு தீப்பொறி!

விழிகள் அவளையே ஆச்சர்யத்துடன் ஊடுருவ, அந்தப் பார்வையில் அவளின் புதிய பரிமாணத்தைக் கண்ட பெரும் ஆராய்ச்சியும், சிறு சலனமும் தெரிந்தன.

பிறகு தளர்ந்த நடையுடன் அவள் காருக்குச் செல்ல, தயாவும், குழந்தைகளும், அகிலமும் பின் தொடர்ந்தனர்.

மீதமிருந்த அனைவரும் கனத்த மனதுடன் விடைபெற, உள்ளே சென்று தூரிகாவின் பொருட்களுடன், தன்னுடையவற்றையும் பேக் செய்ய ஆரம்பித்தாள் ஜெசிகா.

தூரிகாவின் பெட்டியையும், ஏர் பேகையும் கிருபாகரனிடம் அளித்தவள், தன் பொருட்களுடன் கிளம்ப, வில்லியம்ஸ் தாங்க முடியாமல் அழுது விட்டார்.

"என் பையனை மன்னிச்சிடும்மான்னு சொல்ல அருவருப்பா இருக்கு ஜெசி... இவன் இப்படிப்பட்டவன்னு எனக்கு சத்தியமா தெரியாதும்மா! ஆனா, உனக்கு ஒரு தகப்பன் இந்த மூணாறிலே இருக்கான்றதை மட்டும் மறந்துடாதே..."

கலங்கிய விழிகளுடன் அவர் கேட்க, அவருடைய தோளில் ஆதரவாய் சாய்ந்து கொண்டாள் ஜெசிகா!

"ஷ்யூர் பப்பா! நான் சென்னைக்கு தானே போறேன்... அங்கே கலாஷேத்ராவில சேர்ந்து டான்ஸ் கத்துக்கணும்னு ரொம்ப நாளா ஒரு ஆசை! நான் நிச்சயமா ஒரு நாள் திரும்பி வருவேன்... உங்களைப் பாக்க!" கூறிவிட்டு வசீகரனிடம் திரும்பினாள்.

"மிஸ்டர் வசீகரன்! எனக்கு ஒரு டாக்ஸி அரேன்ஜ் பண்ணித் தர முடியுமா? நான் போடிநாயக்கனூர் போகணும்..." நேர்ப் பார்வையுடன் கேட்டாள்.

"இன்னிக்கு நைட் தனியாக போக வேண்டாம்.. நாளைக்கு காலையில எங்க காரிலேயே உங்களை அனுப்பறேன்... அங்கேயிருந்து டிரெயின்லே நீங்க சென்னைக்கு போகலாம். உங்களுக்கு சம்மதம்னா இன்னிக்கு நைட் மட்டும் எங்க வீட்டில நீங்க தங்கிக்கலாம்..." நட்புணர்வுடன் கூறினான் வசீகரன்.

"தேங்க் யூ... ஸீ யூ பப்பா!" என்று வில்லியம்ஸின் கன்னத்தில் முத்தமிட்டவள், அவர்களுடன் காரில் கிளம்பி விட்டாள்.

ஆலன், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவமானத்துடன் ஓடிச் சென்று தன் அறைக் கதவை சாத்தியவன் தான்! வெளியே வரவேயில்லை!

* * * * *

**சீ**ல்வர் ராக் எஸ்டேட்டிற்கு வந்த ஜெசிகாவை, அங்கு தூரிகா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

பிறகு, இருவரும் அவளுடைய அவுட்



பயன்படுத்துகின்றனர். ஏனெனில் அவைகளை குறுகிய சந்து பொந்துகளில் ஓட்டிச் செல்ல முடிகிறது. அதனால் முக்கிய சாலைகளில் நெரிசல் குறைந்து மக்கள் தாராளமாகப் போய் வர முடிகிறது.

சுற்றுச்சூழலை மாசு படுத்தாத இந்த வாகனங்கள் இப்போது விஞ்ஞானிகளின் அபிமானத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

- விஜீ, சென்னை.

ஹவுசிலேயே தங்கிக் கொள்ள, ஒரு விதத் தர்ம சங்கடமான அமைதி இருவரிடமும்!

ஆனால், வசீகரன் தான் தன் அறையில் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தான்.

காலையில் எழுந்ததும், அனைவரிடமும் விடைபெற்று ஜெசிகா கிளம்பினாள்.

தன் தோழி அருணாவின் முகவரியையும், தொலைபேசி எண்ணையும் அவளிடம் கொடுத்து, எந்த உதவி வேண்டுமென்றாலும் கேட்கும்படிக் கூறி அனுப்பி வைத்தாள் தூரிகா.

மறுநாள் முழுவதுமே, அவள் மனம் ஏனோ கனத்துப் போயிருந்தது.

தனக்கு மட்டும் ஏன் படிப்படியாக இத்தனை தொடர் சோதனைகள் என்று, இதயம் விம்மியது.

ஒரு பெண் என்பவள், இந்த நாட்டில் சுதந்திரமாகவே வாழ முடியாதா என்ற ஏக்கமும், சுசப்புணர்வும் வந்தன.

'யாருடைய கைகள் உனக்கு உதவாமல் போனாலும், உன்னுடைய தன்னம்பிக்கை உனக்கு நிச்சயமாக உதவும்...'

யாரோ கூறிய வரிகள் அந்த நிமிடம் நினைவு வந்து, நெஞ்சுக்குள் தன்னம்பிக்கையை செதுக்கின. நம் மனதிலுள்ள தேவையில்லாத சஞ்சலங்களையும், பயத்தையும் ஜெயித்தாலே, எல்லாவற்றையும் வெற்றி கொள்ளலாம் என்று புரிந்தது!

ஆழ்ந்து யோசித்த போது, 'தொட்டாலே சுருண்டு கொள்ள நாம் தொட்டாற் சுருங்கி இல்லையே... எந்த பிரச்சினைகளுமே தீர்வில்லாமல் உருவாவதில்லையே' என்ற நிஜத்தையும்... எதையும், தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர் கொள்ளும் குணம்... தோல்விக்கு இரையாகாத மனம்... விமர்சனங்களைக் கண்டு துவளாத உறுதி... இவையே வாழ்க்கையில் வெற்றிக்கான படிகள் என்பதையும் அனுபவத்தில் உணர்ந்து கொண்டாள் அவள்.

ஒருவருடைய மனம் பண்படுவதற்குத் தான் எவ்வளவு சோதனைகள் தேவைப்படுகின்றன என்று நினைக்கும்போதே, தன் மனதில் காய்ப்பேறியிருந்த அனுபவ வடுக்களின் அளவு தெரிந்தது.

* * * * *

**வா**ழ்க்கை, தார்ச் சாலையில் பயணிக்கும் வண்டிச் சக்கரமாய் தடையின்றிச் சுழல ஆரம்பித்தது.

அவ்வளவு நடந்த பிறகும், வசீகரன் இன்றுவரை தூரிகாவிடம் இயல்பாக ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

ஆனால், இப்போதெல்லாம் அகிலம் அவளிடம் ஒரு தாயைப் போன்ற கருணையுடன் பழக ஆரம்பித்திருந்தார்.

தேவியும், மஞ்சுவும் அவள் திரும்பி வந்துவிட்ட சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருக்க, தயாகரன் பெரும் நிம்மதியுடனிருந்தான்.

எப்போதாவது, காலை வேளைகளில் வாக்கிங் செல்லும் போது எதிர்ப்படும் போதெல்லாம், யாரோ முன்பின் தெரியாத ஒருவரைப் பார்ப்பது போலவே இப்போதும் வசீகரனின் விழிகள் அவளை உரசின.

பொருளின்றி ஊடுருவும் பார்வையும், உணர்ச்சிகளைத் துடைத்த முகமும், அவளைப் பெரிதும் அலைப்புறச் செய்தன.

அன்று தனக்கு ஒரு ஆபத்து என்றவுடனே பதறிப் போய் ஓடிவந்து ஆபத்பாந்தவனாய் அவன் உதவியதும், இன்று தன்னை யாரென்றே தெரியாதவன் போல ஒரு அலட்சியப் பார்வையுடன் அவன் விலகிச் செல்வதும், ஒன்றுக்கொன்று வெகுவாய் முரண்படுவதாய்!

அவனுடைய மௌனமும் இறுக்கமும், அவளைக் கொன்றன.

* * * * *

## 18

**எ**ப்போதும் போல், பழகிய பாதையில் பயணிக்கும் நதியைப் போல் நாட்கள் சீராய் விரைய, ஜெசிகாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

இப்போது, அவள் கலாஷேத்ராவிலேயே தங்கி நடனம் பயில்வதாக எழுதியிருந்தாள்.

அருணாவும், தானும் நல்ல தோழிகளாகி விட்டதையும் மறக்காமல் அதில் குறிப்பிட்டிருந்தாள்.

அன்றிரவு, அருணாவுக்கும் ஜெசிகாவுக்கும் இரு கடிதங்கள் எழுதி, எடுத்து வைத்தாள் தூரிகா.

உறக்கம் வராமல் 'ஹென்றி க்ளே லிண்ட்கிரென்'னின் புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்த போது, வாழ்க்கையை சந்தோஷமாய் வாழ அவர் கூறிய வழிகள் அவளை மிகவும் கவர்ந்தன.

மறுநாள் காலையில் பிள்ளைகளை தயார் செய்து பள்ளிக்கு அனுப்புவதற்காக அழைத்துக் கொண்டு வந்தபோது, முருகன் பதட்டத்துடன் ஓடி வந்தான்.

ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த கிருபாகரனிடம், "ஐயா! அந்த அம்மா வந்திருக்காங்கய்யா..." திக்கித் திணறிக் கூறினான்.

"யாருடா!... அந்தம்மான்னா...?" அகிலம் சுவாரசியமின்றிக் கேட்டார்.

"அதாம்மா... நம்ம தயா அய்யாவோட சம்சாரம்..." அவன் கூறும் போதே திக்கென்று

அனைவரும் நிமிர்ந்த போது, அந்த ஹாலுக்குள் மெதுவாக நுழைந்தாள் நடிகை சதுர்முகி!

தூரிகா தவிப்புடன் குழந்தைகளின் புறம் திரும்ப, அவர்களின் முகமும் குழப்பத்திலிருந்தன.

நேரே கிருபாகரனிடம் வந்த சதுர்முகி, "என்னை மன்னிச்சிடுங்க மாமா! அத்தை, நீங்களும்தான்...! எனக்கு வாழ்க்கைன்னா என்னங்கறது புரிஞ்சிடுச்சி... இப்ப நான் திருந்தி வந்திருக்கேன்...! என்னை பெரிய மனசு பண்ணி நீங்க எல்லாரும் ஏத்துக்கணும்..." அழுகையுடன் கையெடுத்துக் கும்பிட்டபடி, இருவரின் காலிலும் விழுந்தாள்.

இருவரும் விதிர்த்துப் போய் பின்புறம் நகர, அந்த நிமிடம் அங்கு வந்த தயாகரன், சிலையெனச் சமைந்து ஒரு கணம் நின்று விட்டான்.

அவனைக் கண்டதும், அருகில் ஓடி வந்து சரிந்து அமர்ந்து கால்களைக் கட்டிக் கொண்டு, கண்ணீர் விட ஆரம்பித்தாள் அவள்.

என்ன செய்வதென்றே புரியாமல் அனைவரும் மௌனத்துடன் தவித்தபடி நின்றிருக்க, அதை அசரீரியாய் கலைத்தது வசீகரனுடைய குரல்!

"இது உங்க சினிமா புரொடக்ஷன் ஸ்டுடியோ இல்லை... ஆக்டிங்கெல்லாம் போதும்...! எழுந்திரிங்க... இதுக்கெல்லாம் மயங்கி நாங்க ஏமாற மாட்டோம்... இத்தனை வருஷமா வராத ஒரு பாசமும் அக்கறையும் இப்ப எங்கேயிருந்து வந்தது?" குத்தலாக கேட்டான்.

"வசீ... இது அவளுக்கும் தயாவுக்கும் இடையில பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை... எதுவாயிருந்தாலும் அவனே முடிவு பண்ணட்டும்..." அழுத்தமாகக் கூறிவிட்டு, கண்ணசைவில் மனைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்றார் கிருபாகரன்.

தான் இங்கு அதிகப்படியோ என்ற உணர்வில் தூரிகா திரும்ப, அப்போதுதான் நிமிர்ந்து அவள் புறம் திரும்பினாள் சதுர்முகி!

தன் இரு குழந்தைகளிடமும் பார்வை செல்ல, விம்மலுடன் ஓடிவந்து இருவரையும் கட்டிக் கொண்டாள்.

தேவியும், மஞ்சுவும் புரியாமல் பயத்துடன் விலகி தூரிகாவிடம் ஒன்ற, நிமிர்ந்த சதுர்முகியின் விழிகள், அவளிடமே கூர்மையுடன் பதிந்தன.

"நீ... பாரிஜாதம் அக்காவோட பொண்ணு தூரிகா இல்லை...?" குரல் வியப்புடன் முணுமுணுத்தது.

சட்டென்று இறுகிக் கறுத்துப் போனது, வசீகரனின் முகம்!

ஆனால், அவள் பதில் கூறாமல் மௌனமாக நின்றிருந்தாள்.

வசீகரனின் குரல், ஏளனத்துடன் இடைமறித்தது.

"ஏன்... ரெண்டு பேரும் ஒரே ஜாதின்னு பாசம் பொத்துக்கிட்டு வருதா?"

"தம்பி... உங்க கோபம் நியாயமானது தான்... ஆனா நான் இப்ப எல்லாத்தையும் உணர்ந்து திருந்தி வந்திருக்கேன்... உங்க உணர்வுகள் எனக்குப் புரியுது... ஆனா இது செத்த பாம்பு... வலிக்காது..." விரக்தியுடன் கூறினாள்.

"பாம்புன்னு ஒத்துக்கிட்டதுக்கு நன்றி! தேவி... மஞ்சு... ஸ்கூலுக்கு லேட்டாயிடுச்சு... கிளம்புங்க..." அதட்டலாகக் கூறியபடி தூரிகாவை புருவம் நெறித்து கூர்மையுடன் ஏறிட்டான் அவன்.

உடனே, பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வெளியேறியவளின் மனதில், ஒரு வித இறுக்கம் சூழ்ந்தது.

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டுத் திரும்பி வந்த போது, அந்த ஹால் வெறிச்சோடியிருந்தது.

சற்று முன்பு ஒரு போர்க்களத்தை சந்தித்த அறிகுறியே அங்கு இல்லை.

யோசனையுடன் பிள்ளைகளின் அறைக்குச் சென்று எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டுத் தன் அறைக்கு வந்தாள் அவள்.

* * * * *

**ம**தியம் சாப்பாடு எடுத்துக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பியபோதுதான், தயாகரன் அவளை அழைத்தான்.

"தூரிகா! இன்னிக்கு லன்ச்சை அமுதா எடுத்துட்டுப் போகட்டும்! பசங்க அவளோடப் பழகணும் இல்லையா?" சிறிது தடுமாற்றத்துடன் கூறினான்.

"சரி சார்" என்று அவள் தலையாட்டும்போதே, அமுதா அங்கு வந்துவிட்டாள்.

வேகமாக வந்து அவளை அணைத்துக் கொண்டவள், "பாரிஜாதம் அக்கா இறந்தப்ப உன்னைப் பாத்தது! அப்பப்ப உன்னைப் பத்தி அக்கா சொல்லுவாங்க... உனக்கு நடிப்புல இன்ட்ரெஸ்ட் இல்லைன்னு அவங்க ஒரு காலத்துல சொன்னப்ப, நான் அதிசயப் பட்டிருக்கேன்... இப்ப புரியுது! ம்... அக்கா இறந்தப்புறம் நீ எங்கேயோ வேலை தேடிட்டு போயிட்டதா பேசிகிட்டாங்க...! ஆனா உன்னை இங்கே இந்த நிலைமையிலப் பாப்பேன்னு நான் எதிர்பார்க்கலை!" பெருமூச்சுடன் பேசிக் கொண்டே போனாள்.

"நான் உங்களை ஒரு தடவை பாத்திருக்கேன்... என்னோட பர்த்டே பார்ட்டியிலே!" மெதுவாகக் கூறினாள் அவள்.

"ஆமாம்... அப்போ பார்த்தப்பதான் இவ்வளவு

அழகான பொண்ணை வச்சுக்கிட்டு சினிஃபீல்டில நல்லா வந்திடலாமேன்னு சொன்னேன்...! பாரிஜாதம் அக்கா சொன்னாங்க உனக்கு அதில விருப்பமில்லைன்னு...! அப்புறம் தெரிஞ்சு கிட்டேன்... அக்காவுக்கும் அதில சம்மதமில் லைன்னு!"

சட்டென்று, ஒரு கோபக் குரல் அவர்களை இடையிட்டது.

"உங்க சுய:சரிதையெல்லாம் போதும்... அங்கே தேவியும், மஞ்சுவும் பசியோட காத்திட்டிருப்பாங்க! யாருக்காவது சாப்பாடு எடுத்துட்டுப் போற உத்தேசம் இருக்கா இல்லையா?" நக்கலாகக் கேட்டான் அப்போது தான் வீட்டிற்கு சாப்பிட வந்த வசீகரன்!

உடனே தவிப்புடன் திரும்பினான் தயாகரன்.

"நான் தான் வசி... இன்னிக்கு அமுதா லன்ச் எடுத்துட்டுப் போகட்டும்னு சொன்னேன்... இல்லை, நாங்க ரெண்டு பேருமே போறோம்..."

உடனே அவளை அழைத்துக் கொண்டு காரில் கிளம்பிச் சென்றான்.

அப்போதுதான் அந்த நிஜம் அவளை உலுக்கியது...! அமுதா வந்துவிட்டதால் இனி தனக்கு அங்கு வேலை இருக்குமாவென்ற கேள்வியும், எதிர்காலம் பற்றிய பயமும் நெருடலாய்!

அன்று மாலையில் குழந்தைகளை அழைத் துவர அவள் கிளம்பும் போது, அமுதாவும் உடன் வருவதாக கூறிக் கிளம்பி வந்தாள்.

வாசலுக்கு சென்றதும் தூரிகாவின் கைகளைப் பற்றியவள், "எனக்கு நீ இங்கே இருக்கறது பெரிய தெம்பாயிருக்கு தூரிகா! ரொம்ப தேங்க்ஸ்... தயா எல்லாம் சொன்னாரு! உன்னாலத்தான் பசங்க ரொம்ப டிசிப்ளினா ஒபீடியண்டா மாறினாங் கன்னு... சந்தோஷமா இருந்தது..." உள்ளார்ந்த பிரியத்துடன் கூறினாள்.

பிறகு அவள் தன் கதையைக் கூறிய பிறகுதான் உண்மையே புரிந்தது.

"நான் நம்பர் ஒன் கதாநாயகியா புகழின் உச்சியிலே இருந்தப்ப, எங்க மாமா நல்லக்கண்ணு என்னை நல்லா பயன்படுத்திக்கிட்டாரு! இப்ப மார்க்கெட் குறைஞ்சு டல்லான உடனே நிறைய பணத்தை சுருட்டிக்கிட்டு, வேற ஒரு புது ஹீரோயினுக்கு மேனேஜராய் போயிட்டாரு...! வாழ்க்கையோட நிஜம் எல்லாம் அப்பதான் புரிஞ்சுது!

அக்கா, அம்மா கேரக்டர்லே நடிக்க விருப்பமில்லை... ஷூட்டிங் இல்லாதப்ப ரெண்டு மாசம் தனிமையில ஆழமா யோசிச்சப்ப தான், நான் செஞ்ச பெரிய தப்பு உறைச்சிது...

வாழ்க்கையில நாம எதிர்பார்க்கற புகழ், பணம் எல்லாம் கிடைச்சப்புறம், நாம நடந்து வந்த பாதையை திரும்பிப் பாக்கறப்பதான், அதுக்காக நாம எவ்வளவு இழந்திருக்கோம்னு புரியும்... அதுமாதிரிதான் எனக்கு புகழ், பணம், வெள்ளித்திரை, மேடை இதிலெல்லாம் ஒரு வெறுப்பு வர ஆரம்பிச்சது...

ஒரு தனி மனுஷியா இருந்து சுய விருப்பத் தோட சினிமாவில நடிச்சி புகழோட உச்சிக்குப் போயிருந்தா அது தப்பில்லை...

நம்மை நம்பி கல்யாணம் செஞ்சிக் கிட்ட ஒரு நல்ல மனுஷரை ஏமாத்திட்டு, குழந்தைகளையும் புறக்கணிச்சிட்டு, சுயநலமா என்னோட ஆசையை மட்டுமே பெரிசா நினைச்சி வந்திட்ட மேன்னு உறுத்த ஆரம்பிச்சது.

காலம் தாழ்த்தி வந்த உறுத் தல்னாலும் அது என்னை ரொம் பவே பாதிச்சுது.

பலரோட மனசைக் காயப் படுத்தி, சுயநலமா நான் பெற்ற வெற்றியிதுன்னு என் மனசே என்னை சவுக்கால அடிச்சுது...

என் கணவருக்கும் குழந்தை களுக்கும் எவ்வளவு பெரிய துரோகம் செஞ்சிருக்கேங்கிறதை, தாமதமாதான் உணர ஆரம்பிச் சேன்! இந்த ரெண்டு மாசமும் குற்றவுணர்ச்சியில அழுது அழுதே என் பாவங்களைக் கரைச்சேன்... அப்புறம் தான் கிளம்பி வந்தேன்.



என் சொத்தையெல்லாம் தயாகிட்ட ஒப்படைச்சிட்டு அவர் கால்லே விழுந்து அழுதேன்! அவர் என்னை மன்னிச்சிட்டாரு! இனிமே எனக்கு வேற என்ன வேணும்...! இந்த நிமிஷமே செத்தாலும் பரவாயில்லைன்னு தோணுது!" நெகிழ்ச்சியுடன் முடித்தாள்.

"ப்ச்... ஏன் இப்படி சொல்றீங்க? வாழ ஆரம்பிக்கறப்பவே சாவைப் பத்திப் பேசக் கூடாது! தேவியும், மஞ்சுவும் நான் போனப்புறம் எப்படி மேனேஜ் பண்ணிப்பாங்களோன்னு, பயந்துட்டிருந்தேன்... நல்ல வேளை நீங்க வந்ததும் தான் நிம்மதியாச்சு" சிறு முறுவலுடன் தூரிகா கூறினாள்.

"தயா எல்லாம் சொன்னாரு தூரி! நீ எவ்வளவு நாள் வேணாலும் இங்கே இருக்கலாம்... நான் வந்துட்டேன்னு பயப்பட வேண்டிய அவசி யமில்லை... உனக்கு இருபத்தியோரு வயசு முடிய இன்னும் மூணு மாசம் இருக்கறதா கேள்விப்பட்டேன்!"

"ம்... அப்பா ரொம்ப டார்ச்சர் பண்ணதாலே

தான், இந்த வேலைக்கு வந்தேன்... மூணு மாசம் கழிச்சிப் போயிடுவேன்..." அவள் குரல் பெரிதும் கம்மியிருந்தது.

அன்று சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்து விட்ட வசீகரனின் செவிகளில் இருவரின் பேச்சும் ஸ்பஷ்டமாய் விழுந்தது.

* * * * *

## 19

இருவரும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீடு வந்தபோது, வாசலிலேயே வசீகரன் நின்றிருந்தான்.

தூரிகாவை "ஒரு நிமிஷம்" என்று தடுத்து நிறுத்தியவன், அமுதாவும் குழந்தைகளும் உள்ளே சென்றதும், அவளிடம் திரும்பினான்.

"இருபத்தியோரு வயசு முடிஞ்சவுடனே முதிர்ச்சி வந்திடும்கிறதெல்லாம் சும்மா! முப்பது வயசிலயும் தயாவுக்கு வரலையே... உன்கிட்டயும் அதை எதிர்பார்க்க முடியாதுதான்...! ஆனா மத்தவங்களோட பழகுறப்ப, நம்ம ஒரிஜினா லிட்டியத் தொலைச்சிடாம இருக்கப் பழகணும்... நம்ம கொள்கைகள், முடிவுகள்லே உறுதியா இருக்கணும்..."

எங்கோ பார்த்தபடி புரியாத குரலில் கூறிவிட்டு, தோளைக் குலுக்கியபடி வெளியே சென்று விட்டான்.

அவன் நின்று பேசிய நிமிடங்கள் மனதில் பெரும் சிலிர்ப்பை தந்தன. அந்த நிமிடமே உயரப் பறந்து விண்ணைத் தொட விருப்பம் வந்தது.

ஆனால், தான் இங்கிருந்து சென்னைக்கு சென்றேயாக வேண்டிய சூழ்நிலையும் புரிந்தபோது, இதயம் இரும்புக் குண்டாய் கனத்தது.

மறுநாள் காலையில் அவளை தனியே சந்தித்துப் பேசினான் தயாகரன்.

"தூரிகா! சில நேரங்கள்லே நம்ம பிடிவாதம், கோபம் இதெல்லாம் பசங்களுக்காக விட்டுத்தரத் தான் வேண்டியிருக்கு... அமுதா வந்ததிலே வசீ ரொம்பக் கோபமா இருக்கான்... எனக்காக இல்லாவிட்டாலும் குழந்தைகளுக்கு ஒரு அம்மா இருக்கறதுதானே நல்லது! நீ என்ன நினைப்பியோன்னு சங்கடமா இருந்தது... ஆலன் விஷயத்துலே நீ சொன்னதை என்னாலே மறக்க முடியலை..."

"இதுல நான் சொல்றதுக்கு எதுவுமே இல்லை சார்... ஆலன் விஷயத்துல நான் சொன்னது என்னோட பர்சனல் ஒபீனியன்... ஆனா இது உங்க வாழ்க்கை...! நீங்க தான் முடிவு பண்ணணும்... திருந்தி வந்தவங்களை மன்னிக்கறதுதான் சரி... ஆலன் தான் செஞ்சது தப்புங்கறதையும் உணரலை... திருத்திக்கவும் முயற்சிக்கலை!

தப்பு செஞ்சவங்களை, அதை உணர்ந்து திருந்தினவங்களை, மன்னிக்க மறுக்கறது கூட குற்றம்தான்னு எதிலயோ படிச்சிருக்கேன்...!

'மனம் கசிந்த வருத்தமும், உணர்தலும், குற்றத்தின் முனையை முறித்து நல்ல புரிந்து கொள்ளலுக்கு வழி வகுக்கும்! வறியோர் மன்னிக்க மாட்டார்கள்... மன்னிப்பு என்பது தீரமானவர்களின் கொள்கையாகும்' அப்படின்னு மகாத்மா காந்தியே சொல்லியிருக்காரு!" சிறு முறுவலுடன் முடித்தாள்.

"தேங்க்யூ தூரிகா... நீயாவது என்னைப் புரிஞ்சிக்கிட்டியே?" உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் கூறினான் அவன்.

* * * * *

**பி**றகு வந்த நாட்கள், அவளுக்கும் அமுதாவுக்குமிடையே சிறிது நெருக்கத்தை ஏற்படுத்தின.

தன் மன உணர்வுகளை அவள் தூரிகாவுடன் பகிர்ந்து கொண்ட போதும், தேவி, மஞ்சுவின் மீது அவள் காட்டிய அன்பும் அரவணைப்பும், அது வெறும் சினிமா நடிப்பில்லை... ஆழமானவை, உள்ளத்திலிருந்து வருபவை என்பது புரிந்தது.

ஒரு நாளிரவு தயாகரன், வசீகரனின் அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

"வசீ! நான் உன்னோடக் கொஞ்சம் பேசணும்!" என்றான் தயக்கத்துடன்.

பிசினஸ் இண்டியாவைப் படுத்தபடி புரட்டிக் கொண்டிருந்தவன், புருவங்கள் யோசனையில் நெறிய எழுந்து அமர்ந்தான்.

"தூரிகாவைப் பத்தி முதல்லே சொல்லணும்..." என்றவன், அவள் தன்னிடம் கூறியவற்றை, ஆதியோடந்தமாக மெல்லிய குரலில் கூற ஆரம்பித்தான்.

இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்த வசீகரனுக்குள், எதுவோ பிறழ்வது போல்...!

ஒரு நல்ல வளர்ப்பின் பாரம்பரியத்தின்... உள்-வெளி அனுபவங்களை உணரச் செய்தன... அவளுடைய வாழ்க்கைப் பற்றிய குறிப்புகள்.

தயாகரன் முடித்த பிறகு, மனதிற்குள் பெரும் யோசனை மின்னல் தெறிக்க, அதைத் தொடர்ந்து வரும் இடியாய், தன் தவறான கணிப்புகளின் அணிவகுப்பு!

பிறகு அவன் "வசீ, உனக்கு என் மேல கோபம் இருக்கும்.. அமுதா பண்ணினது மன்னிக்க முடியாத தப்புதான்... துரோகம்தான்! ஆனா, திருந்தி வந்தவங்க திரும்பவும் தவறான பாதையிலப் போக மாட்டாங்க! அப்படி வந்தவங்களை மன்னிக்கிறதுதானே மனித குணம்!

வசீ... எனக்கும் வேற கல்யாணம், குடும்ப வாழ்க்கை இதிலெல்லாம் ஈடுபாடு இல்லை... தேவியையும், மஞ்சுவையும் நல்லபடியா கவனிச்சு வளர்த்து, நம்ம குடும்ப கௌரவத்தை காப்பாத்தறேன்னு அவ வாக்கு கொடுத்திருக்கா! என்ன பண்றது... வாழ்க்கையே ஃபுல் ஆஃப் காம்ப்ரமைஸஸ்தானே!" சிறு விரக்தி இழையோடக் கேட்டான்.

வசீகரனுடைய முகத்தில், கடும் யோசனையும், இறுக்கமும்!

மெதுவாக எழுந்தவன் தயாவின் அருகில் வந்து, அவன் தோளைப் பற்றி அணைத்துக் கொண்டான்.

"எனக்கும் அப்பா, அம்மாவுக்கும் வேற என்ன வேணும் தயா? நீ சந்தோஷமா இருக்கணும்... அவ்வளவுதான்! இதுதான் உனக்கு சந்தோஷம், நிம்மதின்னு நீ தீர்மானிச்சிட்டின்னா, அப்புறம் இதுலே நாங்க சொல்றதுக்கு என்ன இருக்கு! ஆல் தி பெஸ்ட்" உலர்ந்த குரலில் வாழ்த்தினான்.

"தேங்க்யூ வசீ... நீ என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கும்... பொறுமையா நான் சொன்னதைக் கேட்டதுக்கும்...!" உணர்ச்சியுடன் கூறினான் தயாகரன்.

அன்றிரவே, அவன் அகிலத்திடமும் கிருபாகரனிடமும் பேச, அவர்களும் மகனுடைய விருப்பத்திற்கு மகிழ்ச்சியுடன் உடன்பட்டனர்.

* * * * *

**நா**ட்கள் மாதங்களாய் விரைய, அமுதா அந்த வீட்டினரிடம் பாசத்துடன் பழகிய விதமும், குழந்தைகளிடம் காட்டிய நிஜமான அக்கறையும் அனைவருக்கும் அவளின் மீது ஒரு வித நன்மதிப்பைப் பெற்றுத் தர, பெரிதும் காரணமாயிருந்தன.

திரையுலகின் மாயக் கவர்ச்சி புரிந்து, அதைக் களைந்து மனிதாபிமானம் சுமந்தவளாய் அவள் மாறியிருப்பதை, அனைவருமே புரிந்து கொண்டனர்.

ஆனால் வசீகரன் மட்டும், அவளிடம் ஒதுக்கமாகவே இருந்தான்.

ஒரு நாள், அதிகாலையில் எப்போதும் போல் வாக்கிங் சென்று கொண்டிருந்தாள் தூரிகா.

பச்சைப் பசேலென்ற பட்டு விரிப்பாய் தெரிந்த புல்வெளி அவள் மனதிலும் பசுமையைப் படரச் செய்வதாய்...!

சூரியனிடம் கொஞ்சம் கதிர்களும், வண்டிடம் கொஞ்சம் அயல் மகரந்தச் சேர்க்கையும் கடன் வாங்கி, மொட்டுக்கள் மலர ஆரம்பித்திருந்தன.

வசீகரனின் நினைவுடன், மனதிற்குப் பிடித்த பாடலொன்று இதழ்களில் கசிய, மெதுவாக முணுமுணுத்தபடி நடந்து கொண்டிருந்தாள் அவள்.

சட்டென்று, மழைத் துளிகள் தூறலாய் விழ ஆரம்பித்தன.

வானம், பூமிக் காதலிக்கு உயிர் நீரைப் பரிசளிக்க, அருகிலிருந்த ஒரு பேருந்து நிறுத்தக் குடையின் கீழ் ஒதுங்கி நின்றாள் தூரிகா!

மழை வலுக்கத் துவங்க, திடீரென்று தாளம் தப்பாத பாடலாய், செவிகளில் பதிந்தது, அந்த காலடியோசை!

திரும்பினால், வசீகரன் தான் மழையில் நனைந்தபடி வேகமாக ஜாகிங் வந்து கொண்டிருந்தான்.

அந்த இடத்தைத் தவிர வேறு நிழலிடம் இல்லாததால் அவள் தவிக்க, வேகமாக ஓடிவந்து, அந்த இடத்தில் அவளருகில் நின்று கொண்டான்.

பிறகு இயல்பாக திரும்பியவன், அவள் விழிகள் அவனிடம் பதியாமல் மழைத் தாரைகளோடு காதலுடன் உரையாடுவதை, பக்க வாட்டிலிருந்து ஒரு கணம் வாசித்து ரசித்தான்.

திடீரென்று பலமாக வீசிய காற்றில், அவளுடைய துப்பட்டா வேகமாக அலைபாய்ந்து அவன் கன்னத்தை சாமரமாய் தீண்டியபோது, ஏனோ வெண்பனி முகம் வருடிய உணர்வு!

உடனே அதை உணர்ந்து, கன்னங்களில் இரு இளஞ் சிவப்பு ட்யூலிப் மலர்கள் மலர, வெட்கத்துடன் அவனை ஏறிட்டபடி அவள் தன் துப்பட்டாவை வேகமாக இழுத்து சரி செய்தாள்.

மறுகணமே, இறுகிய முகத்துடன் கொட்டிய மழையில் இறங்கி, ஜாகிங்கைத் தொடர ஆரம்பித்தான் அவன்.

அவன் விலகிச் சென்ற மறுநொடியே, இருளாகியது அவள் உலகம்! அவன் காதல் மட்டும் இல்லையென்றால், தன் உலகமே இயங்காமல் நின்று விடுமென்பதும் புரிந்தது.

ஒரு பெருமூச்சுடன் தானும் மழையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள் தூரிகா.

* * * * *

## 20

**ம**றுநாள் காலையில் எழும் போதே, உடல் அனலாய் கொதித்தது தூரிகாவிற்கு!

முதல் நாள், மழையில் நனைந்ததுதான் காரணமென்று புரிந்தது.

குழந்தைகளுக்கும் காய்ச்சல் வந்து விட்டால் என்ன செய்வதென்ற பயத்துடன் முருகனிடம் சொல்லியனுப்பினாள்.

உடனே, அமுதா பதட்டத்துடன் அவளைத் தேடி வந்துவிட்டாள்.

நெற்றியில் கை வைத்துப் பார்த்தவள்,

"இவ்வளவு சூடு இருக்கு... என்னாச்சு தூரிகா... திடீர்னு இப்படி ஃபீவர் வந்திருக்கு!" அக்கறையுடன் விசாரித்தாள்.

"நேத்து மழையில நனைஞ்சிட்டேன்... அதான்! சாரிக்கா... பசங்களை இன்னிக்கு மட்டும் நீங்க பாத்துக்கறீங்களா?"

"அதென்ன இன்னிக்கு மட்டும்? நீ நாலஞ்சு நாள் நல்லா ரெஸ்ட் எடுத்துக்க... நான் எல்லாம் பாத்துக்கறேன்" என்றவள், உடனே டாக்டரை வரவழைத்து விட்டாள்.

டாக்டர் பார்த்துவிட்டு, மூன்று நாட்களுக்கு மாத்திரைகள் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அன்று முழுவதும், தன் அறையிலேயே தனிமைச் சிறையிலிருந்தாள் அவள்.

மறுநாளும், அமுதா அவளை ஓய்வெடுக்கும்படிக் கட்டளையிட்டு விட, அதை மறுக்க முடியாமல் படுத்திருந்தவளுக்கு, உண்மையிலேயே மனமும் உடலும் பெரிதும் ஓய்ந்து போயிருந்தன.

அன்றிரவு சாப்பிடும்போது தேவியிடம் மெதுவாக விசாரித்தான் வசீகரன் "எங்கே உங்க... டீச்சர்... இந்த வீட்டு ஜோன் ஆஃப் ஆர்க்...! ஆளையே காணோம்...?" கிண்டலாகக் கேட்டான்.

முதலில் விழித்தவள், "தூரிகா ஆன்ட்டியா சித்தப்பா? அவங்களுக்கு ஃபீவர்... அதான் எங்களுக்கும் வந்துடுமோன்னு இங்கே வரதேயில்லை... அவுட் ஹவுசிலேயே இருக்காங்க!" சோகமாகக் கூறினாள்.

"ஓ!" யோசனையுடன் சாப்பிட ஆரம்பித்தான் அவன்.

"அவங்களும் உங்களுக்கு ஒரு பெயர் வெச்சிருக்காங்களே... ஹிட்லர்னு" மஞ்சு கூற உடனே சிரித்துவிட்டான்.

மூன்று நாட்களாக தூரிகா அவுட் ஹவுசை விட்டு வெளியில் வரவேயில்லை.

அன்றுதான், மெதுவாக எழுந்து வெளியில் வந்து விடியலை ரசித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது, காலை ஜாகிங்கை முடித்துவிட்டு வந்த வசீகரனின் பார்வை, அவள் மேல் மென்மையாய் பதிந்தது.

சூரியனின் நேசக் கிரணங்களால் இதழ் விரித்துக் கொண்டிருந்த மலர்களைப் போல், அவள் முகமும் உடனே மலர்ந்தது.

சற்றே வெளிறிய முகத்துடன், எந்தவித ஒப்பனையின்றியும், ஓவியப் பாவையாய் நின்றிருந்த அவள் தோற்றம், அவன் மனதில் கனமாகப் பதிந்தது.

அவள் உடல்நிலையைப் பற்றி விசாரிக்கலாமா என்று ஒரு கணம் தயங்கியவன், உடனே தன் நடையை விரைவுப்படுத்தி உள்ளே சென்றான்.

அமுதா அவளை நன்றாக கவனித்துக் கொள்ள, இரண்டு நாட்களில் தூரிகா இயல்பாகிவிட்டாள்.

அன்று காலையில், தலை குளித்துவிட்டு தேவியையும், மஞ்சுவையும் பார்ப்பதற்காக அவர்களின் அறைக்குச் சென்றாள் அவள்.

வாசல்புறம் ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பியவளின் முகம், திடீரென்று பரவிய அதிர்ச்சியில், ரத்தப் பசையின்றி வெளுத்தது.

அங்கு, அவளுடைய தந்தை பொன்ராஜ் நின்றிருந்தார்.

அவருடைய விழிகளில் பெரும் வன்மமும், கோபமும் தெரிய, வாட்ச்மேனும், முருகனும் அவரைத் தடுக்க முயற்சி செய்வது புரிந்தது.

கால்கள் தரையில் வேரோடி விட, அசையாமல் சிலையைப் போல் நின்றிருந்தவளின் முகம், மிரட்சியும் பயமுமாய்...!

உரத்த குரலில் அவர் கத்த, சப்தம் கேட்டு

## அதிசயிக்க வைக்கு...

ஆளில்லாத ரெயில்வே லெவல் கிராசிங்குகளில் விபத்தைத் தடுக்கும் தானியங்கி சிக்னல் கருவியை ஒரு கூலித் தொழிலாளி கண்டுபிடித்திருக்கிறார் என்றால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில் ஜெயபாண்டியன் என்ற இவர்



## ..லித் தொழிலாளி

மூடை தூக்கும் தொழிலாளியாக இருந்து கொண்டே புதிது புதிதாக கருவிகளை உருவாக்கி அதைக் காட்சிப்படுத்தி எல்லோரையும் வியக்க வைப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

மதுரை செல்லூர் மேலத்தோப்பில் வசிக்கும் படிப்பறிவில்லாத இந்த இளைஞருக்கு விஞ்ஞான மூளை அமைந்திருப்பது ஆச்சரியம்தான். தானியங்கி மண் அள்ளும் இயந்திரம், வெள்ளத்திலிருந்து மக்களைக் காக்கும் நவீன படகு, எளிதாக முறுக்குப் பிழியும் இயந்திரம் என புதிது புதிதாக எதையாவது செய்து கொண்டிருக்கிறார்.

தற்போது ரெயில்வே துறை அதிகாரிகளின் பார்வையில், குறிப்பிட்ட தொலைவில் ரெயில் வரும் போது, ரெயில்வேகேட் தானாகவே அலார ஒலியெழுப்பியபடி மூடிக் கொள்ளும் நுட்பமான கருவியை சிறிய அளவில் செய்து இயக்கிக் காட்டினார்.

- ரா.கல்யாணசுந்தரம், அனுப்பானடி.

அனைவரும் ஹாலில் கூடி விட்டனர்.

அவர், கிருபாகரனைப் பார்த்து சப்தம் போட ஆரம்பித்தார்.

"யாரு வீட்டுப் பொண்ணை யாருய்யா வேலைக்கு வச்சிருக்கறது? ஒரு வரைமுறை இல்லை...? எங்க வீட்டில செல்லமா வளர்ந்த கோமேஸ்வரி... எங்க வீட்டு இளவரசி... அவளை ஒரு கவர்னஸா இங்கே வேலையில சேர்த்தது யாருன்னு எனக்கு இப்ப தெரிஞ்சாகணும்...!" உரத்தக் குரலில் ஆர்ப்பாட்டம் செய்தார்.

உடனே முன்னால் வந்த தயாகரன்,"ஆமாம்... நாங்கதான் வேலைக்கு சேர்த்தோம்... ஆனா, அப்ப தூரிகா உங்க பொண்ணுன்னு எங்களுக்குத் தெரியாது... இப்ப தெரிஞ்சப்புறம், அவளும் எங்க வீட்டில ஒருத்தியாயிட்டா! உங்களால அவளை ஒண்ணும் செய்ய முடியாது" அழுத்தமான குரலில் கூறினான்.

அவளுடைய வாடிய முகத்தையும் பயந்த தோற்றத்தையும் கண்ட அமுதா, அவளருகில் வந்து ஆறுதலாகக் கைப்பிடித்தபடி நின்று கொண்டாள்.

மென் சோகக் கவிதையாய்... அவள் விழிகள் சோர்ந்திருந்தன.

"என் பொண்ணை இங்கே அடைச்சி வச்சுகிட்டு... உங்களுக்கெல்லாம் இவ்வளவு தைரியமா! நான் இப்பவே அவளை இங்கேயிருந்து அழைச்சிட்டுப் போகப் போறேன்..." ஆவேசத்துடன் அவளருகில் சென்றார் பொன்ராஜ்.

"தூரிகா... நீ என்னம்மா சொல்றே?" கிருபாகரன் அவளிடம் கேட்டார்.

"அவ என்ன சொல்றது? நான் சொல்றேன்... தூரிகா இந்த வீட்டை விட்டு வர மாட்டா..."

அப்போதுதான் உள்ளே நுழைந்த வசீகரனின் இரும்புக் குரல், அனைவரையும் அசைவின்றிக் கட்டிப்போட்டது. உலகமே சுற்றாமல் நின்ற உணர்வு தூரிகாவிற்கு!

வேகமாகத் திரும்பிய பொன்ராஜ், "அதச் சொல்ல நீ யாரு...?" சீற்றத்துடன் கேட்டார்.

"ம்.. அதை உங்க பொண்ணுகிட்டேதான் நீங்க கேக்கணும்..." ஆழமான குரலில் அழுத்தமாகக் கூறினான் அவன்.

"அதெல்லாம் அவசியமில்லை... நான் அவளை அழைச்சிட்டுப் போகாம இங்கிருந்து போக மாட்டேன்..."

"அதை என்னால அனுமதிக்க முடியாது..."

"அவ என் பொண்ணு...!"

"அது முன்னாடி... இப்ப அவ என் காதலி!... என் உயிரிலேயும், மனசுலயும் ஒண்ணாக் கலந்தவ... நான் அவளைக் கல்யாணம் பண்ணிக் கப் போறவன்!" வசீகரன் இடியாய் முழங்கினான்.

நம்ப முடியாத கனவொன்று நிஜமானது போல், உயிர்த்த சிலையாய் திரும்பிய தூரிகாவின் விழிகளில், சிறு கலக்கமும் பெரும் வியப்பும்...!

கால்கள் பூமியில் வேரோட, உறைந்து நின்றிருந்தாள்.

* * * * *

**21**

அந்த நிமிடம், வசீகரனும் அவளையே தான் நோக்கிக் கொண்டிருந்தான்...

இதுவரை சொல்லாத காதலை, அவன் விழிகள் அப்போது கூறின. பாறை என்று நினைத்திருந்த தன் மனதில் பலமாய் வேரூன்றி கிளை பரப்பி நின்றவளை, வியப்புடன் அவை வருடின.

மார்கழி மாதத்து பனிக் கால விடியலில் இசைக்கும் திருப்பாவையாய்... அவன் குரல்

**தீ**பாவளிக்கு பலகாரம் செய்ய மாவுகள் சலிக்கும் போது சல்லடையில் ஒரு சின்ன ஸ்பூனை போட்டுக் கொண்டு சலித்தால். சல்லடையின் அசைவில் ஸ்பூன் புரண்டு புரண்டு மாவிலுள்ள சிறுசிறு கட்டிகளை உடைத்து சமப்படுத்திவிடும். நாம் கையால் தேய்ப்பதோ. தட்டுவதோ அவசியமில்லை.

**- எஸ்.பட்டம்மாள். திருவரங்கம்.**

அவளைக் கலைத்தது.

"தூரிகா.. இப்ப நீ தான் சொல்லணும்... உன் அப்பாவோட போய், ஒரு நிழல் வாழ்க்கை வாழப் போறியா? இல்லை... என் மனைவியா, இங்கே என் கூடவே இருக்கப் போறியா? நீ தான் முடிவெடுக்கணும்!" மிருதுவான குரலில் கேட்டான் வசீகரன்.

மெதுவாக நிமிர்ந்து அவனை நோக்கியபோது, அவன் வார்த்தைகளால் கோடி முறை உயிர்த்தது மனது!

அவனுடைய மென்மையான முதல் பார்வையால், முன்பு வர்ணங்களற்றிருந்த வாழ்க்கை, இப்போது ஒளிப் பிழம்பாய் மாறியதைப் போன்ற ஒரு மாய உணர்வு!

ஒரு முடிவுடனும், நடையில் உறுதியுடனும் மெல்ல அவனருகில் சென்றாள் தூரிகா!

"நான் இங்கே தான் இருக்கப் போறேன்ப்பா... என் உயிரே இவர்தான்னு நான் முடிவு பண்ணி என் மனசைப் பறி கொடுத்து ரொம்ப நாளாச்சு! என்னால உங்களோட வர முடியாது...!" ஒரு வித நிமிர்வுடன் கூறினாள்.

மறுநொடியே அவளுடைய கைகளை இறுகப் பற்றியவன், "அதான் அவ முடிவைத் தெளிவா சொல்லிட்டாளே... நீங்க கிளம்பலாம்" ஆணையிடும் குரலில் அறிவித்தான்.

"அவ சொன்னா நான் போயிடுவேனா? அவளுக்கு இன்னும் இருபத்தியோரு வயசு முடியலை.. அது வரைக்கும் என் பேச்சைத்தான் கேட்டாகணும்!"

"அப்பா... ஒரு நிமிஷம்..." தூரிகாவின் குரல் இடைமறித்தது.

"நான் ஜூன் மாசம் தான் பிறந்தேன்... ஆனா, என்னை ஸ்கூல்லே சேர்க்கறதுக்காக மார்ச் மாசம் பிறந்ததா தேதி மாத்தி சேர்த்தது, நீங்களும் அம்மாவும் தான்! ரெக்கார்டு படி மூணு நாள் முன்னாடிதான் எனக்கு இருபத்தியோரு வயசு முடிஞ்சுது!" வெற்றிப் புன்னகையுடன் கூறினாள்.

அவள் கைகளை இறுகப்பற்றியிருந்த அவனது விரல்கள், அவளுக்குள் பெரும் பலம் தருவதாய்!

இதை எதிர்பார்க்காத பொன்ராஜின் முகம், உடனே கறுத்துச் சிறுத்தது.

"இந்த ஆலன் தம்பி கொஞ்சம் முன்னாடி வந்து சொல்லிட்டு ஃபாரீனுக்கு போயிருக்கக் கூடாது? நீ எப்படி வாழ்ந்துடறேன்னு நான் பாத்துடறேன்..."

அவர் கத்திவிட்டுச் செல்லும் போதே, அவளுடைய உடலில் சிறு நடுக்கம் ஓடியது.

அதை உணர்ந்தவன் போல், சட்டென்று அவள் தோளைப் பிடித்து ஆதரவாக அணைத்துக் கொண்டான் வசீகரன்.

ஆனால், சட்டென்று விலகினாள் அவள்.

"வசீ... இது உண்மைதானா? இல்லை... எங்கப்பாவை விரட்டறதுக்காக நீங்க சொன்ன பொய்யா?" பெரும் அலைப்புறுதலுடன் கேட்டவளின் விழிகளில், சோக அரும்பாய் இரு கண்ணீர்த் துளிகள்!

நம்ப முடியாத ஆச்சர்யத்துடன் அனைத்தையும் கவனித்த மொத்த குடும்பமும், அவனுடைய உதடுகள் உதிர்க்கப் போகும் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தன.

அவன் முகம், ஒரு கணம் கசங்கி இறுகியது.

ஆனால், மறு கணமே அவளுடைய கண்ணீரை, நறுமணம் மிகுந்த பன்னீராய் மாற்ற, மனம் ஏங்கியது.

* * * * *

**ச**ட்டென்று அவளருகில் வந்தவன், தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை உடனே கழற்றி, அவள் கழுத்தில் அணிவித்தான்.

வார்த்தைகளால் சொல்லாத பல உணர்வுகளை, அந்த ஒற்றைச் செயல் அனைவருக்கும் தெரிவித்தது.

இனி, வாழ்க்கை முழுவதும் அவனுடைய அன்புச்சாரல் தன்னை இனிதாய் நனையச் செய்யுமென்று, அந்தக் கணமே தூரிகாவிற்குப் புரிந்தது.

மறு நிமிடமே, அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று தன் தாய் தந்தையின் எதிரில் நிறுத்தினான் வசீகரன்.

"அப்பா... அம்மா... நான் இவளை உயிருக்கு உயிரா விரும்பறேன்... எனக்கு மனைவின்னு ஒருத்தி வரதா இருந்தா அது இவ மட்டும் தான்... எனக்கு உங்க சம்மதம் வேணும்!" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கேட்டான்.

அவன் தலையில் கை வைத்து கிருபாகரன் மனம் நிறைந்த புன்னகையுடன் ஆசீர்வதிக்க, தூரிகாவை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார் அகிலம்.

தயாகரும், அமுதாவும் ஆச்சர்யத்திலும் மகிழ்ச்சிக் கடலிலும் தத்தளிக்க, தேவியும் மஞ்சுவும் ஓடி வந்து தூரிகை இருபுறமும் கட்டிக் கொண்டனர்.

**( முற்றும் )**